# தமிழ் இலக்கணத் தொகுப்பு




நீற்றா பற்றிமாகரன்

(த

A, BS

# இலக்கணத் தொகுப்பு

(தமிழிலக்கணத்தை இலகுவாகக் கற்பதற்கு உதவும் நூல்)

திருமதி றீற்றா பற்றிமாகரன்
BA, BSc, Post Graduate Diploma (Social Policy) Post graduate Diploma (Housing)

தமிழ் ஆசிரியை எழுத்தாளர் ஊடகவியலாளர்

2008

# இலக்கணத் தொகுப்பு

© ஆசிரியர்: றீற்றா பற்றிமாகரன்
முதல் பதிப்பு : ஆவணி 2008
வெளியீடு:
அலன் பற்றிமாகரன்
39 நேப்பியர் றோட்
ஒக்ஸ்வேர்ட்

அதபுஎ: ISBN: 978-81-89708-21-4

Thamil Ilakkanath Thokuppu
© Author: Rita Fatimaharan
First Edition: August 2008
Published by:
Allen Fatimaharan
39 Napier road
Oxford OX4 3HZ

விற்பனை உரிமை:
காந்தளகம், 68, அண்ணா சாலை, சென்னை 600 002.
தொலைப்பேசி: 044 – 28513096
மின்னஞ்சல் : tamilnool@tamilnool.com
மின்னம்பலம்: www.tamilnool.com, www.thevaaram.org

விலை: இந்திய ரூ. 50

அச்சிடல் தயாரிப்பு: காந்தளகம், 68, அண்ணா சாலை,
சென்னை 600 002.

Printed by: Kaanthalakam, 68 Anna Saalai, Chennai 600002

# பதிப்புரை

ஆசிரியை திருமதி றீற்றா பற்றிமாகரன் எழுதியுள்ள இலக்கணத் தொகுப்பு என்னும் இந்நூல் தமிழ் இலக்கணம் கற்பவர்க்கு மட்டுமல்லாது தமிழை இலக்கணத்துடன் பேசுவதற்கு எழுதுவதற்கு விரும்பும் அனைவருக்கும் உதவக் கூடிய ஒரு நூலாக உள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் பொருளியல் புவியியல் கலைமாணிப் பட்டதாரியாகிய இவர் கொழும்பு புனித யோசப் கல்லூரி தமிழகத்தின் ஆசியக் குடும்ப ஆய்வுகள் மற்றும் சேவைகள் மையம் இலண்டன் பிளம்ஸ்டட் அருண உதயம் தமிழ்ப்பாடசாலை ஒக்ஸ்வேர்ட் தமிழ்க் கல்வி கலைகளுக்கான மையம் ஆகியவற்றில் தமிழ் படிப்பித்தலில் 25 ஆண்டுகால அனுபவம் உள்ளவர்.

உலகின் தலைசிறந்த விஞ்ஞானிகளாகிய பில்லிங்ஸ் ஈவிலிங் பில்லிங்ஸ் ஆகியவர்களின் தலைமையில் குடும்ப வாழ்வியல் கல்வி தொடர்பான நேரடிப்பயிற்சியைப் பெற்றுத் தமிழகத்தின் பல பள்ளிக்கூடங்களில் இளைய வயதினர்க்கு குடும்பநலக்கல்வியைத் திறமையாகப் பயிற்றுவித்தவர். அத்துடன் இலண்டனின் நான்காவது தமிழ் வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளரும் அறிவிப்பாளரும் ஆவார். கூடவே பீப் கல்வி அமைப்பில் பள்ளிமுன் கல்வியை பெற்றோருடன் சேர்த்து படிப்பித்தல் கலையைப் பயின்றவர். இயலாமையுள்ள சிறுவர்களுக்கு கல்வி புகட்டுதல் தொடர்பான பயிற்சிகள் பெற்ற இவர் கல்வியிலும் தகவல் முறைமையிலும் விஞ்ஞானப்பட்டதாரி. அத்துடன் கல்வி குடிவரவு உடல்நலம் ஆகியவற்றில் அரச கொள்கைகளை உருவாக்குதல் தொடர்பான சமுககொள்கையில் பட்டமேற்படிப்புப்பட்டம் பெற்றவர். கூடவே கேம்பிரிஜ் பல்கலைகழகத்தின் சர்வதேச தமிழ் உயர்தர பரீட்சைக்கான தமிழ்க்கேள்வித்தாள் தயாரிப்பாளராகவும் பணியாற்றி அனுபவம் பெற்றவர். வீட்டு நலவசதிகள் தொடர்பான துறையில் பட்டப்பின் பட்டதாரியாகி ஹைவைக்கம் கவுன்சிலில் வீட்டு முகாமைத்துவ அனுபவமும் பெற்றவர்.

இவரது நூலான புதிய முறையில் தமிழ் எழுதுதல் உலகின் பல பல்கலைக்கழகங்களின் பாராட்டுதலைப் பெற்றது. தமிழ் குழந்தைப்பாடல் தொகுப்பு புலத்தில் உள்ள பிள்ளைகளுக்கான தமிழ்ப்பயிற்சி நூல்

ஆகியவற்றின் ஆசிரியரான இவர் ஒலியன்களைப் பயன்படுத்தி தமிழ் கற்பித்தல் தொடர்பாகச் செய்த ஆய்வு கணினித் தமிழ் உலகில் உள்வர்கள் பலரின் பாராட்டுதலைப் பெற்றது. இன்னும் குடிவரவு அகதிகள் ஆகிய துறைகளில் பயிற்சிகளும் அனுபவங்களும் உள்ளவர்.

இவர் தனது கல்வித் தகைமைகள் அனுபவங்களின் அடிப்படையில் பல தமிழ் இலக்கண நூல்களையும் வாசித்துப் படித்து அவற்றுள் இலகு முறையில் தமிழ் இலக்கணத்தைக் கற்பதற்குத் தேவையானவை எனத் தான் கருதியவற்றை இங்கு நூலாகத் தந்துள்ளார். இவரது நூலுக்குக் கணவன் என்ற முறையில் அல்ல சக படைப்பாளர் ஆசிரியர் ஊடகவியலாளர் என்ற நிலையில் இந்த அணிந்துரையை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்நூல் தமிழ் உலகுக்கு பயன்பட இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

சூ.யோ. பற்றிமாகரன்
ஆசிரியர் ஊடகவியலாளர் ஆய்வாளர்
ஒக்ஸ்வேர்ட்.

# ஆசிரியருரை

தமிழ் இலக்கணம் மிகப்பரந்து விரிந்த அறிவியல் தொகுதி. இந்த நிலையில் தமிழ் இலக்கணத்தைக் கற்க விரும்பும் ஒருவர் பல இலக்கண நூல்களைத் தேடிட வேண்டிய நாடிட வேண்டிய தேவை உள்ளது. இன்றைய காலகட்டத்தில் இந்த தேடலுக்கான காலமும் வழங்கல்களும் வளங்களும் போதிய அளவு கிடைக்காத நிலையில் பலருக்குத் தமிழ் இலக்கணத்தைக் கற்க வேண்டும் எனத் தோன்றும் ஆர்வம் குறைகிறது அல்லது மறைகிறது. இதனால் எனது அறிவுக்கு எட்டிய வகையில் தமிழ் இலக்கண நூல்களில் நான் படித்துப் படிப்பித்து அனுபவித்த இலக்கண அறிவின் தொகுப்பு ஒன்றைப் பதிவாக்குவது இலக்கணம் கற்க விரும்புவர்களுக்கு உதவிடும் என்னும் எண்ணமே இந்நூலின் தோற்றத்திற்குக் காரணமாகிறது.

மேலும் தமிழ் இலக்கண மூல நூல்கள் சூத்திரங்கள் காண்டிகைகள் போன்ற வடிவுகளில் உள்ளதினால் அவற்றைச் சாதாரண தமிழர்கள் வாசித்து விளங்கிக்கொள்வதற்குக் காலத்திற்கு காலம் அக்கால வழக்குகளுக்கு ஏற்ற வகையில் இலக்கணம் குறித்த நூல்களை எழுதுவது தமிழை வளர்ப்பதற்கான பணிகளில் ஒன்றாகவும் அமைகிறது.

தமிழ் இலக்கணத்தைச் சரிவரத் தெரிந்து கொள்வது நாளாந்த வாழ்வில் தமிழ் மொழி உரிய வளர்ச்சியைப் பெறுவதற்கும் நம்முன்னோர்களின் அறிவில் ஆற்றலில் எழுந்த இலக்கியங்களை ஆக்கங்களை அறிந்து பயன்பெறுவதற்கும் அவசியமான ஒன்றாகவும் உள்ளது.

அந்த வகையில் எனது இந்த இலக்கணத் தொகுப்பு நூல் மாணவர்களுக்கு மட்டுமல்லாது ஆசிரியர்கள் ஊடகவியலாளர்கள் எழுத்தாளர்கள் மொழிபெயர்ப்பாளர்கள் போன்றவர்களுக்கும் உதவும் என்பது உறுதி.

இன்னும் தமிழில் மேற்படிப்புகளை மேற்கொள்பவர்களுக்கும் தமிழ் மொழியின் வளர்ச்சி குறித்த சிந்தனையாளர்கள் எழுத்தாளர்களுக்கும் இலக்கணம் குறித்த புதிய சிந்தனைகள் தோன்ற இந்நூல் வழிவகுப்பின் அதுவே இந்நூலின் வெற்றியாக அமையும் என்பது என் நம்பிக்கை.

றீற்றா பற்றிமாகரன் BA (Tamil) BSc (Education) PG Diploma ( Social Policy and Housing)
ஆசிரியை

# பொருளடக்கம்

எழுத்ததிகாரம்
எழுத்துகள் குறித்த சில விளக்கங்கள்
உயிர் எழுத்துகள்
மெய் எழுத்துகள்
உயிர்மெய் எழுத்துகள்
ஆய்த எழுத்துகள்
உயிர்மெய் எழுத்துகளின் ஓசைகளும் அவற்றிற்கான அடையாளங்களும்
தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும்
உயிர்மெய் எழுத்துகளின் வரிவடிவங்களில் கவனிக்க வேண்டியவை
ஒலிகளை விளக்கும் குறியீடுகள்
சுட்டெழுத்துகள்
வினா எழுத்துகள்
சொல்லின் முதலில் வரும் எழுத்துகள்
சொல்லின் இறுதியில் வரும் எழுத்துகள்
இடைநிலை மெய்மயக்கம்
வேற்றுநிலை மெய்மயக்கம்
உடனிலை மெய்மயக்கம்
போலி - முதற்போலி இடைப்போலி கடைப்போலி
எழுத்துகளின் மாத்திரை
குற்றியலுகரம்
குற்றியலிகரம்
முற்றியலுகரம்
ஐகாரக் குறுக்கம்
ஔகாரக் குறுக்கம்
மகரக் குறுக்கம்
ஆய்தக் குறுக்கம்
உயிர்அளபெடை
ஒற்றளபெடை

சொல்லதிகாரம்
சொல் - சொற்பாகுபாடு இயற்சொல் திரிசொல் வடசொல் திசைச்சொல்
வழுக்கள் - திணை பால் இடம் காலம் வினா விடை மரபு
வழுவமைதி - திணை பால் இடம் காலம் வினா விடை மரபு

சொல் வழக்கு - இயல்புவழக்கு தகுதிவழக்கு
பதவியல் - பகுசொல் பகாச்சொல்
தமிழ் மொழியின் வசன அமைப்பு
எழுவாய் பயனிலை செயப்படுபொருள் அடைமொழிகள்
தனிவாக்கியம் - தொடர்வாக்கியம்
கலப்பு வாக்கியம்
கூற்று வாக்கியம்
வினா வாக்கியம்
வியப்பு வாக்கியம்

பெயரியல்
சொற்களின் வகைகள்
பெயர்ச்சொல்
இடுகுறிப் பெயர்
காரணப்பெயர்
வினையால் அணையும் பெயர்
ஆகுபெயர்
தொழிற்பெயர்

வினையியல்
வினைச்சொல்
தெரிநிலை வினைமுற்று
குறிப்பு வினைமுற்று
தன்வினை - பிறவினை
உடன்பாடு - எதிர்மறை
ஏவல்வினை
எதிர்மறை வினை
வியங்கோள்வினை
செய்வினை - செயப்பாட்டுவினை

இடைச்சொல்
உரிச்சொல்

திணை - உயர்திணை அஃறிணை
பால் - ஆண்பால் பெண்பால் பலர்பால் ஒன்றன்பால் பலவின்பால்
எண் - ஒருமை பன்மை

இடம் - தன்மை முன்னிலை படர்க்கை
காலம் - இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம்

பெயரெச்சம் - வினையெச்சம்
எதிர்மறை எச்சங்கள்

தொகை
வேற்றுமைத்தொகை
வினைத்தொகை
பண்புத்தொகை
உம்மைத்தொகை
உவமைத்தொகை
அன்மொழித்தொகை

நிறுத்தற்குறிகள்
காற்புள்ளி
அரைப்புள்ளி
முக்காற்புள்ளி
முற்றுப்புள்ளி
வினாக்குறி
வியப்புக்குறி
ஒற்றைமேற்கோட்குறி
இரட்டைமேற்கோட்குறி

வேற்றுமை
வேற்றுமை உருபுகள்
முதலாம் இரண்டாம் மூன்றாம் நாலாம் ஐந்தாம் ஆறாம் ஏழாம் எட்டாம் வேற்றுமை
தன்மை முன்னிலை படர்க்கைச் சொற்களில் வேற்றுமை

புணரியல்
புணர்ச்சி
இயல்புப் புணர்ச்சி
விகாரப்புணர்ச்சி - தோன்றல்விகாரம் திரிதல்விகாரம் கெடுதல்விகாரம்
வேற்றுமைப் புணர்ச்சி
அல்வழிப்புணர்ச்சி

மெய்யும் உயிரும் புணர்தல்
மெய்யும் மெய்யும் புணர்தல்
உயிரும் உயிரும் புணர்தல்
உயிரும் மெய்யும் புணர்தல்
லகர ளகர ஈற்றுப் புணர்ச்சி
ழகர ஈற்றுப் புணர்ச்சி
மகர ஈற்றுப் புணர்ச்சி
யகர ரகர ஈற்றுப் புணர்ச்சி

அடுக்குத்தொடர்
இரட்டைக்கிளவி
இணைமொழி
மரபுத்தொடர்கள்
அன்று-அல்ல வேறுபாடு
ஒரு-ஓர் இரு-ஈர் வேறுபாடு
தான்-தாம் வேறுபாடு
வேண்டும்-வேண்டா-வேண்டும் வேறுபாடு
அது-அ.்.து இது-இ.்.து எது?-எ.்.து? வேறுபாடு

ஒத்த கருத்துள்ள சொற்கள்
எதிர்க் கருத்துள்ள சொற்கள்
தொகைச்சொற்கள்
உயிர்களுள்வேறுபாடு
இளமைப்பெயர்கள்
அ.்.றிணை ஆண்பாற்சொற்கள்
அ.்.றிணை பெண்பாற்சொற்கள்
விலங்குகளின் ஒலிக்குரிய பெயர்கள்
பறவைகளின் ஒலிக்குரிய பெயர்கள்

ஒலிவேறுபாடுகள்
ரகர றகரச் சொற்கள்
லகர ளகரச் சொற்கள்
ழகரச் சொற்கள்
ணகர னகரச் சொற்கள்
நகரச் சொற்கள்

# எழுத்ததிகாரம்

## எழுத்துகள் குறித்த சில விளக்கங்கள்


மனிதன் தன்னுடைய உணர்வுகளையும் தேவைகளையும் பின்னர் கருத்துகளையும் மற்றவர்களுக்கு தனது குரலால் மொழிந்தான். மொழியப்பட்டதினால் அத்தகைய குரல் ஓசைகளின் தொகுதி மொழி எனப்பட்டது.

ஓசை பேசப்படும் நேரத்தில் மட்டும் கருத்தை உணர்வை தேவைகளை வெளிப்படுத்தியதனால் பேச்சு முடிந்ததின் பின்னர் தான் கூறியவற்றை நிலைநிறுத்த மனிதனால் முடியவில்லை. இந்தப் பிரச்சினைக்கு விடையாக கீறுதல் மூலம் மனிதன் தன் கருத்துகளை ஆற்றோரக் களிமணலில் பதிக்க முற்பட்டான். இதுவே சித்திர எழுத்துகளின் தோற்றமாயிற்று.

ஈரமண்ணில் பறவைகள் மிருகங்கள் செல்கையில் அவை பதித்த காலடிகளின் பதிவுதான் மனிதனுக்கு தன் கருத்துகளையும் கோடுகள் மூலம் கீறப்பழக்கியது என்பர். இதனாலேயே மிருகங்களின் காலடி அடையாளத்தைக் குறிக்கும் சுவடு என்னும் சொல் எழுத்துகளின் தொகுதியைக் குறிக்கும் சுவடி என்னும் சொல்லாகியது என்பர். பின்னர் பிள்ளை முதன் முதலில் எழுத்தை எழுதத் தொடங்குகையில் அரிசியின் மேல் அகரத்தை எழுதுவிக்கும் கலாச்சாரம் தமிழரிடை உருவாகிய பின்னர் தமிழ் எழுத்துகளை அரிச்சுவடி என அழைக்கும் வழக்கமும் தொடங்கிற்று என்பர். இவ்வாறு அரிசியில் வரிவடிவங்களை வரைந்து பழகும் காலத்தை அரிவரி என நம்மவர்கள் அழைத்தனர்.

இவ்வாறு மணலில் அல்லது அரிசியில் கீறுவதற்கு கையையோ கருவியையோ இழுத்தல் அவசியமான காரணத்தால் இழு என்னும் அடியாக எழுத்து என்னும் பெயர் மொழியின் ஓசையினை குறிக்கும் வரிவடிவத்திற்கு ஏற்பட்டது என்பது சில ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது. சிந்து வெளி நாகரீக காலத்து வரிவடிவு உலகின் மற்றைய பகுதிகளில் காணப்படும் சித்திரவரிவடிவில் இருந்து வேறுபட்டமை கண்டறியப்பட்டுள்ளது. இந்த வரிவடிவ முறையே தமிழின் வரிவடிவு உட்பட பல இந்திய மொழிகளின் வரிவடிவின் தோற்றத்திற்கு காரணமாகியது

என்பது ஆய்வாளர்கள் கருத்து. மேலும் சிந்துவெளி நாகரீக காலத்தில் எல் என்னும் சொல்லும் இல என்னும் சொல்லும் அக்கால எழுத்துகளைக் குறித்தன என்பதும் ஆய்வாளர்கள் கருத்து. எல் என்பதற்கு முதல் தமிழ் நூலாகிய தொல்காப்பியம் " எல்லே இலக்கம்" என்னும் இடையியல் 21 சூத்திரத்தில் விளக்கம் என்னும் பொருளைத் தருகிறது. ஆகவே ஒரு மனிதனின் கருத்தை விளக்கும் ஓசையின் வரிவடிவத்தை எழுத்து என நம்முன்னோர் பெயரிட்டனர் என்பது தெளிவாகிறது.




தமிழ் எழுத்துகளின் ஆரம்ப வடிவங்களிலொன்று

தமிழின் முதல் இலக்கண நூலாக இன்று எமக்குக் கிடைக்கும் தொல்காப்பியம் முழு அளவில் உச்சரிக்கப்படும் தமிழ் எழுத்துகளை முதல் எழுத்து என்றும் உச்சரிக்கப்படுகையில் மற்றைய எழுத்துக்களின் ஓசையுடன் சார்ந்து ஒலிப்பனவற்றைச் சார்பெழுத்தென்றும் விளக்குகிறது.

தமிழில் முதல் எழுத்துகள் "அ" வில் தொடங்கி "ஔ" வில் முடிகிற 12 உயிர் எழுத்துகளும் "க்" இல் தொடங்கி " ன்" இல் முடிகிற 18 மெய் எழுத்துகளும் ஆக மொத்தம் 30 என முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் கூறுகிறது.

அதே வேளை பேச்சின் பொழுது சில எழுத்துக்கான ஓசைகள் குறைந்து

வருவதை அவதானித்த தொல்காப்பியர் அவ்விதமான ஓசைகளின் தொகுப்பை மூன்றாகப் பகுத்து அவற்றை சார்பெழுத்துகள் எனப் பெயரிட்டழைக்கின்றார். இதனை குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என மூன்றாக வகைப்படுத்துவதையும் காணலாம். ஆயினும் 19ம் நூற்றாண்டில் இலக்கணச் சுருக்கம் செய்த ஆறுமுகநாவலர் எழுத்தாவது சொல்லுக்கு முதற் காரணமாகிய ஒலி ஆகும். இது உயிரெழுத்து மெய்யெழுத்து உயிர்மெய்யெழுத்து ஆய்த எழுத்து என்று நான்கு வகைப்படும் என காலத்திற்கு ஏற்ற வகையில் விளக்கியுள்ளார்.

## உயிர் எழுத்துகள் (Vowels)

**அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ**

இவை வேறோர் ஒலியின் உதவியில்லாமல் தாமே இயங்குகின்றன. நமது உயிரைப் போன்று தானே இயங்கவும் அது மெய்யினை (உடம்பை) இயக்குவது போன்று மெய்யெழுத்துகளுடன் கூடி அவற்றை இயக்கவும் இந்த ஒலிகளுக்கு ஆற்றல் உண்டு என்பதினாலேயே இந்தப் பன்னிரண்டு எழுத்துகளையும் நம் முன்னோர் உயிரெழுத்துகள் என்றழைத்தனர்.

அ இ உ எ ஒ என்னும் ஐந்து எழுத்துகளும் குறுகிய ஓசையுடையவை. (ஒரு மாத்திரை. மாத்திரையாவது ஒருமுறை கண்ணை இமைக்கும் பொழுது அல்லது ஒருமுறை கையை நொடிக்கும் பொழுது). எனவே இவை குறில் எனப்படும். (Short vowels)

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் ஏழு எழுத்துகளும் நீண்ட ஓசையுடையவை. (இரு மாத்திரை). எனவே இவை நெடில் எனப்படும். (Long vowels)

குறிப்பு

1. உயிர் எழுத்துகள் எல்லாம் சொல்லின் முதல் எழுத்தாக வரும்.
   - அம்மா ஆடு இலை ஈசன் உணவு ஊஞ்சல் எட்டு ஏணி ஐந்து ஒட்டகம் ஓணான் ஔவை

2. சில உயிர் எழுத்துக்கள் ஒரு சொல்லாக வரும்.
   - ஆ பசுவையும் ஈ இலையானையும் குறிக்கும்.

# மெய் எழுத்துகள் (Consonants)

நம்முடைய உடம்பினைப் போன்று தானே இயங்கவும் இயக்கவும் முடியாத இயல்புடைய எழுத்துகள் மெய்யெழுத்துகளென்று அழைக்கப்பட்டன. இவை ஒற்றெழுத்துகள் எனவும் அழைக்கப்படும். க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் என்பன மெய் எழுத்துகளாகும். (1/2 மாத்திரை) இதில் க் ச் ட் த் ப் ற் என்னும் ஆறு எழுத்துகளும் வலிய ஓசை உடையவை. எனவே இவை வல்லினம் (Hard consonants) எனப்படும். இந்த வரிசையில் வரும் உயிர்மெய் எழுத்துகளும் உயிர்மெய் வல்லின எழுத்துகள் எனப்படும்.

ங் ஞ் ண் ந் ம் ன் என்னும் ஆறு எழுத்துகளும் மென்மையான ஓசை உடையவை. எனவே இவை மெல்லினம் (Soft consonants) எனப்படும். இந்த வரிசையில் வரும் உயிர்மெய் எழுத்துகளும் உயிர்மெய் மெல்லின எழுத்துகள் எனப்படும்.

ய் ர் ள் வ் ழ் ல் என்னும் ஆறு எழுத்துகளும் வன்மையாகவும் ஒலிக்காது மென்மையாகவும் ஒலிக்காது இடைப்பட்ட ஓசை உடையவை. எனவே இவை இடையினம் (Medial consonants) எனப்படும். இந்த வரிசையில் வரும் உயிர் மெய் எழுத்துகளும் உயிர்மெய் இடையின எழுத்துகள் எனப்படும்.

<u>குறிப்பு</u>

1. மேலே புள்ளியுடன் வரும் எழுத்துகள் எல்லாம் மெய் எழுத்துகள். இவை ஒற்றெழுத்துகள் என்றும் சொல்லப்படும்.
2. மெய் எழுத்து சொல்லின் முதல் எழுத்தாக வராது.
3. ஒரு மெய் எழுத்து ஒரு சொல்லாக அமையாது.
4. க் ங் ச் ட் த் ப் ற் ஆகிய ஏழு மெய் எழுத்துக்களும் சொல்லின் இறுதியில் வராது.
5. ர் ய் ழ் ஆகிய மெய் எழுத்துக்களை அடுத்து இன்னுமோர் மெய் எழுத்து ஒரு சொல்லில் வரலாம்.
   - பார்த்தல் பாய்ச்சல் வாழ்க்கை
6. ர் ழ் ஆகிய மெய் எழுத்துகள் சொல்லின் தொடக்கத்தில் வரும் குறில் எழுத்தை அடுத்து வராது. நெடில் எழுத்தை அடுத்து

வரும். குறில் எழுத்தை அடுத்து உயிர்மெய்யாக வரும்.

- பார் மோர் வேர் ஓர் ஊர் ஈர் ஏர் ஆழ் தாழ் வாழ்
- வரி பொரி அரி உரி உரை குழி ஒழி வழி அழை மழை

## உயிர் மெய் எழுத்துகள் (Vowel consonants)

பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யுடனும் தனித்தனியே சேர்ந்து ஒலிக்கும் எழுத்துகள் உயிர்மெய் எழுத்துகள் எனப்படும். இவை முதலெழுத்துகளின் துணைகொண்டு இயங்குவதால் சார்பெழுத்துகளில் அடங்குகிறது.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

'க' என்னும் எழுத்தில் 'க்' என்னும் மெய்யும் 'அ' என்னும் உயிரும் சேர்ந்திருக்கின்றன. அதாவது க் + அ = க இவ்வாறே (க்) என்னும் மெய்யும் ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ ஆகிய உயிர்களுடன் இணைந்து கீழே காட்டப்பட்ட உயிர்மெய் எழுத்துகள் வந்துள்ளன.

க கா கி கீ கு கூ கெ கே கை கொ கோ கௌ

கீழே உள்ள பதினெட்டு உயிர் மெய் எழுத்துகளும் அ என்னும் உயிர்

ஓசையுடன் இணைந்து வந்துள்ளன. அ என்னும் உயிர் ஓசை உயிர் மெய்யெழுத்துகளை எழுதுகையில் மெய்யெழுத்தின் குற்றை (புள்ளியை) மட்டும் நீக்கி எழுதப்படுகிறது.

க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன

இவ்வாறு 12 உயிர் எழுத்துகளும் 18 மெய் எழுத்துகளுடனும் சேர்வதால் 12*18 = 216 உயிர்மெய் எழுத்துகள் பிறக்கின்றன.

## ஆய்த எழுத்து

ஃ

ஆய்த எழுத்தென்பது குற்றெழுத்துக்கும் உயிர்மெய் வல்லெழுத்துக்கும் நடுவே மூன்று புள்ளி வடிவை உடையதாக வரும் ஓரெழுத்தாகும். இது அஃகேனம் என்றும் பெயர் பெறும். இதுவும் சார்பெழுத்தில் அடங்கும். சொல்லின் முதலிலோ இறுதியிலோ வராது சொல்லின் இடையில் வரும்.

- எஃகு பஃது அஃது இஃது எஃது? அஃறிணை

## உயிர்மெய் எழுத்துகளின் ஓசைகளும் அவற்றிற்கான அடையாளங்களும்.

1. அ உ ஊ தவிர்ந்த உயிர் ஓசைகளுடன் மெய்யெழுத்துக்கள் சேர்ந்து வரும் பொழுது புள்ளி இல்லாது ா ி ீ ெ ே ை ொ ோ ௌ ஆகிய அடையாளங்களுடன் சேர்த்து எழுதப்படுகின்றன.

- அ ஓசையில் வரும் உயிர்மெய் எழுத்துகள் அடையாளங்கள் எதுவும் இல்லாது மெய் எழுத்தின் புள்ளி மட்டும் நீங்கி வரும்.

2. உ ஊ ஓசையில் வரும் உயிர்மெய் எழுத்துகளுக்கு தனியான அடையாளங்கள் கிடையாது. இவ்வெழுத்துகள் மூன்று விதமான மாற்றங்களுடன் வரும்.
3. ஓர் உயிர்மெய் எழுத்து ஓர் உயிர் எழுத்து ஒரு சொல்லாக வரலாம்.

- ஆ ஈ
- கோ மா வா போ நீ பா தீ கை வை தை

4. ந ண ன ஆகியவற்றில் ந சொல்லின் முதல் எழுத்தாக வரும். ண ன ஆகியவை சொல்லின் முதல் எழுத்தாக வராது.

- நண்டு நல்லூர் பணம் மணம் கனம் மனம்

## தமிழ் எழுத்துகளின் வகைகளும் தொகையும்

தமிழில் நாலுவகையான எழுத்துகள் உள்ளன.

| | |
|---|---|
| உயிர் எழுத்துகள் | 12 |
| மெய் எழுத்துகள் | 18 |
| உயிர்மெய் எழுத்துகள் | 12 X 18 = 216 |
| ஆய்த எழுத்து | 1 |
| மொத்தம் | 247 |

மொத்தமாக தமிழில் 247 எழுத்துகள் உண்டு.

## உயிர் மெய் எழுத்துகளின் வரிவடிவங்களில் கவனிக்க வேண்டியவை.

1. டி டீ எழுத்தின் முடிவில் ி ீ வராது எழுத்தின் நடுவில் வந்துள்ளது.

2. ர் ரி ரீ முறையே ா் ா ா என எழுதப்படுவதும் உண்டு.
   - (அவர் - அவா்) (அவரிடம் - அவாிடம்) (ரீங்காரம் - ாீங்காரம்)

# ஒலிகளை விளக்கும் குறியீடுகள்
# Signs for different Tamil sounds

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

| ஒலி | குறியீடுகள் | பெயர்கள் | க் | இடம் |
|---|---|---|---|---|
| அ | ் | புள்ளி | க | நீக்குக |
| ஆ | ா | அரவு | கா | பின் |
| இ | ி | விசிறி | கி | மேல் |
| ஈ | ீ | வட்ட விசிறி | கீ | மேல் |
| எ | ெ | ஒற்றைக் கொம்பு | கெ | முன் |
| ஏ | ே | இரட்டைக் கொம்பு | கே | முன் |
| ஐ | ை | சங்கிலிக் கொம்பு | கை | முன் |
| ஒ | ெ-ா | ஒற்றைக் கொம்பும் அரவும் | கொ | முன்பின் |
| ஓ | ே-ா | இரட்டைக் கொம்பும் அரவும் | கோ | முன்பின் |
| ஔ | ெ-ள | ஒற்றைக் கொம்பும் ள வும் | கௌ | முன்பின் |

குறிப்பு

1. அ ஒலிக்கு மெய்யின் புள்ளி இல்லாது வரும்.
2. உ ஊ ஒலிகளுக்கு தனியான குறியீடுகள் இல்லை.
3. உ ஊ ஓசைக்குரிய எழுத்துகள் மூன்று விதமான மாற்றங்களுடன் வருவதை அவதானிக்கலாம்.

## உ ஊ ஓசைக்குரிய எழுத்துகளின் மூன்று விதமான மாற்றங்கள்

| 1 | | 2 | | 3 | |
|---|---|---|---|---|---|
| உ | ஊ | உ | ஊ | உ | ஊ |
| ஙு | ஙூ | கு | கூ | ஞு | ஞூ |
| சு | சூ | டு | டூ | ணு | ணூ |
| பு | பூ | மு | மூ | து | தூ |
| யு | யூ | ரு | ரூ | நு | நூ |
| வு | வூ | ழு | ழூ | லு | லூ |
| | | ளு | ளூ | று | றூ |
| | | | | னு | னூ |

**1.** இதில் சு சூ ஆகிய இரண்டு எழுத்துகளும் சற்று வித்தியாசமாக இருப்பதை அவதானிக்கலாம். சூ வுக்கு முடிவில் வட்டம் இல்லை.

2. கூ வித்தியாசமாக இருக்கிறது. டு டூ ஆகியவை வலது பக்கம் முடிந்திருக்கின்றன.

3. அரவு இடைவெளி இல்லாமல் சேர்ந்து வந்துள்ளது.

### சுட்டெழுத்துகள்

அ இ உ என்னும் மூன்று உயிர் எழுத்துகளும் சொல்லின் முதலில் சுட்டுப் பொருளில் வரும்போது சுட்டெழுத்துகளாகும். சுட்டு அகச்சுட்டு புறச்சுட்டு என இருவகைப்படும். ஒரு சொல்லின் உள்ளேயே வந்தால் அகச்சுட்டு என்றும் ஒரு சொல்லுக்கு வெளியே சுட்டுப் பொருளில் வந்தால் புறச்சுட்டு என்றும் அழைக்கப்படும்.

- அவன் இவன் உவன் - அகச்சுட்டு (இச் சொற்களைப் பிரிக்க முடியாது)
- அக்கிளி இக்கிளி உக்கிளி - புறச்சுட்டு (இச் சொற்களைப் பிரிக்கலாம்)

## வினா எழுத்துகள்

எ யா என்ற எழுத்துகள் சொல்லின் முதலிலும் ஆ ஓ என்ற உயிரெழுத்து கள் சொல்லின் இறுதியிலும் ஏ என்ற உயிரெழுத்து சொல்லின் முதலிலும் இறுதியிலும் வினாப் பொருளில் வரும்போது வினா எழுத்துகளாகும்.

- எது? எக்கிளி? — எ (முதல்)
- யார்? யாது? — யா (முதல்)
- அவனா? தம்பியா? — ஆ (இறுதி)
- அவனோ? தும்பியோ? — ஓ (இறுதி)
- ஏது? கண்ணனே? — ஏ (முதல், இறுதி)

## சொல்லின் முதலில் வரும் எழுத்துகள்

பொருள் தரக்கூடியதாக எழுத்துகள் அமைந்து சொற்கள் அமைந்திருந்தாலும் அச் சொற்களை எல்லாம் இலக்கண நூலார் ஏற்றுக் கொள்ளுவதில்லை. சொற்களை அமைக்கும் பொழுது அச்சொற்களின் முதல் எழுத்துகள் இந்த இந்த எழுத்துகளாகத்தான் இருக்க வேண்டும் இறுதி எழுத்துகள் இந்த இந்த எழுத்துகளாகத்தான் இருக்க வேண்டும் என்று விதி செய்து எழுத்துகளை வகுத்து வைத்துள்ளனர். அவற்றிற்கு முதல்நிலை எழுத்துகள் இறுதிநிலை எழுத்துகள் என்று பெயர்.
**உயிர் எழுத்துகள் -** அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ ஆகிய 12 உயிர்களும் சொல்லின் முதலெழுத்தாக வரும்.

- அம்மா ஆமை இலை ஈசல் உரல் ஊதல் எலி ஏணி ஐந்து ஒளி ஓலை ஔவை

**மெய் எழுத்துக்கள் -** முதல் எழுத்துக்களாக வராது.

**ஆய்த எழுத்து -** முதல் எழுத்தாக வராது.

**உயிர்மெய் எழுத்துக்கள் - க் ச் த் ந் ப் ம் வ் ய் ஞ்** ஆகிய 9 மெய் எழுத்துகள் உயிருடன் சேர்ந்து உயிர்மெய்யாக சொல்லின் முதலெழுத்தாக வரும்.

- கண் சங்கு தந்தை நரி பத்து மலை யமன் வட்டம் ஞமலி

**க் ச் த் ந் ப் ம்** என்னும் ஆறு மெய்களும் 12 உயிரோடும் சேர்ந்து சொல்லின் முதலெழுத்தாக வரும்.

- படம் மான் நிலம் தீபம் குடம் சூரியன் நெல் தேர் கைதி சொல் தோகை பௌர்ணமி

**வ் என்னும் மெய் அ ஆ இ ஈ எ ஏ ஐ ஔ** ஆகிய 8 உயிரோடும் சேர்ந்து சொல்லின் முதலெழுத்தாக வரும்.

- வலம் வாழ்க விதி வீதி வெள்ளை வேட்டை வைகறை வௌவால்

**ய் என்னும் மெய் அ ஆ உ ஊ ஓ ஔ** ஆகிய 6 உயிரோடும் சேர்ந்து சொல்லின் முதலெழுத்தாக வரும்.

- யவனர் யாழ் யுத்தம் யூகம் யோகம் யௌவனம்

**ஞ் என்னும் மெய் அ ஆ எ ஒள** ஆகிய 4 உயிரோடும் சேர்ந்து சொல்லின் முதலெழுத்தாக வரும்.

- ஞமலி ஞானம் ஞெகிழி ஞொல்கல்

**ட் ண் ர் ல் ழ் ள் ற் ன்** ஆகிய 8 மெய் எழுத்துகள் 12 உயிருடனும் சேர்ந்து சொல்லின் முதல் எழுத்துகளாக வராது.

## சொல்லின் இறுதில் வரும் எழுத்துகள்

மெய் எழுத்துகள் - ஞ் ண் ந் ம் ன் ஆகிய (ங் தவிர்ந்த) மெல்லின மெய்களும் ய் ர் ல் வ் ழ் ள் ஆகிய இடையின மெய்களுமாக 11 எழுத்துகள் சொல்லின் இறுதியில் வரும்.

- உரிஞ் கண் வெரிந் கரம் பொன் தாய் பார் பால் தெவ் யாழ் தேள்

க் ச் ட் த் ப் ற் ஆகிய ஆறு வல்லினமும் குற்றியலுகரமாக சொல்லின் இறுதியில் வரும்.

வரும்.

- நோக்கு பேச்சு பாட்டு வாத்து தோப்பு காற்று

**உயிர்மெய் எழுத்துகள்** - ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் ஆகிய 11 மெய்களும் அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஒ ஓ ஔ ஆகிய 11 உயிருடனும் சேர்ந்து உயிர்மெய் எழுத்தாக சொல்லின் இறுதியில் வரும். ( எ இல்லை)

- விள பலா ஒளி தீ வடு பூ சே குழந்தை நொ போ வெள

**ஆய்த எழுத்து** - இறுதி எழுத்தாக வராது.

## இடைநிலை மெய் மயக்கம்

சொல்லின் இடையிலே பதினெட்டு மெய்களும் தோன்றும். இந்தப் பதினெட்டு மெய்களும் சொல்லின் இடையில் மயங்கி (தோன்றி) வருவதற்கு இடைநிலை மெய் மயக்கம் என்று பெயர். இது வேற்றுநிலை மெய் மயக்கம் உடனிலை மெய்மயக்கம் என இருவகைப்படும்.

பதினெட்டு மெய்களும் சொல்லின் இடையிலே மயங்கும் போது மாறிமாறி மயங்கும். சில மெய்கள் அதே மெய்களோடு மயங்கும். அவையே வேறு மெய்களோடும் மயங்கும்.

**மெய்கள் வேறு மெய்களோடு மயங்கும் மயக்கத்திற்கு வேற்றுநிலை மெய் மயக்கம் என்று பெயர்.**

**மெய்கள் அதே மெய்களோடு மயங்கும் மயக்கத்திற்கு உடனிலை மெய் மயக்கம் என்று பெயர்.**

## வேற்றுநிலை மெய் மயக்கம்

பின்வரும் மெய்களை அடுத்து அதே இன எழுத்து வராமல் வேறு இன எழுத்துக்கள் வந்திருப்பதை அவதானிக்கவும்.

| மெய்கள் | உதாரணம் | மெய்கள் | உதாரணம் |
|---|---|---|---|
| ங் | அங்கம் | ர் | பெயர்ச்சொல் |
| ஞ் | இஞ்சி | ல் | வேல்முருகன் |
| ட் | காட்சி | வ் | தெவ்பெரிது |
| ண் | வண்டு | ழ் | வாழ்க்கை |
| ந் | மந்திரம் | ள் | கொள்கை |
| ம் | மாம்பழம் | ற் | நிற்க |
| ய் | வாய்க்கால் | ன் | மன்மதன் |

## உடனிலை மெய் மயக்கம்

பின்வரும் மெய்களை அடுத்து வேறு இன எழுத்து வராமல் அதே இன எழுத்துக்கள் வந்திருப்பதை அவதானிக்கவும்.

| மெய்கள் | உதாரணம் | மெய்கள் | உதாரணம் |
|---|---|---|---|
| க் | பக்கம் | ப் | வெப்பம் |
| ங் | இங்ஙனம் | ம் | விம்மல் |
| ச் | எச்சம் | ய் | கொய்யா |
| ஞ் | விஞ்ஞானி | ல் | நெல்லி |
| ட் | வட்டம் | வ் | கொவ்வை |
| ண் | அண்ணன் | ள் | வெள்ளம் |
| த் | புத்தகம் | ற் | முற்றம் |
| ந் | முந்நீர் | ன் | மன்னன் |

மெய்கள் பதினெட்டில் க் ச் த் ப் என்னும் நான்கு மெய்களை அடுத்து வேறு இன எழுத்துகள் வந்து சொற்கள் அமையாது. இவற்றிற்கு அடுத்து அதே இன எழுத்துகள் மட்டுமே வந்து சொற்கள் உருவாகும். அவை உடனிலை மெய் மயக்கத்திற்கே உரியன.

- அக்கா - க்
- பச்சை - ச்
- அத்தை - த்
- அப்பா - ப்

பக்தி சக்தி பகவதி என வேறு இன எழுத்துகள் வந்து சொற்கள் அமைந்தால் இவை வடமொழிச் சொற்கள் எனப்படும். மெய்கள் பதினெட்டில் ர் ழ் என்னும் இரண்டு மெய்களை அடுத்து அதே இன

எழுத்துகள் வந்து சொற்கள் அமையாது, இவற்றிற்கு அடுத்து வேறு இன எழுத்துகள் வந்துதான் சொற்கள் உருவாகும். அவை வேற்றுநிலை மெய் மயக்கத்திற்கே உரியன.

| தம்முடன் தாமே மயங்குவன | தம்முடன் பிறவே மயங்குவன | தம்முடன் தாமும் தம்முடன் பிறவும் மயங்குவன | தம்முடன் தாம் மயங்குவன | தம்முடன் பிற மயங்குவன |
|---|---|---|---|---|
| க் | ர் | ங் | க் | ர் |
| ச் | ழ் | ஞ் | ச் | ழ் |
| த் | | ட் | த் | ங் |
| ப் | | ண் | ப் | ஞ் |
| | | ந் | ங் | ட் |
| | | ம் | ஞ் | ண் |
| | | ய் | ட் | ந் |
| | | ல் | ண் | ம் |
| | | வ் | ந் | ய் |
| | | ள் | ம் | ல் |
| | | ற் | ய் | வ் |
| | | ன் | ல் | ள் |
| | | | வ் | ற் |
| | | | ள் | ன் |
| | | | ந் | |
| | | | ன் | |

## போலி

போல இருத்தல் என்பது இதன் பொருளாகும். ஆங்கிலத்தில் **(Dupe)** எனப்படும். சொல்லின் முதலில் இடையில் கடையில் இருக்க வேண்டிய எழுத்திற்கு மாறாக வேறு ஓர் எழுத்து வந்து அமைந்து பொருள் மாறாது அதே பொருளைத் தருவதற்கு எழுத்துப்போலி என்று பெயர். இவ்வெழுத்துப்போலி முதற்போலி இடைப்போலி கடைப்போலி என மூன்று வகைப்படும்.

## முதற்போலி

சொல்லின் முதலில் இருக்கவேண்டிய எழுத்திற்கு மாறாக வேறு ஓர் எழுத்து அமைந்து அதே பொருள் தரின் அது முதற்போலியாகும்.

மஞ்சு - மைஞ்சு
மயல் - மையல்
நயம் - ஞயம்

## இடைப்போலி

சொல்லின் இடையில் இருக்கவேண்டிய எழுத்திற்கு மாறாக வேறு ஓர் எழுத்து அமைந்து அதே பொருள் தரின் அது இடைப் போலியாகும்.

அரசியல் - அரைசியல்
அமச்சு - அமைச்சு
அரயர் - அரையர்

## கடைப்போலி

சொல்லின் கடையில் இருக்கவேண்டிய எழுத்திற்கு மாறாக வேறு ஓர் எழுத்து அமைந்து அதே பொருள் தரின் அது கடைப் போலியாகும்.

பந்தல் - பந்தர்
நிலம் - நிலன்
சாம்பல் - சாம்பர்

## எழுத்துகளின் மாத்திரை (Time unit of letters)

தமிழ் எழுத்துகள் ஒலிக்கும் நேர அளவை மாத்திரை என்பர். ஒலியை அளப்பதற்குக் கருவிகளாகக் கண்ணிமைக்கும் நேரம் கைநொடிக்கும் நேரம் ஆகியவற்றைப் பயன்படுத்தினர். ஓர் எழுத்து ஒருமுறை கைநொடிக்கும் அல்லது கண்ணிமைக்கும் கால ஒலியளவில் ஒலிக்கப்பட்டால் அதற்கு ஒரு மாத்திரை. இருமுறை கைநொடிக்கும் அல்லது கண்ணிமைக்கும் கால ஒலியளவில் ஒலிக்கப்பட்டால் அதற்கு இரு மாத்திரை. மூன்றுமுறை கைநொடிக்கும் அல்லது கண்ணிமைக்கும் கால ஒலியளவில் ஒலிக்கப்பட்டால் அதற்கு மூன்று மாத்திரை.

| | |
|---|---|
| உயிர் (குறில்) | ஒரு மாத்திரை |
| உயிர் (நெடில்) | இரு மாத்திரை |
| உயிர்மெய் (குறில்) | ஒரு மாத்திரை |
| உயிர்மெய் (நெடில்) | இரு மாத்திரை |
| மெய் | அரை மாத்திரை |
| உயிரளபெடை | மூன்று / நாலு மாத்திரை |
| ஒற்றளபெடை | ஒரு மாத்திரை |
| ஐகாரக் குறுக்கம் | ஒரு மாத்திரை |
| ஔகாரக் குறுக்கம் | ஒரு மாத்திரை |
| குற்றியலியரம் | அரை மாத்திரை |
| குற்றியலுகரம் | அரை மாத்திரை |
| ஆய்தம் | அரை மாத்திரை |
| மகரக் குறுக்கம் | கால் மாத்திரை |
| ஆய்தக் குறுக்கம் | கால் ~~அரை~~ மாத்திரை |

கால் மாத்திரைக்குக் கீழ் எழுத்துக்கள் இல்லை.

## குற்றியலுகரம் (Shortened "u")

தனிக் குற்றெழுத்து அல்லாத மற்றைய எழுத்துகளுக்குப் பின்னே சொல்லின் இறுதியில் வல்லின மெய்களாகிய க் ச் ட் த் ப் ற் ஆகிய எழுத்துகளின் மேல் ஏறி வரும் உ கரத்திற்குக் குற்றியலுகரம் என்று பெயர். சொற்களின் இறுதியில் வராத க் ச் ட் த் ப் ற் ஆகிய எழுத்துக்கள் வந்து விட்டால் உ கரத்தை இறுதி எழுத்துக்குச் சேர்த்தால் சொற்களை இலகுவாக உச்சரிக்க முடியும். இவ்வாறு உ கரம் சேர்க்கப்படும் பொழுது ஒலிக்கப்படும் உகரம் மாத்திரையில் குறைவாக ஒலிக்கும். எனவே இதற்கு குற்றெழுத்துடன் இயல்கின்ற அல்லது சேருகின்ற உகரம் என்று பெயர்.

குற்று + இயல் + உகரம் = குற்றியலுகரம் எனப் பெயராயிற்று.

- பாக்க் - பாக்கு     பேச்ச் - பேச்சு
  பாட்ட் - பாட்டு     வாத்த் - வாத்து
  தோப்ப் - தோப்பு     காற்ற் - காற்று

- ஆடு
- மிளகு
- பந்து
- உப்பு
- காசு
- நாற்று

## குற்றியலிகரம் (Shortened "E" )

குற்றியலிகரமாவது குற்றியலுகரத்தின்முன் யகரம் வந்து புணரும்போது குற்றியலுகரம் திரிந்த இகரமாகும். நிலைமொழியின் இறுதியில் உ கரம் அமைந்து வருமொழியின் முதலில் ய கரம் வந்தால் நிலைமொழியின் இறுதியில் நிற்கும் உ கரம் இ கரமாக மாறும் ஓசைப்போக்கு உண்டு. இங்கும் சொல்லின் இறுதியில் உள்ள உ கரம் தனக்குரிய ஒலியினின்றும் குறைந்து ஒலிக்கும். இந்த உ கரத்திற்கு குற்றியலிகரம் என்று பெயர்.

- நாடு + யாது = நாடியாது
- வரகு + யாது = வரகியாது

மியா என்னும் அசைச்சொல்லிலே மகரத்தின்மேல் ஏறி நிற்கும் இகரமும் குற்றிய லிகரமாகும்.

- கேண்மியா

## முற்றியலுகரம் (Full "U" )

தனிக் குறில் எழுத்துடன் சொல்லின் இறுதியில் வல்லின எழுத்துகள் வந்து அவற்றின் மேல் ஏறி வரும் உ கரமும் தனிக் குறில் அல்லாத எழுத்துடன் சொல்லின் இறுதியில் மெல்லின இடையின எழுத்துகள் வந்து அவற்றின் மேல் ஏறி வரும் உ கரமும் முற்றியலுகரம் எனப்படும். இது தனக்குரிய ஒலியினின்றும் குறையாமல் ஒலிக்கும்.

- பகு பசு கடு மது அறிவு கண்ணு வாரு கதவு

சொல்லின் முதலில் வரும் உ கரங்களும் முற்றியலுகரங்கள் எனப்படும்.

- உலகம்
- குயில்
- முயல்
- துயர்

## ஐகாரக் குறுக்கம் ( Shortened "AI" )

"ஐ" என்னும் எழுத்துத் தனியாக உச்சரிக்கப்படும் பொழுது இரண்டு மாத்திரையாகின்றது. அப்பொழுது தன் ஒலியளவில் குறைவதில்லை. ஆனால் சொல்லோடு சேர்ந்து முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும் பொழுது தன் ஒலியளவில் குறைந்து ஒரு மாத்திரை அளவில் ஒலிக்கின்றது. இப்படி குறைந்து ஒலிப்பதற்கு ஐகாரக் குறுக்கம் என்று பெயர்.

- ஐவர் இடையர் பனை

## ஔகாரக் குறுக்கம் (Shortened "AU" )

"ஔ" என்னும் எழுத்துத் தனியாக உச்சரிக்கப்படும் பொழுது இரண்டு மாத்திரையாகின்றது. அப்பொழுது தன் ஒலியளவில் குறைவதில்லை. ஆனால் சொல்லோடு சேர்ந்து முதலில் வரும்பொழுது தன் ஒலியளவில் குறைந்து ஒரு மாத்திரை அளவில் ஒலிக்கின்றது. இப்படி குறைந்து ஒலிப்பதற்கு ஔகாரக் குறுக்கம் என்று பெயர்.

- ஔவை மௌனம்

## மகரக் குறுக்கம் (Shortened "M")

ஒரு சொல்லில் "ண்" அல்லது "ன்" என்னும் மெய் எழுத்துக்கள் வந்து அதன்பின் "ம்" என்னும் மெய் எழுத்து வந்தால் அது தன் ஒலியளவாகிய அரை மாத்திரையில் இருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கின்றது. இப்படி மகரம் குறைந்து ஒலிப்பதற்கு மகரக் குறுக்கம் என்று பெயர்.

- மருண்ம் போன்ம்

## ஆய்தக்குறுக்கம்

தனிக்குறிலை அடுத்துவரும் ல் ள் என்னும் மெய்யெழுத்துகள் அல்வழியில் வருமொழியின் முதலில் தகரம் வந்தால் நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் கெட்டு அந்த இடத்தில் ஆய்தமும் பிற எழுத்தும் தோன்றும்.அந்த ஆய்தம் தன் மாத்திரையாகிய அரைமாத்திரையில் இருந்து கால் மாத்திரையாகக் குறுகி ஒலிக்கும். இவ்வாறு குறுகி ஒலிக்கும் ஆய்தத்திற்கு ஆய்தக்குறுக்கம் என்று பெயர்.

- கல் + தீது = கஃறீது
  பல் + துளி = பஃறுளி

## உயிர் அளபெடை (Vowel Prolongation)

பாட்டில் ஓசை குறையின் சொல்லின் முதலிலும் நடுவிலும் இறுதியிலும் நின்ற உயிர் எழுத்துக்களில் உள்ள நெடில் ஏழும் அவ்வோசையை நிறைக்கத் தத்தம் இரண்டு மாத்திரை அளவிலும் கூடுதலாக ஒலிக்கும்.

- "தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாழ்
  பெய்யெனப் பெய்யும் மழை"

## ஒற்றளபெடை (மெய் அளபெடை) (Consonant Prolongation)

பாட்டில் ஓசை குறையின் சொல்லின் நடுவிலும் இறுதியிலும் நின்ற ங் ஞ் ண் ந் ம் ன் வ் ய் ல் ள் என்னும் மெய்யெழுத்துக்கள் பத்தும் ஆய்த எழுத்து ஒன்றும் ஆகிய பதினோர் எழுத்துகளும் அவ்வோசையை நிறைக்கத் தத்தம் மாத்திரை அளவிலும் கூடுதலாக ஒலிக்கும்.

- "மடங்ங் கலந்த மனனே களத்து
  விடங்ங் கலந்தானை வேண்டு"

---------------

# சொல்லதிகாரம்

எழுத்துகள் பொருள் தரும் முறையில் சொற்களாகும் வகையினைச் சொல்லாக்கம் (கிளவியாக்கம்) எனத் தொல்காப்பியர் எடுத்துரைத்தார். பின்னர் பெயர்கள் உருபேற்றுப் பொருள் வேற்றுமைப்படும் தன்மையினை வேற்றுமையியலில் விளக்கினார். அவ்வாறு பெயர்களின் பொருள் வேற்றுமைக்கு உதவும் வேற்றுமையுருபுகள் தம்முள் மயங்கிப் பொருள் வேறுபாடு கொள்வதை வேற்றுமை மயங்கியல் மூலம் தெளிவுபடுத்திய தொல்காப்பியர் சொற்கள் ஒருவரை ஒன்றை விளித்தலுக்கு எவ்வாறு பயன்படுகிறதென்பதை விளிமரபில் விளக்குவதன் மூலம் பெயர்கள் உருபேற்று வேற்றுமைப்படும் தன்மையினை எடுத்துக்கூறி வேற்றுமை குறித்த அறிவை முழுமைப்படுத்துகிறார்.

அடுத்து பெயரியல் வினையியல் இடையியல் உரியியல் எச்சவியல் ஆகியவற்றில் அவ்அவ் சொற்களின் இலக்கணங்களை விளக்கிச் சொல்லதிகாரத்தை நிறைவுசெய்கிறார். தொல்காப்பியரின் சொல் லதிகாரத்தை அடித்தளமாகக் கொண்டு பின்னர் இலக்கண ஆசிரியர்கள் செய்த நூல்களில் சொல்லியல் குறித்த விரிவுகளும் சுருக்கங்களும் பல இடம்பெற்றுள்ளன. இவற்றை எல்லாம் கவனத்தில் எடுத்து காலத்துக்கேற்ற வகையில் சொல்லியல் கருத்துக்கள் சொல்லதிகாரம் எனும் இவ்வதிகாரத்தில் எடுத்து நோக்கப்படுகிறது.

## சொல் - சொற்பாகுபாடு

ஓரெழுத்து தனித்து நின்றோ ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் சேர்ந்து நின்றோ பொருள் தரும்போது அவை சொற்களாகின்றன. சொல்லை இயற்சொல் திரிசொல் வடசொல் திசைச்சொல் என வகைப்படுத்துவர்.

### இயற்சொல்

கற்றவர்களும் கல்லாதவர்களும் பொருளைத் தெரிந்து கொள்ளக் கூடிய விதமாக இயல்பாகப் பொருளைத் தரும் சொல் இயற்சொல் எனப்படும்.

- வந்தான் பாடினான் வானம் நிலம்

## திரிசொல்

கற்றவர்கள் மட்டும் பொருளைத் தெரிந்து கொள்ளக் கூடிய செய்யுளிலே வழங்கி வரும் சொல் திரிசொல் எனப்படும். இச்சொற்களைப் பலபொருள் தரும் ஒருசொல் ஒருபொருள் தரும் பலசொல் என வகைப்படுத்தலாம்.

- ஆறு - நதி வழி ஒழுக்கம், (6) ஓரெண் (பலபொருள் தரும் ஒருசொல்)
- வீடு - இல்லம், உறையுள், மனை (ஒருபொருள் தரும் பலசொல்)

## வடசொல்

வடமொழிச் சொற்கள் தமிழில் பெரும் செல்வாக்குப் பெற்ற காரணத்தால் இவற்றுக்குத் தனியான பிரிவை இலக்கணகாரர் அமைத்துள்ளனர். இவற்றை தற்சமம் தற்பவம் என இரண்டாக வகுப்பர்.

**தற்சமம்** - தமிழ் மொழிக்கும் ஆரியமொழிக்கும் பொதுவான எழுத்தொலிகளால் ஆன சொற்கள் தமிழ்மொழி ஒலிமரபுக்புக்கு மாறுபடாது வழங்கும் வழக்கு எனப்படும்.

- கமலம் குங்குமம் காரணம் அமலன்

**தற்பவம் -** வடமொழிக்கு மட்டும் உரிய சிறப்பெழுத்துகளாலும் வடமொழி ஒலிமரபுக்கு ஏற்பவும் அமைந்த சொற்களை தமிழ் ஒலிமரபுக்கேற்ப அமைத்து வழங்குதல் தற்பவம் எனப்படும்.

- புஷ்பம் ஹாஸ்யம் ஹோல் ஜவான்

## திசைச்சொல்

வடசொல் அல்லாத தெலுங்கு கன்னட மலையாள மராத்திய போர்த்துக்கேய ஒல்லாந்த ஆங்கிலேய பிரெஞ்சு அரபு உருது போன்ற பலதிசை மொழிகளில் இருந்து தமிழ் மொழியில் வந்து வழங்கும் சொற்களையெல்லாம் திசைச் சொற்கள் என்பர்.

- தெலுங்கு - கொலு கொலுசு
- கன்னடம் - அட்டிகை சொத்து
- மலையாளம் - கொச்சி தளவாடம்
- மராத்தி - சாம்பார் பட்டாணி
- போர்த்துக்கேயம் - கோப்பை பீங்கான்
- ஒல்லாந்து - கக்கூசு சாக்கு
- ஆங்கிலம் - பென்சில் இஞ்சினியர்
- பிரெஞ்சு - குசினி பீரோ
- அரபு - பாங்கு சைத்தான்
- உருது - கச்சேரி அண்டா

# வழுக்கள்

சொற்றொடரில் சொற்கள் தொடரும்போது திணை பால் இடம் காலம் வினா விடை மரபு ஆகிய ஏழும் மாறுபட்டு முன்நின்ற சொல்லுக்கு ஏற்றமாதிரி இல்லாமல் சோம்பல் மறதி தடுமாற்றம் முதலிய காரணங்களினால் இலக்கணக் குற்றம் தோன்ற வருவது வழுநிலை ஆகும். ஒருமொழியின் இருவேறுபட்ட வடிவங்களே பேச்சு மொழியும் எழுத்து மொழியும் ஆகும். மொழி கற்போர் பேச்சுவழக்கு எழுத்துவழக்கு என்ற இரண்டுக்கும் இடையிலான வேறுபாட்டை நன்கறிந்து பொருத்தமான இடத்தில் பொருத்தமான வடிவத்தைப் பயன்படுத்தினால் இத்தகைய வழுக்கள் வராமல் பார்த்துக் கொள்ளலாம்.

## திணைவழு

இரு திணைகளில் ஒருதிணைச் சொல்லை மற்றொரு திணைப் பொருளில் கூறுவது திணைவழு எனப்படும். அதாவது உயர்திணைச் சொல்லை அ∴றிணையிலும் அ∴றிணைச் சொல்லை உயர்திணையிலும் சொல்வது திணைவழு ஆகும்.

- அவள் வந்தது.

## பால்வழு

ஐம்பால்களில் ஒருபாலுக்குரிய சொல்லை மற்றொரு பாலுக்குரிய சொல்லோடு இணைத்துக் கூறுவது பால்வழு எனப்படும்.

- தம்பி பாடினாள்

## இடவழு

மூவிடங்களுள் ஓர் இடத்துக்குரிய சொல்லை மற்றோர் இடத்துக்குரிய சொல்லாகக் கூறுவது இடவழுவாகும்.

- நான் வந்தாள்.

## காலவழு

முக்காலங்களுள் ஒரு காலத்துக்குரிய சொல்லை மற்றொரு காலத்துக்குரிய சொல்லாகக் கூறுவது காலவழுவாகும்.

- நேற்று வருவான்

## வினாவழு

வினாவைப் பொருட்பொருத்தமின்றி வினாவுவது வினாவழு எனப்படும்.

- சிவப்புச் சேவல் எத்தனை முட்டை இடும்?

## விடைவழு

வினாவோடு தொடர்பில்லாத விடையைக் கூறுவது விடைவழு எனப்படும்.

- பாட்டுப் பாடினாயா? என்று கேட்டால் தண்ணீர் குடித்தேன் என்று விடைகூறுவது.

## மரபுவழு

முறைமைக்கு மாறாகத் தொன்று தொட்டு வழங்கி வரும் மரபிலிருந்து மாறிவருவது மரபுவழு எனப்படும்.

- காகம் கூவியது. (மரபுச்சொல் கரைந்தது).

# வழுவமைதி

இலக்கண வரம்பினை மீறி முறை இல்லாமல் மக்கள் பேசும் பேச்சினை ஒதுக்கி விடலாமா? முடியாது ; கூடாது. தொன்று தொட்டு ஒருமரபாக வந்துகொண்டிருப்பதைத் தள்ளிவிடலாமா? இலக்கணகாரர் இவற்றையெல்லாம் வழு என்று சொன்ன போதிலும் அவற்றிற்கும் அமைதி கூறி இலக்கணத்தில் சேர்த்துக் கொண்டனர். இவற்றையே வழுவமைதி கள் என்பர்.

## திணை வழுவமைதி

மகிழ்ச்சி உயர்வு சிறப்பு சினம் இழிப்பு ஆகிய காரணங்களினால் ஒருதிணைச்சொல் மற்றொரு திணைச்சொல்லாக வருவது திணைவழுவமைதி எனப்படும்.

- பசுவை நம்முடைய இலட்சுமி வந்துவிட்டாள். என்பது. - மகிழ்ச்சி
- முயலார் வந்தார். - உயர்வு
- எங்கள் சொத்து எங்கள் பிள்ளைகள்தான். - சிறப்பு
- குறிப்பறிய மாட்டாதவன் மரம் . - சினம்
- மரம்போல்வர் மக்கட் பண்பிலாதவர். - குறள் 997 - இழிப்பு

## பால் வழுவமைதி

மகிழ்ச்சி உயர்வு சிறப்பு சினம் இழிப்பு ஆகிய காரணங்களினால் ஒரு பாற்சொல் மற்றொரு பாற்சொல்லாக வருவது பால் வழுவமைதி எனப்படும்.

- என் மகனே வாடி! - மகிழ்ச்சி
- தலைவர் உரைத்தார். - உயர்வு
- கண்ணன் என்தாய். - சிறப்பு
- தேரான் பிறனில் புகல். - குறள் 154 (தேரார்) - சினம்
- இவன் ஒரு பெண். - இழிப்பு

## இட வழுவமைதி

தன்மை முன்னிலை படர்க்கை ஆகிய மூவிடங்களுள் ஓர் இடத்துக்குரிய சொல்லை மற்றோர் இடத்துக்குரிய சொல்லாகக் கூறுவது இட வழுவமைதியாகும்.

- வெறுப்புற்ற மனிதன் தன்னை நோக்கி இந்த உலகத்தில் நீ எதற்காக வாழவேண்டும்? (தன்மை முன்னிலை ஆகியுள்ளது.)
- நீயோ அவனோ யார் இது செய்தார்?

## கால வழுவமைதி

முக்காலங்களுள் ஒரு காலத்துக்குரிய சொல்லை விரைவு மிகுதி தெளிவு இயல்பு ஆகிய காரணங்களினால் மற்றொரு காலத்துக்குரிய சொல்லாகக் கூறுவது கால வழுவமைதி ஆகும்.

- சோறு உண்ணச் செல்லுகின்றவனை உண்டாயா? என்று வினவ உண்டேன் உண்டேன் என பதில் சொல்வது. (எ-காலம் இ-காலமாயிற்று.) - விரைவு
- நீ அவனுடன் சண்டையிட்டால் மடிந்தாய். (பெரும்பாலும்)-மிகுதி
- சோழன் கண் சிவக்க பகைநாடு எரிந்தது. - உறுதி
- சிறுவனாக இருந்தபொழுது நான் விளைபாடுவது இங்கேதான். - இயல்பு

## வினாவிடை வழுவமைதி

வினாவைப் பொருட்பொருத்தமின்றி வினாவுவதும் வினாவோடு தொடர்பில்லாத விடையைக் கூறுவதும் வினாவிடை வழுவமைதி எனப்படும்.

- ஒரு பெண்ணின் கண் பிறழ்ந்ததோ? கயல் பிறழ்ந்ததோ? என்ற வினாவுக்கு கண் பிறழ்ந்தது. கயல் பிறழ்ந்தது. என விடை கூறவேண்டும். இதற்குப் பதிலாக ஒரு பெண் பிறழ்ந்தாளோ? கயல் பிறழ்ந்தாளோ? என்று வினாவுதலும் ஒரு பெண் பிறழ்ந்தாள் என விடை கூறுவதும் வினாவிடை வழுவமைதியாகும்.

## மரபு வழுவமைதி

முறைமைக்கு மாறாகத் தொன்று தொட்டு வழங்கி வரும் மரபிலிருந்து மாறிவருவது மரபுவழு எனப்படும். இங்ஙனம் மரபில்வழு ஏற்பட்டு அமைதி கூறுவதற்கு மரபுவழுவமைதி எனப்படும்.

- **கத்தும்** குயிலோசை கேட்டுத் துயில் எழுந்தேன். (குயில் கத்துவதில்லை கூவும்)

__குறிப்பு__

எண் வழுவமைதியும் உண்டெனினும் அது ஒருமை பன்மை மயக்கம் என்ற வரப்புக்குள் வருவதால் அது வழுவமைதியாகக் காட்டப்பெறவில்லை.

- காது இரண்டும் கேட்கிறது.

---

# சொல் வழக்கு

மக்கள் பேசும் பொழுது சொல்லை பலவகையாகப் பேசுவர். அவை இயல்பு வழக்கு தகுதி வழக்கு என இருவகைப்படும்.

## இயல்பு வழக்கு

இயல்பாகப் பேசுவது இயல்புவழக்கு ஆகும். இது இலக்கணமுடையது இலக்கணப் போலி மரூஉ என மூன்று வகைப்படும்.

இலக்கணமுடையது - இலக்கணம் சிதையாமல் வழங்கிவரும் சொற்கள்.

- நிலம் நீர் காற்று ஆகாயம்
- நாய் குரைக்கும். காகம் கரையும்.

இலக்கணப் போலி - இலக்கணம் இல்லாதபோதிலும் இலக்கணம் உடையதுபோலச் சான்றோரால் தொன்றுதொட்டு வழங்கப்பட்டு வருவது

இலக்கணப்போலி எனப்படும்.

- கால்வாய் - வாய்க்கால்
- இல்முன் - முன்றில்
- நகர்ப்புறம் - புறநகர்

மரூஉ - எழுத்துகள் திரிந்தும் தோன்றியும் கெட்டும் இலக்கணத்தில் சிதைந்து தானே மருவி வழங்கி வருவது மரூஉ மொழி எனப்படும்.

- பேர் - பெயர்
- போது - பொழுது
- அருமந்த பிள்ளை - அருமருந்தன்ன பிள்ளை

## தகுதி வழக்கு

ஒருபொருளுக்கு இயல்பாக அமைந்த பெயரை விடுத்துத் தகுதியான வேறு பெயரால் கூறுவது தகுதிவழக்கு எனப்படும். இது இடக்கரடக்கல் மங்கலம் குழூஉக்குறி என மூன்று வகைப்படும்.

**இடக்கரடக்கல்** - பலபேர் உள்ள சபையிலே சொல்லத்தகாத சொல்லை விடுத்து தகுதியான பிற சொற்களால் வழங்கும் வழக்கு இடக்கரடக்கல் எனப்படும்.

- கால்கழுவி வந்தான். – மலம் கழுவி வந்தான்.

**மங்கலம்** - அமங்கலச் சொற்களை விலக்கி மங்கலமாகக் கூறுவது மங்கல வழக்கு எனப்படும்.

- இறைவனடி சேர்ந்தார், துஞ்சினார் - செத்தார்

**குழூஉக்குறி** - ஒரு குழுவைச் சேர்ந்தவர்கள் ஏதாவதொரு காரணத்தால் ஒரு பொருளினது உண்மையான பெயரை விடுத்து பிறர் அறியாத வகையில் வேறொரு சொல்லினால் தம்முட் குறியீடாக உரைப்பது குழூஉக்குறி எனப்படும்.

- பொற்கொல்லர் பொன்னைப் பறி என்று கூறுவர்.
- வணிகர் ஒரு பொருளின் விலையை பிஞ்சு என்று கூறுவர்.

---------------

# பதவியல்

## பகுசொல் பகாச்சொல்

சொற்கள் அமைந்துள்ள முறைமையில் அவை குறிக்கின்ற பொருளை உணர்வதற்கு வேண்டிய பல்வேறு கூறுகளைக் கொண்டிருக்கும். இவற்றைப் பிரித்து அவற்றின் உண்மைப் பொருளை விளங்கிக் கொள்ளலாம். எல்லாச் சொற்களையும் இவ்விதம் பிரிக்க முடியாது. அத்தகைய பகுக்க முடியாத சொல் பகாச்சொல் எனப்படும்.

- கண் தம்பி முயல் வா ஓடு

கூறுகளாகப் பிரிக்கக் கூடிய சொல் பகுசொல் எனப்படும்.

- தமிழர் உழவன் ஓடினான் வருவான்

பகுசொல் உறுப்புகள்

சொற்களைப் பகுக்கும்போது அவற்றின் உறுப்புகள் ஒவ்வொன்றிற்கும் பெயர் உண்டு. பகுதி சந்தி இடைநிலை சாரியை விகுதி என்பனவே அவை.

## தமிழ் மொழியில் வசன அமைப்பு

சொற்கள் பொருள்படத் தொடர்ந்துநின்று ஒரு கருத்தை முழுமையாக வெளிப்படுத்துவது வாக்கியமாகும். ஒரு வாக்கியத்தின் முக்கியமான உறுப்புகள் எழுவாயும் பயனிலையுமாகும். வாக்கியத்தின் கருத்துத் தொடங்கும் இடம் எழுவாய் ஆகும். எழுவாய் பயனிலையுடன் முடியும் போதே வாக்கியம் முழுமை பெற்று கருத்து வெளிப்படுகிறது. வாக்கியத்தின் எழுவாயானது முடிக்கும் பகுதியைக் கொண்டே நிறைவு பெறும். இவ்வாறு கருத்து முற்றுப் பெற்று நிற்கும் இடம் பயனிலை ஆகும். பயனிலைக்கு முன்னால் யார்? எது? எவை? என்னும் வினாக்களை எழுப்புவதன் மூலமாக வாக்கியத்தின் எழுவாயைக் கண்டறிந்து கொள்ளலாம்.

- கமலா பாடினாள்.

இதில் கருத்து முற்றுப பெற்று நிற்கும் இடம் பாடினாள் என்பது. இங்கு பாடினாள் பயனிலை. இதன் முன் யார்? என்ற வினாவை எழுப்பி னால் யார் பாடினாள்? கமலா பாடினாள் என்று வரும். இங்கு கமலா எழுவாய். அதாவது கருத்துத் தொடங்கும் இடம் கமலா.

பயனிலையோடு தொடர்புடையதாக வாக்கியத்தில் அமையும் இன்னொரு உறுப்பு செயப்படுபொருளாகும். முதலில் பயனிலையை இனங்கண்டு பயனிலைக்கு முன்னால் யாரை? எதை? எவற்றை? என்னும் வினாக்களை எழுப்புவதன் மூலமாக வாக்கியத்தின் செயப்படுபொருளைக் கண்டறிந்து கொள்ளலாம்.

- மோகன் வந்தான்.
- மோகன் சோறு சாப்பிட்டான்.

இவ்வாக்கியங்கள் இரண்டும் மோகன் என்னும் சொல்லை எழுவாயாகக் கொண்டு அமைந்துள்ளன. வந்தான் என்பது செயப்படுபொருள் ஒன்றைக் கொள்ளவில்லை. ஆனால் சாப்பிட்டான் என்பது அதனோடு தொடர்புடைய செயப்படுபொருளைத் தெளிவாக உணர்த்துகிறது. அவ்வாக்கியத்தில் வரும் சோறு என்பது செயப்படுபொருள்.

## எழுவாய் பயனிலை செயப்படுபொருள் அடைமொழிகள்

வாக்கியத்திலே எழுவாய் பயனிலை செயப்படுபொருள் ஆகிய உறுப்புகளுடன் அதன் அடைமொழிகளும் இடம் பெறுவதுண்டு. பண்பையோ தன்மையையோ சிறப்பித்து அல்லது விளக்கிக் கூறுவது அடைமொழி. ஒரு கருத்தை விரிவாகவும் தெளிவாகவும் புலப்படுத்துவதற்கும் இவ்வடைமொழிகள் உதவுகின்றன. அவை எழுவாய் அடைமொழி பயனிலை அடைமொழி செயப்படுபொருள் அடைமொழி என மூன்று வகைப்படும்.

1. வெள்ளைப் பசு மேய்ந்தது.
2. மணிமேகலை அழகாக ஆடினாள்.
3. பச்சைக்கிளி சிவப்புப் பழத்தை மெல்லக் கொத்தித் தின்றது.

முதலாவது வாக்கியத்தின் எழுவாய் பசு. அதனைச் சிறப்பித்துக் கூறுவதாக வெள்ளை என்னும் சொல் வந்துள்ளது. எழுவாய்ச் சொல்லை சிறப்பிக்க வருவது எழுவாய் / பெயர் அடைமொழி எனப்படும்.

இரண்டாவது வாக்கியத்தின் பயனிலை ஆடினாள். அதன் தன்மையை விளக்குவதாக அழகாக என்னும் சொல் வந்துள்ளது. பயனிலைச் சொல்லை சிறப்பிக்க வருவது பயனிலை / வினை அடைமொழி எனப்படும்.

மூன்றாவது வாக்கியத்தின் செயப்படுபொருள் பழம். அதன் தன்மையை விளக்குவதாக சிவப்பு என்னும் சொல் வந்துள்ளது. செயப்படுபொருளை சிறப்பிக்க வருவது செயப்படுபொருள் / பெயர் அடைமொழி எனப்படும்.

வாக்கியத்தில் எழுவாய் செயப்படுபொருள் என்பன வெளிப்படாமல் மறைந்து வருதலும் உண்டு. எழுவாய் செயப்படுபொருள் என்பன எப்போதும் பெயர்ச் சொற்களாகவே இருக்கும். பயனிலை பெரும்பாலும் வினைச் சொற்களாகவே இருக்கும். சில வாக்கியங்கள் செயப்படுபொருள் இல்லாதவை. ஓடு போ வா இரு சிரி அழு போன்ற வினையடியாகப் பிறக்கும் வினைமுற்றுகள் செயப்படுபொருள் குன்றிய வினைகளாம்.

1. புத்தகத்தை எடுத்து வாசி. நீ - தோன்றா எழுவாய்
2. விருந்துக்கு வாருங்கள். நீங்கள் - தோன்றா எழுவாய்

1. கண்ணனின் பேச்சைக் கேட்ட தந்தை மிகவும் பாராட்டினார்.
   கண்ணனின் பேச்சைக் கேட்ட தந்தை கண்ணனை மிகவும் பாராட்டினார்.
   கண்ணனை - தோன்றாச் செயப்படுபொருள்

2. அக்கா மேடையில் அழகாகப் பாடுகின்றாள்.
   அக்கா மேடையில் அழகாகப் பாட்டுப் பாடுகின்றாள்.
   பாட்டு - தோன்றாச் செயப்படுபொருள்

- நான் கடைக்குப் போனேன். - போ
- நீ வீட்டுக்கு வந்தாய். - வா
- அவர்கள் மண்டபத்தில் இருந்தார்கள். - இரு
- புலி விரைவாக ஓடியது. - ஓடு

இவை செயப்படுபொருள் குன்றிய வினைகளாம்.

தமிழ் மொழியில் வசனம் அமைக்கும் பொழுது எழுவாய் செயப்படுபொருள் பயனிலை என்ற வரிசையில் அமைப்போம். ஆனால் ஆங்கில மொழியில் எழுவாய் பயனிலை செயப்படுபொருள் என்ற வரிசையில் அமைப்போம்.

- நான் சோறு சாப்பிட்டேன்

| | | |
|---|---|---|
| நான் | சோறு | சாப்பிட்டேன் |
| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
| S | 0 | V |
| subject | object | verb/predicate |

- I ate rice

| | | |
|---|---|---|
| I | ate | rice |
| subject | verb/predicate | object |
| S | V | O |
| எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |

| | | | |
|---|---|---|---|
| தமிழ் வசன நடை | S O V | pattern. | |
| ஆங்கிலத்தில வசன நடை | S V O | pattern. | |
| நான் | | | 1 |
| நான் படித்தேன். | | | 2 |
| நான் புத்தகம் படித்தேன். | | | 3 |
| நான் கதைப் புத்தகம் படித்தேன். | | | 4 |
| நான் இன்று கதைப் புத்தகம் படித்தேன். | | | 5 |

## தனிவாக்கியம் தொடர்வாக்கியம்

ஓர் எழுவாய் ஒரு பயனிலையைப் பெற்று வருவது தனிவாக்கியம் ஆகும். இது முற்றுப் பெற்ற ஒரே ஒரு செயலை மட்டும் கூறும்.

- திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்.

இது ஓர் எழுவாய் ஒரு பயனிலையைப் பெற்றுவந்த தனி வாக்கியம்.

தனி வாக்கியங்கள் பல இணைந்து ஒரு தொடர் வாக்கியம் அமையும். ஒரு வாக்கியத்தில் ஓர் எழுவாயின் ஒன்றுக்கு மேற்பட்ட செயல்களில் ஒரு செயல் மட்டும் முற்றுப் பயனிலை கொண்டு முடியும் வாக்கியம் தொடர் வாக்கியம் எனப்படும். தனி வாக்கியங்களைப் பொருத்தமான முறையில் இணைத்து ஒரு முற்றுவினை கொண்ட வாக்கியமாக்கலாம். வினைமுற்றை வினை எச்சமாக மாற்றியும் வினைமுற்றைப் பெயர் எச்ச மாக மாற்றியும் தனி வாக்கியங்களை ஒரு தொடர் வாக்கியமாக அமைக்கலாம். எண் உம்மை சேர்த்தும் தனி வாக்கியங்களை ஒரு தொடர் வாக்கியமாக அமைக்கலாம்.

- மாதவி கண் விழித்துப் படித்து தேர்வில் சிறப்பாக எழுதினாள்.

இங்கு இரண்டு செயல்கள் கூறப்படுகின்றன. ஒன்று படித்தல். இரண்டாவது எழுதுதல்.

படித்து குறைவினையாக நிற்கின்றது. எழுதினாள் வினைமுற்றாக நிற்கின்றது.

**வினைமுற்றை வினை எச்சமாக மாற்றுதல்**

1. நான் யாழ்ப்பாணத்துக்குச் சென்றேன்.
2. அங்கிருந்து தொலைபேசியில் பேசினேன்.

- நான் யாழ்ப்பாணத்துக்குச் சென்று தொலைபேசியில் பேசினேன்.

**வினைமுற்றைப் பெயர் எச்சமாக மாற்றுதல்**

1. காட்டில் யானை ஒன்று வாழ்ந்து வந்தது.
2. அது நாட்டில் புகுந்து பல பயிர்களை அழித்தது.

- காட்டில் வாழ்ந்த யானை நாட்டில் புகுந்து பல பயிர்களை அழித்தது.

**எண் உம்மை சேர்த்து மாற்றுதல்**

1. ஔவையார் கொன்றை வேந்தன் பாடினார்.
2. ஔவையார் ஆத்திசூடி பாடினார்.

- ஔவையார் கொன்றை வேந்தனும் ஆத்திசூடியும் பாடினார்.

## கலப்பு வாக்கியம்

ஒரு தலைமைத் தொடருடன் சார்பு நிலைத் தொடர் இணைந்து வரும் வாக்கியம் கலப்பு வாக்கியமாகும். சார்பு நிலைத் தொடர்கள் முற்று வாக்கியத் தொடர்களாகவும் எச்ச வாக்கியத் தொடர்களாகவும் பெயர்த் தொடராக்கப்பட்ட வாக்கியத் தொடராகவும் வாக்கியத்தில் அமையும்.

- "கனடாவுக்குச் சென்று வந்தேன்" என்று மாமா கூறினார்.
  இதில் மாமா கூறினார் என்பது . தலைமைத் தொடர்
  கனடாவுக்குச் சென்று வந்தேன். - சார்பு நிலைத் தொடர்

  இங்கு சார்பு நிலைத் தொடர் என்று என்னும் இணைப் பிடைச் சொல்லால் தலைமை வாக்கியத் தொடருடன் இணைக்கப்பட்டுள்ளது.

- பாடகி சுசீலா பாடிய பாடலைக் கேட்டு நான் மிகவும் இரசித்தேன்.
  இதில் நான் மிகவும் இரசித்தேன் என்பது - தலைமைத் தொடர்
  பாடகி சுசீலா பாடிய பாடலைக் கேட்டு - சார்பு நிலைத் தொடர்

## கூற்று வாக்கியம் (செப்புவாக்கியம்)

ஓர் உண்மையை அல்லது ஒரு செய்தியைக் கூறுவதாக வரும் வாக்கியம் கூற்று வாக்கியம் ஆகும்.

- சூரியன் காலையில் உதிக்கும்.
- இன்று பாடசாலை விடுமுறை.

## வினா வாக்கியம்

ஏதோ ஒன்றை அறியும் நோக்குடன் வினவுவதாக அமையும் வாக்கியம் வினா வாக்கியம் ஆகும். இந்த வாக்கியம் வினா அடையாளத்துடன்(?) வரும்.

- நீ பாடசாலைக்கு வருகிறாயா?
- அமலன் நீச்சல் போட்டியில் வெற்றி பெற்றானா?

## வியப்பு வாக்கியம் (மெய்ப்பாட்டு வாக்கியம்)

உள்ளத்திலே எழுகின்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் முறையில் அமைவது வியப்பு வாக்கியம் அல்லது மெய்ப்பாட்டு வாக்கியம் எனப்படும். உணர்ச்சி பலவகைப்படும். வியப்பு இரக்கம் பெருமிதல் வெறுப்பு சினம் முதலிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வகையிலே வாக்கியங்கள் அமைந்திருக்கும். இத்தகைய உணர்ச்சிகளை வெளிப் படுத்த உதவும் சொற்கள் இடைச்சொற்களைப் பெற்று அவ்வாக்கியங்களில் இடம்பெற்றிருக்கும்.

- ஆகா! இந்தப் பூங்கா எவ்வளவு அழகாக உள்ளது.
  - வியப்பு
- பாவம்! இவன் சுனாமியில் தனது தாயை இழந்து விட்டான்.
  - இரக்கம்
- இம்முறை ஒலிம்பிக்கிலும் எமக்குத்தான் தங்கப்பதக்கம்.
  - பெருமிதம்
- சீ இப்படியும் வாழலாமா?
  - வெறுப்பு
- என்னே மனிதன் இவன்?
  - சினம்

---------------

# பெயரியல்

## சொற்களின் வகைகள் (Etimology)

சொல் நான்கு வகைப்படும். அவை பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் என்பன.

## பெயர்ச்சொல் Noun

ஐம் புலன்களால் உணரக் கூடியதும் உள்ளத்தால் அறியக் கூடியதுமான பொருள்களைக் குறிப்பது பெயர்ச்சொல் எனப்படும். பெயர்ச்சொல் ஆறுவகைப்படும். அவை பொருட்பெயர் இடப்பெயர் காலப்பெயர் சினைப்பெயர் குணப்பெயர் தொழிற்பெயர் என்பன.

ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது பொருட்பெயர் எனப்படும்.

- முட்டை முயல் பழம் கண் மரம்

இடத்தின் பெயரைக் குறிப்பது இடப்பெயர் எனப்படும்.

- யாழ்ப்பாணம் மட்டக்களப்பு நல்லூர் வவுனியா சந்தை

காலத்தின் பெயரைக் குறிப்பது காலப்பெயர் எனப்படும்.

- கோடை இரவு பங்குனி செவ்வாய் ஆண்டு

ஒன்றின் பகுதிப் பொருளை அல்லது உறுப்பைக் குறிப்பது சினைப்பெயர் எனப்படும்.

- வாய் இலை வால் பூ இறகு

ஒரு பொருளின் நிறம் சுவை உணர்ச்சி வடிவம் போன்றவற்றின் பண்புகளைக் குறிப்பது குணப்பெயர் எனப்படும்.

- வெண்மை கறுப்பு இனிப்பு வட்டம் அன்பு

தொழிலின் பெயரைக் குறிப்பது தொழிற்பெயர் எனப்படும்.

- பாடுதல் சிரித்தல் நீந்துதல் ஓடுதல் ஆடுதல்

## இடுகுறிப்பெயர்

எதுவித காரணமும் இல்லாமல் காலங்காலமாக ஆன்றோரால் வழங்கி வரும் பெயர் இடுகுறிப் பெயர் எனப்படும்.

- மரம் கல் நீர்

## காரணப்பெயர்

ஏதேனும் ஒருகாரணம் பற்றியோ பல காரணங்கள் பற்றியோ வழங்கி வரும் பெயர் காரணப் பெயர் எனப்படும்.

| | |
|---|---|
| முக்காலி | - மூன்று கால்கள் இருப்பதன் காரணத்தால் இப்பெயர் வந்தது. |
| பறவை | - பறக்கும் காரணத்தால் இப்பெயர் வந்தது. |
| முக்கண்ணன் | - மூன்று கண்கள் இருப்பதன் காரணத்தால் சிவபெருமானுக்கு இப்பெயர் வந்தது. |

## வினையாலணையும் பெயர்

Personal Noun in the form of a Finite verb

ஒரு வினை முற்றுச் சொல் தனது வினை முற்றுப் பொருளைக் காட்டாமல் அவ்வினையைச் செய்தவனையோ அல்லது பொருளையோ குறிக்கும் பெயர்ச் சொல்லாக மாறிப் பெயராக வருவது வினையால் அணையும் பெயராம்.

உ-ம் மாணவர் நன்றாகப் படித்தனர்.
படித்தவர் பரீட்சையில் வெற்றி பெற்றனர். - இதில் படித்தவர் வினையால் அணையும் பெயராம்.

## ஆகுபெயர்

ஒன்றன் இயற்பெயர் அந்தப் பொருளைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய இன்னொரு பொருளுக்குப் பெயராகத் தொன்று தொட்டு வழங்கி வருவது ஆகுபெயர் எனப்படும். பெயர்ச்சொல் பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என ஆறு வகைப்படும். இப்பெயர்கள் அவற்றோடு தொடர்புடைய பொருளைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய இன்னொரு பொருளுக்குப் பெயராகி வரும்போது ஆறுவகை ஆகுபெயர்கள் பிறக்கின்றன.

உ-ம்

மீனா மல்லிகை சூடிச் சென்றாள்.
இங்கு மல்லிகை – பொருளாகு பெயர்
இங்கு மல்லிகை என்பது முழுச் செடியையும் குறிக்காது அதன் மலருக்கு மட்டும் பெயராகி வந்திருக்கிறது.

உதைபந்தாட்டப் போட்டியில் யேர்மனி முதலிடம் பெற்றது.
இங்கு யேர்மனி - இடவாகு பெயர்
இங்கு யேர்மனி என்பது அந்த நாட்டினைக் குறிக்காது அந்த நாட்டு விளையாட்டு வீரருக்குப் பெயராகி வந்திருக்கிறது.

மாரி விளைந்ததால் உணவுத் தட்டுப்பாடு நீங்கியது.
இங்கு மாரி - காலவாகு பெயர்
இங்கு மாரி என்பது காலத்தினைக் குறிக்காது பயிருக்கு பயராகி வந்திருக்கிறது.

உழவர்கள் நெல் விதைத்தனர்
இங்கு நெல் - சினையாகு பெயர்
இங்கு நெல் என்பது சினை (பயிரின் உறுப்பு) யைக் குறிக்காது பயிருக்கு பெயராகி வந்திருக்கிறது.

வெள்ளை அடித்து வீட்டை அழகு படுத்தினோம்.
இங்கு வெள்ளை - குணவாகு பெயர்
இங்கு வெள்ளை என்பது குணத் (நிறத்தின் பெயர்) தைக் குறிக்காது சுண்ணாம்புக்கு பெயராகி வந்திருக்கிறது.

கடற்கரையில் சுண்டல் விற்பார்கள்.
இங்கு சுண்டல் - தொழிலாகு பெயர்
இங்கு சுண்டல் என்பது தொழிலின் பெயரைக் குறிக்காது உணவுக்கு பெயராகி வந்திருக்கிறது.

## தொழிற்பெயர்

ஒரு தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற் பெயர் எனப்படும். இதில் பால் எண் இடம் காலம் ஆகியன தோன்றாது பொதுவாக வரும். இதன் விகுதிகள் தல் அல் அம் ஐ கை வை கு பு உ தி சி வி உள் காடு பாடு அரவு ஆனை மை து என்னும் பத்தொன்பதும் பிறவுமாகும். வினைமுற்றுச் சொற்களின் பகுதியோடு மேற்கண்ட விகுதிகளைச் சேர்த்தால் தொழிற்பெயராகும்.

| | | |
|---|---|---|
| உ-ம் | நடத்தல் | - தல் |
| | பாடல் | - அல் |
| | நாட்டம் | - அம் |
| | கொலை | - ஐ |
| | சேர்க்கை | - கை |
| | பறவை | - வை |
| | கணிப்பு | - பு |
| | செலவு | - வு |
| | மறதி | - தி |
| | ஆட்சி | - சி |
| | புலவி | - வி |
| | விக்குள் | - உள் |
| | சாக்காடு | - காடு |
| | கோட்பாடு | - பாடு |
| | தேற்றரவு | - அரவு |
| | வாரானை | - ஆனை |
| | அஞ்சாமை | - மை |
| | காய்த்து | - து |

---------------

# வினையியல்

## வினைச்சொல் Verb

ஒரு செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும். இது காலத்தைக் காட்டி வேற்றுமை சேராது திணை பால் எண் இடம் ஆகியவற்றைக் காட்டும்.

- நடந்தான் - உயர்திணை ஆண்பால் ஒருமை படர்க்கை இறந்த காலம்
- வருகின்றாள் - உயர்திணை பெண்பால் ஒருமை படர்க்கை நிகழ் காலம்
- செய்வார்கள் - உயர்திணை பலர்பால் பன்மை படர்க்கை எதிர்காலம்
- பறக்கிறது - அஃறிணை ஒன்றன்பால் படர்க்கை நிகழ்காலம்
- மேய்ந்தன - அஃறிணை பலவின்பால் படர்க்கை இறந்தகாலம்

மேலே காட்டப்பட்ட வினைச் சொற்கள் திணை பால் எண் இடம் காலம் ஆகியவற்றைக் காட்டி முற்றுப்பெற்று நிற்பதைக் காணலாம். அவ்விதம் முற்றுப் பெற்றமையைக் காட்டும் வினைச் சொல் வினைமுற்று எனப்படும்.

ஒரு செயலைக் குறித்து நிற்கும் சொல் வினைச்சொல் எனப்படும். அது வேற்றுமையை ஏற்காது. திணை பால் எண் இடம் காலம் என்பவற்றைக் காட்டும். இது தெரிநிலைவினை குறிப்புவினை என இரண்டு வகைப்படும்.

## தெரிநிலை வினைமுற்று Finite Verb

திணை, பால் எண் இடம் காலம் ஆகியவற்றை வெளிப்படையாகக் காட்டிச் சொல் முடிந்து தனியாக வருவது தெரிநிலை வினைமுற்றாகும். இது செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செய்பொருள் ஆகிய ஆறையும் தோன்றச் செய்து பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் ஆகியவற்றைச் சார்ந்து வரும்.

உ-ம் ஓவியன் சித்திரம் வரைந்தான்.

இதில் வரைந்தான் என்பது தெரிநிலை வினைமுற்று. இதில் உயர் திணை ஆண்பால் இறந்தகாலம் வெளிப்படையாகத் தெரிகின்றது.

**இலக்கணத் தொகுப்பு**

| | |
|---|---|
| ஓவியன் | - செய்பவன் |
| தூரிகை வண்ணம் | - கருவி |
| சுவர் | - நிலம் |
| வரைந்தான் | - செயல் இறந்த காலம் |
| சித்திரம் | - செய்பொருள் |

| | |
|---|---|
| வரைந்தான் சித்திரம் | - பொருட்பெயர் |
| திரண்டது ஊர் | - இடப்பெயர் |
| புலர்ந்தது காலை | - காலப்பெயர் |
| உதிர்ந்தன இலைகள் | - சினைப்பெயர் |
| பொங்கியது கோபம் | - குணப்பெயர் |
| முடிந்தது கல்வி | - தொழிற் பெயர் |

தெரிநிலை வினைமுற்றில் பல்வேறு இடைநிலைகள் மூன்று காலத்தையும் உணர்த்துகின்றன.

உம் என்னும் விகுதி எதிர் காலத்தைக் காட்டுகின்றது.

| | |
|---|---|
| த் ட் ற் இன் ன் | - இறந்த காலம் |
| கின்று கிறு | - நிகழ்காலம் |
| ப் வ் | - எதிர்காலம் |

**இறந்த காலம்**

| | |
|---|---|
| தங்கை பாடம் படித்தாள் | - படி + த் + ஆள் |
| இராமன் சீதையைக் கண்டான் | - கண் + ட் + ஆன் |
| இராமன் காட்டுக்குச் சென்றான் | - செல் + ற் + ஆன் |
| கம்பன் பாட்டுப் பாடினான் | - பா + இன் + ஆன் |
| அவன் கோவிலுக்குப் போனான் | - போ + ன் + ஆன் |

**நிகழ்காலம்**

| | |
|---|---|
| கனிமொழி பேருந்தில் போகின்றாள் | - போ + கின்று + ஆள் |
| கரன் பந்தை அடிக்கிறான் | - அடி + கிறு + ஆன் |

**எதிர்காலம்**

| | |
|---|---|
| தேன்மொழி சுவையாகச் சமைப்பாள் | - சமை + ப் + ப் + ஆன் |
| மாதவி அழகாக ஆடுவாள் | - ஆடு + வ் + ஆள் |

**உம் விகுதி**

| | |
|---|---|
| பட்டம் வானில் பறக்கும் | - பற + க் + க் + உம் |

## குறிப்பு வினைமுற்று Symbolic Verb

திணை பால் முத லியவற்றை வெளிப்படையாகக் காட்டிக் காலத்தை மட்டும் குறிப்பாகக் காட்டிச் சொல் முடிந்து தனியாக வருவது குறிப்பு வினைமுற்றாம். இது பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் ஆகியவற்றைச் சார்ந்து வரும்.

பொன்னன் இவன் - இதில் பொன்னன் என்பது குறிப்பு வினைமுற்று. இதில் உயர்திணை ஆண்பால் வெளிப்படையாகத் தெரிகின்றது. ஆனால் காலம் வெளிப்படையாகத் தெரியவில்லை.

| | | |
|---|---|---|
| பொன்னன் | இவன் - | பொருட்பெயர் |
| யாழ்ப்பாணத்தான் | இவன் - | இடப்பெயர் |
| அமாவாசையான் | இவன் - | காலப்பெயர் |
| செங்கண்ணன் | இவன் - | சினைப்பெயர் |
| இனியன் | இவன் - | குணப்பெயர் |
| இன்சொல்லன் | இவன் - | தொழிற்பெயர் |

## தன்வினை - பிறவினை

ஒரு காரியத்தை அல்லது செயலை எழுவாயே செய்தால் அது தன்வினை எனப்படும். பிறரைக் கொண்டு செய்வித்தால் அது பிறவினை எனப்படும். தன்வினைப் பகுதியோடு வி அல்லது பி என்ற பிறவினை விகுதி எழுத்துகளைச் சேர்த்தால் பிறவினையாகும்.

| தன்வினை | பிறவினை |
|---|---|
| உண்டான் | உண்பித்தான் |
| கட்டினாள் | கட்டுவித்தாள் |
| தந்தார் | தருவித்தார் |
| செய்தார்கள் | செய்வித்தார்கள் |

## உடன்பாடு - எதிர்மறை

ஒரு செயல் நிகழ்வதை தெரிவிப்பது உடன்பாட்டு வினையாகும். செயல் நிகழாமையையும் செயலை மறுப்பதையும் உணர்த்தும் வினை எதிர்மறை வினையாகும்.

| உடன்பாடு | எதிர்மறை |
| --- | --- |
| உண்பான் | உண்ணான் |
| சிரிப்பேன் | சிரியேன் |
| கேட்பேன் | கேளேன் |
| செய்வேன் | செய்யேன் |

## ஏவல் வினை

முன்னிலையில் இருப்பவரை ஒரு செயலைச் செய்யும்படி ஏவுவது ஏவல்வினை எனப்படும்.

உ-ம் இந்தப் பாடலைப் பாடு!
இன்று வீட்டுக்கு வாருங்கள்!
தொலைபேசியில் அழையுங்கள்!
இங்கே பாடு வா அழை என்ற வினையடிகள் (ஒரு செயலைச் செய்யும்படி ஏவும் பொருளில் வந்துள்ளன.

## எதிர்மறை வினை

முன்னிலையில் இருப்பவரை ஒரு செயலைச் செய்யாதே என்பது எதிர்மறைவினை எனப்படும்.

உ-ம் இந்தப் பாடலைப் பாடாதே!
இன்று வீட்டுக்கு வராதீர்கள்!
தொலைபேசியில் அழைக்காதீர்கள்!
இங்கே பாடு வா அழை என்ற வினையடிகள் எதிர்மறைப் (ஒரு செயலைச் செய்ய வேண்டாம் எனத் தடுத்தல்) பொருளில் வந்துள்ளன.

## வியங்கோள் வினைமுற்று

க இய இயர் அ அல் ஆகிய விகுதிகளை இறுதியில் உடைய வினைச் சொற்கள் வியங்கோள் வினைமுற்று எனப்படும். அவை வாழ்த்துதல் வைதல் விதித்தல் வேண்டிக்கோடல் என்னும் பொருள்களில் வரும். வியங்கோள் என்பது இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாகிய ஏவல் சொல்லாகும்.

உ-ம் வாழ்க வாழிய வாழியர்

| | |
|---|---|
| மகனே வாழ்க! | (வாழ்த்துதல்) |
| துட்டனே ஒழிக! | (வைதல்) |
| அறிவுரைகள் தருக! | (விதித்தல்) |
| நோய் நீங்க மருந்து தருக! | (வேண்டிக்கோடல்) |

## செய்வினை-செயப்பாட்டுவினை

Active voice- Passive voice

**செய்வினை** Active voice

ஒரு வினையை / செயலை ஒருவர் முன்னின்று செய்வது செய்வினை எனப்படும்.

**செயப்பாட்டுவினை** Passive voice

ஒரு வினை / செயல் ஒருவனால் செய்யப்படுவது செயப்பாட்டு வினை எனப்படும்.

உ-ம் 1. திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.

2. திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.

ஆல் படு

1. இங்கு திருக்குறள் இயற்றுதலாகிய வினையை திருவள்ளுவரே முன்னின்று செய்கின்றார். எனவே இது செய்வினை ஆகின்றது.

2. இங்கு திருக்குறள் இயற்றப்படுதலாகிய வினைச்செயல் திருவள்ளுவரால் செய்விக்கப் பெற்றது என வருவதால் இது செயப்பாட்டுவினை ஆகின்றது.

இந்த இரண்டு வினைகளிலும் சொற்கள் மாறுபட்டு இருந்தாலும் பொருளில் மாறுபாடு இல்லை.

**செய்வினையைச் செயப்பாட்டுவினையாக மாற்றும் பொழுது ஏற்படும் மாற்றங்கள்.**

- செய்வினையில் உள்ள எழுவாய் செயப்பாட்டு வினையில் ஆல் உருபு சேர்த்து மூன்றாம் வேற்றுமையாக மாறும்.

- செய்வினையில் உள்ள செயப்படுபொருள் செயப்பாட்டு வினையில் எழுவாயாக மாறும்.
- செய்வினையில் உள்ள வினைமுற்று/பயனிலை வினையெச்சமாகிப் "படு" என்னும் உறுப்பினைப் பெற்று வரும்.

## இடைச்சொல் Articles, and Interjunctions

தனித்து நின்று பொருள் தராது பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் இடையிலும் முன்னும் பின்னும் நின்று பொருளை விளக்கும் சொல் இடைச் சொல் எனப்படும். இவை நுணுக்கமான பொருள் வேறுபாடுகளை உணர்த்துவதற்கும் உணர்ச்சிகளையும் கருத்துகளையும் மிகத் தெளிவாகவும் அழுத்தமாகவும் சுருக்கமான முறையிலும் வெளிப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றன. இடைச்சொற்களின் வகைகள் சில வருமாறு.

1. வேற்றுமை உருபுகள் - முதலாம் எட்டாம் வேற்றுமை தவிர்ந்த ஆறு வேற்றுமை உருபுகள்
2. விகுதிகள் - அன் ஆள் உம் து போன்றன
3. இடைநிலை - த் ட் ற் ன் போன்றன
4. சாரியை - அத்து அற்று அம் போன்றன
5. தத்தம் பொருளை உணர்த்தி வரும் இடைச்சொற்கள் - ஏ ஓ உம் தோறும் தான் என-என்று போன்றன.

**ஏ - இடைச்சொல் - தேற்றம் வினா எண் பிரிநிலை** ஆகிய பொருள்களில் வரும்.

| | |
|---|---|
| நீ உண்மையே பேசினாய். | (தேற்றம்) |
| பாரதியே அப்படிப் பாடினான்? | (வினா) |
| சேரரே சோழரே பாண்டியரே என மூவேந்தர்கள். | (எண்) |
| எமது வீட்டில் அப்பாவே மிகவும் உயர்ந்தவர். | (பிரிநிலை) |

**ஓ - இடைச்சொல் - ஐயம் வினா எதிர்மறை தெரிநிலை** ஆகிய பொருள்களில் வரும்.

| | |
|---|---|
| இன்று மழை பெய்யுமோ? | (ஐயம்) |
| குயிலோ காகமோ கறுப்பு? | (வினா) |
| இளங்கோவோ பொய் உரைத்தான். | (எதிர்மறை) |
| ஆணோ பெண்ணோ அல்ல. | தெரிநிலை) |

**உம் - இடைச்சொல் - எதிர்மறை உயர்வுச்சிறப்பு இழிவுச்சிறப்பு துணிவுப்பாடு எச்சம் முற்று எண் ஆக்கம்** ஆகிய பொருள்களில் வரும்.

| | |
|---|---|
| பசித்தாலும் உணவு உண்ணாதே. | (எதிர்மறை) |
| குருவையும் விஞ்சிய சீடன். | (உயர்வுச் சிறப்பு) |
| நாயும் தின்னாச் சோறு. | (இழிவுச் சிறப்பு) |
| இத்தாலி அணி வென்றாலும் வெல்லும். | (துணிவுப்பாடு) |
| புலவரும் வந்தார். | (எச்சம்) |
| எல்லா மலர்களும் வாசனையுடையவை. | (முற்று) |
| அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். | (எண்) |
| மல்லிகையே மாலையும் ஆயிற்று. | (ஆக்கம்) |

**தோறும் - இடைச்சொல் - ஒவ்வொரு** என்ற பொருள்களில் வரும்.

நாள் தோறும் உடற்பயிற்சி செய்வது நல்லது.
(ஒவ்வொரு நாளும்)
ஆண்டு தோறும் பொங்கல் விழாக் கொண்டாடுவர்.
(ஒவ்வொருஆண்டும்)

**தான் - இடைச்சொல் - தேற்றம் / அழுத்தம்** ஆகிய பொருள்களில் வரும்.

| | |
|---|---|
| என்னைப் பேசத்தான் விட்டாயா? | (தேற்றம் / அழுத்தம்) |
| நீதான் திறமைசாலி ஆயிற்றே? | (தேற்றம் / அழுத்தம்) |

**என-என்று - இடைச்சொல்**

மழை பொழிந்ததென மக்கள் மகிழ்தனர்
மழை பொழிந்ததென்று மக்கள் மகிழ்தனர்

## உரிச்சொல் Poetical words

ஒரு சொல் பலபொருளும் பல சொல் ஒருபொருளும் உணர்த்துவதாய் வரும் சொற்கள் உரிச்சொல் எனப்படும். இது ஒரு சொல்லின் பண்பைச் சிறப்பித்துக் கூறப் பயன்படும்.

**பலசொல் ஒருபொருள்**

சாலப் பேசினான்
உறு புகழ்
தவ உயர்ந்தன
நனி தின்றன

இந்நான்கிலும் வரும் சால உறு தவ நனி என்னும் உரிச்சொற்கள் அதிகம் / மிகுதி என்னும் ஒரே பொருளை உணர்த்தும்.

**ஒரு சொல் பலபொருள்** - கடி

- கடிமனை - காவல்
  கடிவாள் - கூர்மை
  கடிமிளகு - கரிப்பு
  கடிமலர் - சிறப்பு

இந்நான்கிலும் வரும் கடி என்னும் உரிச்சொற்கள் காவல் கூர்மை கரிப்பு சிறப்பு என்னும் பல பொருள்களை உணர்த்தும்.

---------------

## திணை Class

திணை என்பதற்கு வகை என்று பொருள். இது உயர்திணை அஃறிணை என இருவகைப்படும்.
உயர்திணை - மக்கள் Humans தேவர் divine beings
அஃறிணை - மற்றைய உயிர் உள்ளனவும் உயிர் இல்லாதனவும்.

**உயர்திணை** Superior beings

- அரசன் கடவுள் இந்திரன்

**அஃறிணை** Inferior beings

- பறவை மரம் புத்தகம் கடல்

## பால் Gender

பால் ஆண்பால் பெண்பால் பலர்பால் ஒன்றன்பால் பலவின்பால் என ஐந்து வகைப்படும்.

| | |
|---|---|
| ஆண்பால் பெண்பால் பலர்பால் | - உயர்திணை |
| ஒன்றன்பால் பலவின்பால் | - அஃறிணை |

**ஆண்பால்** mascular

ஆண்வர்க்கத்தினரைக் குறிக்கும் சொல் ஆண்பால்.
ஆண்பால் விகுதிகள் - அன் ஆன் மன் மான் ன்

- மன்னன் யாழ்ப்பாணத்தான் வடமன் சேரமான் அவன்

**பெண்பால்** feminine

பெண் வர்க்கத்தினரைக் குறிக்கும் சொல் பெண்பால்.
பெண்பால் விகுதிகள் - அள் ஆள் ள்

- வந்தவள் வந்தாள் அவள்

தற்பொழுது இ ஐ ஆகிய விகுதிகளும் வழக்கில் உள்ளன.

- சிறுமி வள்ளி செல்வி மங்கை தங்கை நங்கை

**பலர்பால்** Common Gender

உயர்திணையில் ஆடவர் காளையர் முதலிய ஆண் பன்மையையும் பெண்டீர் மங்கையர் முதலிய பெண் பன்மையையும் மக்கள் அவர் முதலிய ஆண்கள் பெண்கள் கலந்த பலரையும் குறிக்கும் சொல் பலர்பால்.
பலர்பால் விகுதிகள் - அர் ஆர் மார் இர் கள்

- புலவர் ஓதுவார் தேவிமார் மகளிர் மாணவிகள்

**ஒன்றன்பால்** Neuter Singular

அ.்.றிணையில் ஒன்றைக் குறிக்கும் சொல் ஒன்றன்பால்.
ஒன்றன்பால் விகுதி - து

- அது யாது

**பலவின்பால்** Neuter Plural

அ.்.றிணையில் பலதைக் குறிக்கும் சொல் பலவின்பால்.
பலவின்பால் விகுதிகள் - வை அ வ் கள்

- அவை கரியன அவ் முயல்கள் (வ்) தற்கால வழக்கில் இல்லை.

| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|---|---|
| அரசன் | அரசி | அரசர்கள் | பசு | பசுக்கள் |
| மாணவன் | மாணவி | மாணவர்கள் | மரம் | மரங்கள் |
| அவன் | அவள் | அவர்கள் | அது | அவை |
| குறவன் | குறத்தி | குறவர் | கண் | கண்கள் |
| சிறுவன் | சிறுமி | சிறுவர் | சிறியது | சிறியன |
| சகோதரன் | சகோதரி | சகோதரர்கள் | கிளி | கிளிகள் |
| வீரன் | வீராங்கனை | வீரர்கள் | பூ | பூக்கள் |
| உறவினன் | உறவினள் | உறவினர் | பல் | பற்கள் |

## சொற்களின் விகுதிகள் தெரிநிலைவினை குறிப்புவினைச் சொற்களில்

| பால் | விகுதி | விகுதி | விகுதி | விகுதி | வினை |
|---|---|---|---|---|---|
| ஆண்பால் | அன் | ஆன் | ------ | ------- | |
| | செய்தனன் | செய்தான் | | | தெரிநிலை |
| | செய்கின்ற னன் | செய் கின்றான் | | | |
| | செய்வன் | செய்வான் | | | |
| | நல்லன் | நல்லான் | | | குறிப்பு |
| | | | | | |
| பெண்பால் | அள் | ஆள் | ------- | -------- | |
| | நடந்தனள் | நடந்தாள் | | | தெரிநிலை |
| | நடக்கின்ற னள் | நடக் கின்றாள் | | | |
| | நடப்பள் | நடப்பாள் | | | |
| | நல்லள் | நல்லாள் | | | குறிப்பு |
| | | | | | |
| பலர்பால் | அர் | ஆர் | ப | மார் | |
| | உண்டனர் | உண்டார் | உண்ப | உண்மார் | தெரிநிலை |
| | உண்ணுகின் றனர் | உண்ணு கின்றார் | கூறுப | பாடன்மார் | |
| | உண்பர் | உண்பர் | மொழிப | கொண்மார் | |
| | நல்லர் | நல்லார் | | | குறிப்பு |
| | | | | | |
| ஒன்றன்பால் | து | று | டு | ---------- | |
| | உண்டது | ஓடிற்று | | | தெரிநிலை |
| | உண்ணு கின்றது | | | | |
| | உண்பது | | | | |
| | | | பொருட்டு | | குறிப்பு |
| | | | | | |
| பலவின்பால் | அ | ஆ(எதிர்மறை) | --------- | --------- | |
| | பறந்தன | பாடா | | | தெரிநிலை |
| | பறக்கின்றன | உண்ணா | | | |
| | பறப்பன | ஆடா | | | |
| | நல்லன நல்ல | | | | குறிப்பு |

உண்மார் - உண்பார்

பாடன்மார் - பாடுவாரல்லர்

கொண்மார் - கொள்வார்

- தன்மை வினைமுற்று முன்னிலை வினைமுற்று ஆகியவற்றில் காலம் தோன்றும் ஆனால் பால் தோன்றாது.

## எண் Number

உயர்திணையிலோ அ..றிணையிலோ எண்ணிக்கையைக் காட்டுவது எண் எனப்படும். அவை ஒருமை எண் பன்மை எண் எனப்படும்.

**ஒருமை எண்** (Singular Number)

உயர்திணையிலே ஒருவரை அ..றிணையிலே ஒன்றைக் குறிக்க வரும் பெயர் ஒருமை எண் எனப்படும்.

- நான் கண்ணன் மயில் கிளி

**பன்மை எண்** (Plural Number)

உயர்திணையிலே பலரை அ..றிணையிலே ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருட்களைக் குறிக்க வரும் பெயர் பன்மை எண் எனப்படும்.

- நாம் பெண்கள் மயில்கள் கற்கள்

**ஒருமையைப் பன்மையாக மாற்றும்போது பொதுவாக பின்வரும் விதங்களாக அமையும்.**

1. ஒருமைச் சொல்லுடன் கள் சேர்ந்து பன்மை வரும்.

| | |
|---|---|
| ஆடு | ஆடுகள் |
| மாடு | மாடுகள் |
| கண் | கண்கள் |
| கிளி | கிளிகள் |

2. ஒருமைச் சொல்லின் இறுதியில் ம் வந்தால் இந்த ம் பன்மையில் ங் ஆக மாறி கள் சேர்ந்து வரும்.

| | |
|---|---|
| மரம் | மரங்கள் |
| புத்தகம் | புத்தகங்கள் |
| முகம் | முகங்கள் |
| சிங்கம் | சிங்கங்கள் |

3. ஒருமைச் சொல்லில் தனிக் குற்றெழுத்தின் பின் ல் வந்தால் இந்த ல் பன்மையில் ற் ஆக மாறி கள் சேர்ந்து வரும்.

| | |
|---|---|
| பல் | பற்கள் |
| புல் | புற்கள் |
| கல் | கற்கள் |
| வில் | விற்கள் |

4. சில ஒருமைச் சொல்லின் இறுதியில் ள் வந்தால் பன்மையில் ட் ஆக மாறி கள் சேர்ந்து வரும்.

| | |
|---|---|
| முள் | முட்கள் |

5. சில ஒருமைச் சொற்களைப் பன்மையாக்கும்போது க்கள் சேர்ந்து வரும்.

| | |
|---|---|
| பூ | பூக்கள் |
| ஈ | ஈக்கள் |
| பா | பாக்கள் |
| பசு | பசுக்கள் |
| புறா | புறாக்கள் |

## இடம் Person

உயர்திணை அஃறிணை ஆகிய இருதிணைகளிலும் ஆண்பால் பெண்பால் பலர்பால் ஒன்றன்பால் பலவின்பால் ஆகிய ஐந்து பாலுக்குமுரிய சொற்கள் தன்மை முன்னிலை படர்க்கை ஆகிய மூவிடத்திலும் வரும்.

**தன்மை இடம்** 1st person

பேசும் பொருள்.

தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் குறிப்பது.

**முன்னிலை இடம்** 2nd person

பேசும் பொருளினால் எதிர் முகமாக்கப்பட்டுக் கேட்கும் பொருள்.

முன் நிற்பவரைக் குறிப்பது.

**படர்க்கை இடம்** 3rd person

பேசப்படும் பொருள்.

தன்மை முன்னிலை நீங்கியவற்றைக் குறிப்பது.

**தன்மை** 1st Person

நான் யான் - ஒருமை
நாம் நாங்கள் யாம் - பன்மை

**முன்னிலை** 2nd Person

நீ - ஒருமை
நீர் - பன்மை (தற்கால வழக்கில் ஒருமை)
நீங்கள் - பன்மை (தற்கால வழக்கில் ஒருமை/ பன்மை)
நீயிர் நீவிர் எல்லீர் - பன்மை (தற்கால வழக்கில் இல்லை)

கமலா மீனாவிடம் நீர் எப்போது வருவீர்? எனக் கேட்டாள். இங்கு வரும் நீர் என்னும் சொல் ஒருமை.

ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து 'நீங்கள் பாடம் படித்தீர்களா?' என்று கேட்டார். இங்கு வரும் நீங்கள் என்னும் சொல் பன்மை.

அதற்கு மாணவர்கள் 'நீங்கள் கூறியவாறு பாடங்களைப் படித்தோம்' என்று பதில் சொன்னார்கள். இங்கு வரும் நீங்கள் என்னும் சொல் ஒருமை.

**படர்க்கை** 3rd Person

அவன் - ஆண்பால் ஒருமை
அவள் - பெண்பால் ஒருமை
அவர் - பலர்பால் (தற்கால வழக்கில் ஆண்பால் / பெண்பால் ஒருமை)

- நல்லதம்பிப் புலவர் நம் நாடு போற்றும் கவிஞர். அவர் மகன் புலவர் சிவநாதன் புலம் போற்றும் கவிஞர். இதில் நல்லதம்பிப் புலவரைக் குறிக்க வரும் அவர் என்பது ஆண்பால் ஒருமை.
- அன்னை திரேசா ஏழைகளுக்கு அரும்பணியாற்றினார். அவர் ஆற்றிய பணிகளை அவர் இறந்த பின்னரும் உலகு பாராட்டுகிறது. இங்கு அன்னை திரேசாவைக் குறிக்க வரும் அவர் என்பது பெண்பால் ஒருமை.

அவர்கள் ஆண்பால் / பெண்பால் / பலர்பால் பன்மை
மரியாதையின் நிமித்தம் ஆண்பால் / பெண்பால் ஒருமைக்கும் வரும்.

உ-ம்

- சிறுமிகள் விளையாடினார்கள். <u>அவர்கள்</u> வெற்றி பெற்றார்கள். (பெண்பால் பன்மை)
  நண்பர்கள் கோவிலுக்குப் போனார்கள். <u>அவர்கள்</u> வீதி வலம் வந்தார்கள். (ஆண்பால் பன்மை)
- மாவீரர்கள் தினத்தன்று <u>அவர்கள்</u> துயிலும் இல்லம் செல்வோம். (பலர்பால் பன்மை)
  குடியரசுத்தலைவர் அப்துல்கலாம் <u>அவர்கள்</u> தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். (ஆண்பால் ஒருமை)
  அன்னை திரேசா <u>அவர்கள்</u> அல்பேனியா நாட்டைச் சேர்ந்தவர். (பெண்பால் ஒருமை)

அது - ஒருமை

- அது அழகான பறவை

அவை / அவைகள் - பன்மை

- அவை விலை மிகுந்த ஓவியங்கள்.
- அவைகள் விலை மிகுந்த ஓவியங்கள்.

<u>குறிப்பு</u>

தன்மை முன்னிலைப் பெயர்களுக்கு ஆண்பால் பெண்பால் பாகுபாடு கிடையாது.

தன்மை நா வுடன் ஆரம்பமாகும்.
முன்னிலை நீ யுடன் ஆரம்பமாகும்.
படர்க்கை அ வுடன் ஆரம்பமாகும்

சொல்லின் இறுதியில் கள் வந்தால் அது பொதுவாகப் பன்மையைக் குறிக்கும்.
நாம் அவை என்பவை பன்மை. தற்கால வழக்கில் இவற்றுடன் கள் சேர்த்து நாங்கள் அவைகள் என்று எழுதப்படுகிறது.
உயர்திணையை ஆண்பால் பெண்பால் பலர்பால் என்று பகுப்பதைப் போல அஃறிணையை ஒன்றன்பால் பலவின்பால் என்று பகுப்பர்.

## **காலம்** Tense

இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என காலம் மூன்று வகைப்படும்.

**இறந்த காலம்** (Past tense)
நடந்து முடிந்த செயலைக் குறிக்கும் சொல். இது த் ட் ற் இன் ன் ஆகிய இடைநிலைகளோடு வரும்.

| | | |
|---|---|---|
| கொடுத்தேன் | - த் | - கொடு + த் + ஏன் |
| உண்டாள் | - ட் | - உண் + ட் + ஆள் |
| சென்றார் | - ற் | - செல் + ற் + ஆர் |
| பாடினாய் | - இன் | - பாடு + இன் + ஆய் |
| போனோம் | - ன் | - போ + ன் + ஓம் |

**நிகழ் காலம்** (Present tense)
நடந்து கொண்டிருக்கும் செயலைக் குறிக்கும் சொல். இது ஆநின்று கின்று கிறு ஆகிய இடைநிலைகளோடு வரும்.

| | | |
|---|---|---|
| உண்ணாநின்றான் | - ஆநின்று | - உண் + ஆநின்று + ஆன் |
| போகின்றேன் | - கின்று | - போ + கின்று + ஏன் |
| நடக்கிறாய் | - கிறு | - நட + கிறு + ஆய் |

**எதிர் காலம்** (Future tense)
நடக்கப்போகும் செயலைக் குறிக்கும் சொல். இது ப் வ் ஆகிய இடை நிலைகளோடும் உம் என்னும் விகுதியுடனும் வரும்.

| | | |
|---|---|---|
| கதைப்பாள் | - ப் | - கதை + ப் + ப் + ஆள் |
| ஓடுவேன் | - வ் | - ஓடு + வ் + ஏன் |
| பறக்கும் | - உம் | - பற + க் + க் + உம் |

# தன்மை முன்னிலை படர்க்கையில் வினைச் சொற்கள் முக்காலத்திலும் வரும் பொழுது ஏற்படும் மாற்றங்கள்

| மூவிடம் | இறந்த காலம் | நிகழ் காலம் | எதிர் காலம் | முடியும் ஓசை |
|---|---|---|---|---|
| நான்<br>நாம்<br>நாங்கள் | படித்தேன்<br>படித்தோம்<br>படித்தோம் | படிக்கிறேன்<br>படிக்கிறோம்<br>படிக்கிறோம் | படிப்பேன்<br>படிப்போம்<br>படிப்போம் | ஏன்<br>ஓம்<br>ஓம் |
| நீ<br>நீர்<br>நீங்கள் | வந்தாய்<br>வந்தீர்<br>வந்தீர்கள் | வருகிறாய்<br>வருகிறீர்<br>வருகிறீர்கள் | வருவாய்<br>வருவீர்<br>வருவீர்கள் | ஆய்<br>ஈர்<br>ஈர்கள் |
| அவன்<br>அவள்<br>அவர்<br>அவர்கள் | ஓடினான்<br>ஓடினாள்<br>ஓடினார்<br>ஓடினார்கள் | ஓடுகிறான்<br>ஓடுகிறாள்<br>ஓடுகிறார்<br>ஓடுகிறார்கள் | ஓடுவான்<br>ஓடுவாள்<br>ஓடுவார்<br>ஓடுவார்கள் | ஆன்<br>ஆள்<br>ஆர்<br>ஆர்கள் |
| அது<br><br>அவை/<br>அவைகள் | வந்தது<br><br>வந்தன | வருகிறது<br><br>வருகின்றன | வருவது/<br>வரும்<br>வருவன/<br>வரும் | அது /<br>உம்<br>ன / உம் |

தன்மை ஒருமை நான் — ஏன் என்ற ஓசையுடன் முடியும்
தன்மைப் பன்மை நாம் நாங்கள் — ஓம் என்ற ஓசையுடன் முடியும்

முன்னிலை ஒருமை நீ — ஆய் என்ற ஓசையுடன் முடியும்
முன்னிலை ஒருமை நீர் — ஈர் என்ற ஓசையுடன் முடியும்
முன்னிலைப் பன்மை நீங்கள் — ஈர்கள் என்ற ஓசையுடன் முடியும்

படர்க்கை ஒருமை அவன் — ஆன் என்ற ஓசையுடன் முடியும்
படர்க்கை ஒருமை அவள் — ஆள் என்ற ஓசையுடன் முடியும்
படர்க்கை ஒருமை அவர் — ஆர் என்ற ஓசையுடன் முடியும்
படர்க்கை பன்மை அவர்கள் — ஆர்கள் என்ற ஓசையுடன் முடியும்

அ.்.றிணையில் படர்க்கை ஒருமை அது இறந்தகாலத்திலும் நிகழ்காலத்திலும் அது என்ற ஓசையுடன் முடியும். எதிர்காலத்தில் உம் என்ற ஓசையுடன் முடியும்.

அ.்.றிணையில் படர்க்கை பன்மை அவை / அவைகள் இறந்தகாலத்திலும் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் ன என்ற ஓசையுடன் முடியும்

அ.்.றிணையில் படர்க்கை படர்க்கைப் பன்மை அவை / அவைகள் எதிர்காலத்தில் தற்கால நடைமுறையில் உம் என்ற ஓசையுடனும் முடியும்.

## பெயரெச்சம் Adjective participle

ஒரு வினைச் சொல் முழுமையான பொருளைத் தருவதற்காகப் பெயர்ச் சொல்லைத் தழுவி வரும். இப்படிப் பொருள் தருவதற்காகப் பெயர்ச் சொல்லைத் தழுவி வரும் எச்ச (குறைச்சொல்) சொல்லுக்குப் பெயரெச்சம் என்று பெயர். இது மூன்று காலத்திலும் வரும். இறந்தகால நிகழ்கால பெயரெச்சங்கள் அ விகுதி பெற்று வரும். எதிர்கால பெயரெச்சங்கள் உம் விகுதி பெற்று வரும்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம் | சாந்தன் பாடிய பாட்டு. | - இறந்த காலம் | (அ விகுதி) |
| | நான் எழுதுகின்ற கடிதம். | - நிகழ் காலம் | (அ விகுதி) |
| | நீ வரையும் ஓவியம். | - எதிர் காலம் | (உம் விகுதி) |

## வினையெச்சம் Adverbial participle

ஒரு வினைச் சொல் முழுமையான பொருளைத் தருவதற்காக ஒரு வினை முற்றைத் தழுவி வரும். இப்படிப் பொருள் தருவதற்காக வினைமுற்றைத் தழுவி வரும் சொல்லுக்கு வினையெச்சம் என்று பெயர். வினையெச்சத்தை முடிக்கும் வினைமுற்று உணர்த்தும் காலமே வினையெச்சத்தின் காலமாகும். வினையெச்சங்கள் உ இ ஆகிய விகுதிகளைப் பெற்று வரும். வினை முற்று உணர்த்தும் காலமே வினை எச்சத்தின் காலமுமாகும்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம் | கமலா படித்து முடித்தாள். | - இறந்த காலம் | (உ விகுதி) |
| | குமணன் ஓடி வருகிறான். | - நிகழ் காலம் | (இ விகுதி) |
| | குருவி பறந்து வரும். | - எதிர் காலம் | (உ விகுதி) |

## எதிர்மறை எச்சங்கள்

பெயர் வினை ஆகிய இரண்டு எச்சங்களிலும் குறைவினையாக வந்து எதிர்மறைப் பொருளைத் தருவது எதிர்மறை எச்சங்களாகும்.

உ-ம் படியாத மாணவர் துன்பப்படுவர். (எதிர்மறைப் பெயரெச்சம்)
வீட்டுவேலை செய்யாது அவதியுற்றான். (எதிர்மறை வினையெச்சம்)

---------------

## தொகை

ஒரு சொற்றொடரில் சொற்கள் மறைந்து நின்று பொருள் கொடுப்பதற்குத் தொகை என்று பெயர். சொற்கள் வெளிப்படையாக நின்று பொருள் கொடுப்பதற்கு விரி என்று பெயர்.

சொற்கள் தனித்து நிற்கும் பொழுதும் பொருள் தரும். மற்றைச் சொற்க ளோடு சேர்ந்து வரும் போதும் பொருள் தரும். புலவர் இரண்டு சொற் களைச் சேர்த்து சொற்றொடர் அமைக்கும் பொழுது பொருள் தருவதற் காக அவற்றின் இடையே சில சொற்களை இணைப்பர். தேவை இல்லை யெனக் கருதிச் சேர்க்காமலும் விடுவர். இச்சொற்களைச் சேர்க்கா விடி னும் இச்சொற்கள் இருப்பதுபோல் கருதிப் பொருள் கூறுவர். இப்படிச் சொற்கள் சேர்க்கப்படாது மறைந்து நின்று பொருள் கொடுப்பது தொகை எனப்படும். இத்தொகை ஆறு வகைப்படும். அவை வேற்றுமைத் தொகை வினைத் தொகை பண்புத் தொகை உவமைத் தொகை உம்மைத் தொகை அன்மொழித் தொகை என்பன.

### வேற்றுமைத் தொகை

வேற்றுமை உருபுகள் மறைந்துவரச் சொற்கள் தொடர்ந்து நிற்பதற்கு வேற்றுமைத் தொகை என்று பெயர். இத்தொகை முதலாம் வேற்றுமை எட்டாம் வேற்றுமை நீங்கலாகப் பிற ஆறு வேற்றுமைத் தொடர்களிலும் வரும்.

| | | |
|---|---|---|
| தமிழ் கற்றான் | (தமிழைக் கற்றான்) | ஐ உருபு |
| கண்ணழகி | (கண்ணால் அழகி) | ஆல் உருபு |

| | | |
|---|---|---|
| நாடு திரும்பினான் | (நாட்டுக்குத் திரும்பினான்) | கு உருபு |
| மலையருவி | (மலையில் அருவி) | இல் உருபு |
| கண்மணி | (கண்ணினது மணி) | அது உருபு |
| பாற்சுவை | (பாலின்கண் சுவை) | கண் உருபு |

## வினைத் தொகை

சொற்றொடரில் காலம் மறைந்து நின்று பொருள் தருவது வினைத் தொகையாகும். முதலில் குறை வினைச் சொல்லும் அடுத்துப் பெயர்ச் சொல்லும் தொடர்ந்து வருகின்ற சொற்றொடரிலேயே வினைத்தொகை அமையும்.

- ஆடுகால் ஊதுகுழல்

ஆடுகால் - ஆடியகால் ஆடுகின்றகால் ஆடும்கால் என மூன்று காலத்திற்கும் பொருந்தி வருகின்றது. இதில் ஆடு என்பது குறைவினைச் சொல்லாகவும் கால் என்பது பெயர்ச்சொல்லாகவும் வந்துள்ளது.

## பண்புத் தொகை

சொற்றொடரில் பெயர்ச்சொல்லுக்கு இடையே பண்பை (தன்மையை) விளக்கும் ஆகிய என்னும் பண்புருபு மறைந்து பொருள் தர வருவது பண்புத்தொகை எனப்படும்.

| | | |
|---|---|---|
| வெண்முகில் | - | வெண்மையாகிய முகில் |
| செங்கதிர் | - | செம்மையாகிய கதிர் |
| மூதூர் | - | முதமையாகிய ஊர் |
| இன்சொல் | - | இனிமையாகிய சொல் |

## உவமைத் தொகை

ஒரு பொருளை அதனுடன் ஒத்த வேறொரு பொருளோடு சேர்த்துக் கூறும் பொழுது அந்தப் பொருளுக்குச் சிறப்பு ஏற்படும். பொருளும் நன்றாக விளங்கும். எனவே ஒத்த பொருளை உவமையாக்கிக் காட்டி விளக்குவர். அப்படி விளக்கும் பொழுது போல போன்ற ஆகிய உவமை உருபுகள் மறைந்து நின்று பொருளை விளக்கும் தொடர் உவமைத் தொகை எனப்படும்.

மதிமுகம் - மதி போன்ற முகம் (மதி என்பது சந்திரனைக் குறிக்கிறது)
முத்துப்பல் - முத்துப் போன்ற பல்
பிறைநெற்றி - பிறை போன்ற நெற்றி
கொடியிடை - கொடி போன்ற இடை

அவ்வுவமைத் தொகையில் முதலில் நிற்கும் சொல் உபமானம் என்றும் தொடர்ந்து நிற்கும் சொல் உபமேயம் என்றும் அழைக்கப்படும்.

## உம்மைத் தொகை

சொற்றொடரில் உம் என்னும் சொல் வெளிப்படையாகத் தோன்றாது மறைந்து நின்று பொருளை உணர்த்துவது உம்மைத் தொகை எனப்படும். இது எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் என்னும் நான்கு அளவுப் பெயர்களைத் தொடர்ந்து வரும்.

தாய் தந்தை - தாயும் தந்தையும் - எண்ணல்
ஒன்றரைக் கிலோ - ஒன்றும் அரையும் - எடுத்தல்
மூன்றரை இலிட்டர் - மூன்றும் அரையும் - முகத்தல்
இரண்டரை மீற்றர் - இரண்டும் அரையும் - நீட்டல்

## அன்மொழித் தொகை

வேற்றுமைத் தொகை வினைத்தொகை பண்புத் தொகை உவமைத்தொகை உம்மைத் தொகை ஆகியவற்றில் வேற்றுமை உருபுகள் பண்பு உவமை உருபுகள் காலம் சொல் ஆகியவை மறைந்து பொருள் கொடுப்பதுடன் இவற்றின் பின்னால் மேலும் சில சொற்கள் மறைந்து நின்று பொருள் தருகின்றன. இது அன்மொழித் தொகை எனப்படும்.

உ-ம் கயல்விழி வந்தாள்

இதில் கயல்விழி என்ற தொடரை மட்டும் எடுத்துக் கொண்டால் கயல் (மீனைப்) போன்ற விழிகள் என்று வரும். இதில் போன்ற என்ற பண்புத் தொகை உருபு மறைந்து உள்ளது. இதோடு தொகை நின்று விடாமல் வந்தாள் என்ற வினைமுற்றோடு சேர்கின்றது. அதை விரிக்கும் பொழுது கயல்போன்ற விழிகளையுடைய கயல்விழி என்னும் பெயரையுடைய பெண்

வந்தாள் என விரிகின்றது. பெயரையுடைய பெண் என்ற சொற்கள் தொகைக்குப் புறம்பாக மறைந்து நின்று வந்தாள் என்ற வினைமுற்றைத் தழுவிப்பொருள் கொடுக்கின்றது. இதனால் இச்சொற்றொடர் அன்மொழித் தொகை. கயல்விழி என்னும் சொற்றொடர் கண்களைக் குறிக்கும் பொழுது உவமைத் தொகை. பெண்ணைக் குறிக்கும் பொழுது அன்மொழித்தொகை.

---------------

# நிறுத்தற் குறிகள்

எமது எண்ணங்களை வாக்கியங்களின் மூலம் வெளிப்படுத்துகின்றோம். வாக்கியங்களின் பொருள் விளங்க வேண்டுமானால் வாசிக்கும் போது பொருள் உணர்ச்சிக்கு ஏற்ப நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்தியும் சேர்க்க வேண்டிய இடங்களில் சேர்த்தும் வாசிக்க வேண்டும். மேலும் வினா வியப்பு அச்சம் முதலான உணர்வுகள் வெளிப்படவேண்டிய இடங்களில் அவற்றை வெளிப்படுத்தியும் வாசித்தல் வேண்டும். வாசிக்கின்றவர்களும் கேட்பவர்களும் அந்த உணர்வுகளைப் பெறுவதற்காகச் சில குறிகளைக் கையாளுகின்றார்கள். அவை நிறுத்தற் குறிகள் என அழைக்கப்படுகின்றன.

காற்புள்ளி (, ) அரைப்புள்ளி (; ) முக்காற்புள்ளி (:) முற்றுப்புள்ளி (.) வினாக்குறி (?) வியப்புக்குறி (!) ஒற்றை மேற்கோட்குறி (‘ ’) இரட்டை மேற்கோட்குறி (“ ”)

## காற்புள்ளி (, )

சொற்களையும் சொற்றொடர்களையும் துணை வாக்கியங்களையும் தனித்தனியாகப் பிரித்துக் காட்டுவதற்கு காற்புள்ளி (, ) பயன்படும். அத்துடன் வேறு சில இடங்களிலும் வரும்.

- வேறுபட்ட கலாச்சார, மொழி, இன மக்களை இணைக்கும் அரும் பெரும் பணியை இணையம் செய்கிறது.

1. பொருட்களை எண்ணும் இடங்கள்
   - புலி, சிங்கம், கரடி போன்ற காட்டு விலங்குகள்.

- விளிச் சொல்லுக்கு முன்
    - அன்புள்ள அம்மா,
- வினை எச்சங்களுக்குப் பின்
    - நன்றாகப் பாடம் படித்து, தேர்வில் கவனமாக எழுதிச் சித்தி பெறுங்கள்.
- ஆதலால் ஆகவே முதலிய இடைச்சொற்களுக்குப் பின்
    - இன்று ஊரடங்குச் சட்டம். அதனால், வெளியே செல்ல முடியவில்லை.

## அரைப் புள்ளி (; )

- ஒரே எழுவாயில் பல வாக்கியங்கள் தொடரும் இடங்கள்.
    - அதியமான் ஒளவையாரைப் புகழ்ந்தார் ; நெல்லிக் கனியைக் கொடுத்தார்.
    -
- உடன்பாடு எதிர்மறைக் கருத்துகள் வரும் இடங்கள்
    - கல்விச் செல்வம் நிலையானது; பொருட் செல்வம் நிலையற்றது.

## முக்காற்புள்ளி (: )

- உட்தலைப்பு அமைக்கும் இடங்கள்
    - தமிழ் இலக்கிய வரலாறு (தலைப்பு)
    - மானம் : (உட்தலைப்பு)
- ஒருவர் கூற்றை விளக்கும் இடம்
    - திருவள்ளுவர் கல்வி பற்றிக் கூறிய கருத்துகள்: (கருத்துகள் பலவற்றைக் கூறலாம்)
    - அவையாவன: எடுத்துக்காட்டு: பின்வருமாறு: போன்ற தொடர்ச்சிகளுக்குப் பின்னும் இடம் பெறும்.

## முற்றுப்புள்ளி (.)

கருத்து முற்றுப் பெற்ற ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் வரும்.

- நான் பலாப்பழம் சாப்பிட்டேன்.

சுருக்கப் பொருளை உணர்த்தும் பெயர்ச் சொற்களின் பின் (தந்தை பெயர், ஊர்ப்பெயர், அளவைப் பெயர்ப்பிரிவு ஆகியவற்றின் இறுதியில் வரும்.

- பி.ப. (பிற்பகல்) கி.மு கி.பி செ.மீ தி.மு.க மு. கருணாநிதி

## வினாக்குறி (?)

1. வினாப் பொருளைத் தரும் வாக்கியத்தின் இறுதியில் வரும்.
   - இத்தாலியின் தலைநகரம் எது?
   - உனது பெயர் என்ன? - வினா

2. ஐயப் பொருளைத் தரும் வாக்கியத்தின் இறுதியில் வரும்.
   - தமிழ்ச் செல்வியா இதை எழுதியது?
   - நேற்று மழை பெய்ததா? - ஐயம்

## வியப்புக்குறி (!) (மெய்ப்பாட்டுக்குறி / ஆச்சரியக்குறி / உணர்ச்சிக்குறி )

வியப்பு இரக்கம் மகிழ்ச்சி அச்சம் இழிவு போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் போது வரும்.

- ஆகா! என்ன் குளிர்மை! - வியப்பு
- ஐயோ! பாவம் சோர்ந்து போய் விட்டானே - இரக்கம்
- வாழ்க! வாழ்க! - மகிழ்ச்சி
- சீ! சீ! இவனும் ஒரு மனிதனா? - இழிவு
- என்னைக் காப்பாற்றுங்கோ! - அச்சம்

விளியை அடுத்தும் வரும்.

- மகளே! இங்கே வா!

## ஒற்றை மேற்கோட்குறி (‘ ’)

சிறப்புக் காரணம் கருதி ஒரு சொல்லையோ தொடரையோ குறித்துக் காட்ட பயன்படும்.

- ‘ திருக்குறளை பொய்யாமொழி எனவும் அழைப்பர். ’

## இரட்டை மேற்கோட்குறி (“ ”)

ஒருவர் கூற்றையோ செய்யுள் அடிகளையோ பயன்படுத்தும் பொழுது இரட்டை மேற்கோட்குறி பயன்படுத்தப்படும்.

“ உன்னைப்போல் உன் அயலானை நேசி ” என்று யேசு கூறினார்.

“ எண்ணும் எழுத்தும் இயலைந்தும் பண்நான்கும்
பண்ணின்ற கூத்துப் பதினொன்றும் - மண்ணின்மேல்
போக்கினாள் பூம்புகார்ப் பொற்றொடி மாதவிதன்
வாக்கினால் ஆடரங்கின் வந்து ” – என்று இளங்கோ
அடிகள் பாடினார்.

---

## வேற்றுமை Case

ஒரு வினையின் செயலுக்கு உரியவரை அல்லது உரியதை வேறுபடுத்தி உணர உதவுவது வேற்றுமை எனப்படும்.

ஒரு பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவதற்கு உதவும் எழுத்து அல்லது எழுத்துக்களின் கூட்டம் வேற்றுமை உருபுகள் எனப்படும்

புலி கொல் யானை என்னும் வசனத்தை எடுப்பின்
புலி(யால்) கொல்(லப்பட்ட) யானை என்றும் பொருள் கொள்ளலாம்.
புலி(யைக்) கொல்(லும்) யானை என்றும் பொருள் கொள்ளலாம்.

எனவே இந்த வசனத்தின் தெளிவான பொருளை வேறுபடுத்தி விளங்கிக்கொள்ள ஐ என்ற எழுத்தோ அல்லது ஆல் என்ற எழுத்துக்களின்

கூட்டமோ தேவையாக உள்ளது. இந்த ஐ ஆல் என்பனவே வேற்றுமை உருபுகள் என்று தமிழில் அழைக்கப்படுகின்றன. எனவே எழுதுகின்ற அல்லது பேசுகின்ற வசனத்தின் பொருளை வேறுபடுத்தி தெளிவாக்கிக் கொள்ள உதவும் எழுத்து அல்லது எழுத்துக்களின் கூட்டங்கள் வேற்றுமை உருபுகள் எனத் தமிழில் அழைக்கப்படும். இங்கு உருபு என்பதற்கு உருவம் என்ற பொருள் உண்டு. அந்த வகையிலே ஒரு பெயரின் பொருளை வேறுபடுத்த உதவும் எழுத்து அல்லது எழுத்துக் கூட்டங்களின் உருவங்கள் வேற்றுமை உருபு என அழைக்கப்படுகின்றது.

## வேற்றுமை உருபுகள்

| | |
|---|---|
| ஐ | 2ம் வேற்றுமை |
| ஆல் ஆன் ஒடு ஓடு | 3ம் வேற்றுமை |
| கு | 4ம் வேற்றுமை |
| இல் இன் | 5ம் வேற்றுமை |
| அது ஆது அ | 6ம் வேற்றுமை |
| இல் இடம் கண் உள் | 7ம் வேற்றுமை |

## முதலாம் வேற்றுமை / எழுவாய் வேற்றுமை
(Nominative case)

முதல் வேற்றுமையினது உருபாவது திரிபில்லாத பெயரேயாகும். மாணவர்கள் படிக்கின்றார்கள் என்ற வசனத்தை எடுத்தால் படித்தல் என்ற வினையினைச் செய்பவர் யார் என்பதை மாணவர்கள் என்ற சொல் தெளிவாக வேறுபடுத்திக் காட்டுகிறது. ஆனால் இந்த மாணவர்கள் படித்தல் என்ற வினைப்பயனை செய்பவர்களாகவும் இருப்பதால் மாணவர்கள் எழுவாயாகவும் அமைகிறது. இவ்வாறு எழுவாயும் வேற்றுமையும் ஒன்றாக அமையும் வசனங்களில் வரும் வேற்றுமை எழுவாய் வேற்றுமை எனப்படும். இதனை முதலாம் வேற்றுமை என்று அழைப்பவர்களும் உண்டு.

முதலாம் வேற்றுமை வினையையும் பெயரையும் வினாவையும் பயனி லையாக கொண்டமையும்.

| | |
|---|---|
| கண்ணன் வந்தான் | ( வினைமுற்றுப் பயனிலை) |
| கண்ணன் இவன் | ( பெயர்ப் பயனிலை) |
| கண்ணன் யார்? | ( வினாப் பயனிலை) |

சொல்லுருபு - ஆனவன் ஆகின்றவன் ஆவான் இது ஐம்பாலிலும் வரும்.

கண்ணன் ஆனவன் வந்தான்.
கண்ணன் ஆகின்றவன் இவன்.
கண்ணன் ஆவான் யார்?

## இரண்டாம் வேற்றுமை உருபும் அதன் இயல்புகளும்
Objective case)

செயல் ஒன்று நடைபெறும் பொழுது அச்செயலால் பாதிக்கப்படுபவரை அல்லது பாதிக்கப்படும் பொருளை செயப்படுபொருள் எனத் தமிழில் அழைப்பர். அந்த செயற்படுபொருளை தெளிவுபடுத்த உருபாக ஐ என்னும் உருபு அமைகிறது. இதனால்தான் எழுவாயை முதலாம் வேற்றுமையென அழைத்தவர்கள் ஐ என்னும் உருபை 2ம் வேற்றுமையென அழைக்கின்றனர். ஒரு செயல் செய்யப்படும் பொழுது நடைபெறக் கூடிய ஆக்கல் - அழித்தல் - அடைதல் - நீக்கல் - ஒத்தல் - உடைமை - விரும்பல் - அறிதல் என்னும் இயல்புகளை இந்த ஐ என்னும் உருபு வேறுபடுத்திக் காட்டுவதால் இவை ஐ என்னும் உருபு கொள்ளக் கூடிய பொருள்கள் எனப்படும்

| | |
|---|---|
| நூலை எழுதினார் | ஆக்கல் |
| வறுமையை நீக்க உழைத்தார் | அழித்தல் |
| காதலியை திருமணம் செய்தான் | அடைதல் |
| மது குடிப்பதை நிறுத்தினான் | நீக்கல் |
| பனியை போல வெண்மையானது | ஒத்தல் |
| நல்ல பண்பை கொண்டவர் | உடைமை |
| தாய்தந்தையை போற்றுபவர் | விரும்பல் |
| உண்மையை தெரிதலே வாழ்வின் நோக்கம் | அறிதல் |

## மூன்றாம் வேற்றுமை உருபுகளும் அதன் இயல்புகளும்
(Instrumental case)

பொறுப்பாக அல்லது கருவியாக இருந்து செயலை கொண்டு நடத்த உதவுவதை வேறுபடுத்திக் காட்டும் அல்லது உடனிகழ்ச்சி ஒன்றை வேறுபடுத்திக் காட்டும் வேற்றுமை 3ம் வேற்றுமை. ஆல் ஆன் ஒடு ஓடு என்பன 3ம் வேற்றுமை உருபுகள்.

ஆல் ஆன் - கருவி கருத்தாப் பொருள்களில் வரும்.
ஒடு ஓடு - உடனிகழ்ச்சிப் பொருளில் வரும்.
கருவி - முதற்கருவி துணைக்கருவி என இருவகைப்படும்.
கருத்தா - இயற்றுதற்கருத்தா ஏவுதற்கருத்தா என இருவகைப்படும்.

| | | |
|---|---|---|
| செம்பாலாகியசிலை<br>செம்பானாகிய சிலை | கருவி | முதற்கருவி |
| உளியாலாகிய சிலை<br>உளியானாகிய சிலை | கருவி | துணைக்கருவி |
| சிற்பியாலாகிய சிலை<br>சிற்பியானகிய சிலை | கருத்தா | இயற்றுதற்கருத்தா |
| அரசனாலாகிய சிலை<br>அரசனானாகிய சிலை | கருத்தா | ஏவுதற்கருத்தா |
| அவனொடு நானும் போனேன்<br>அவனோடு நானும் போனேன் | | உடனிகழ்ச்சி |

**சொல்லுருபு** - கொண்டு உடன்

வாள் கொண்டு வெட்டினான். - ஆல் ஆன்
தந்தையுடன் மைந்தன் வந்தான். - ஒடு ஓடு

## நான்காம் வேற்றுமை உருபும் அதன் இயல்புகளும்
(Dative case)

ஒரு செயலை செய்வதினால் ஏற்படும் உறவை அல்லது உரிமையை வேறுபடுத்திக் காட்டும் வேற்றுமை நான்காம் வேற்றுமை. கு என்னும் உருபு நான்காம் வேற்றுமை உருபாகும். கொடை பகை நட்பு தகுதி முதற்காரணகாரியம் நிமித்த காரணகாரியம் முறை பொருட்டு என்னும் தன்மைகளூடாக விளக்கமளிக்கும் என்பர்.

இல்லாதவர்க்கு உள்ளவர்கள் கொடுக்க வேண்டும். - கொடை
எலிக்கு பகை பூனை - பகை
அவனுக்கு நான் நண்பன் - நட்பு
அரசர்க்கு உரியது தருங்கலம் - தகுதி
முடிக்கு வைத்த முத்து - முதற்காரணகாரியம்
பரிசு பெறுவதற்கு பாடினான் - நிமித்த காரணகாரியம்
இராமனுக்கு இலக்குவணன் தம்பி - முறை

**சொல்லுருபு -** பொருட்டு நிமித்தம் ஆக

பரிசின் பொருட்டுப் பாடினான். - பொருட்டு
பரிசின் நிமித்தம் பாடினான். - நிமித்தம்
பரிசிற்காகப் பாடினான். - ஆக

## ஐந்தாம் வேற்றுமை உருபுகளும் அதன் இயல்புகளும்
(Ablative case)

செய்பவரின் அல்லது செய்யும் பொருளின் சிறப்பை அல்லது இழப்பை ஐந்தாம் வேற்றுமை வேறுபடுத்திக் காட்டும். இல் இன் 5ம் வேற்றுமை உருபுகள்.

மலையின் வீழருவி நீக்கல்
மலையில் வீழருவி

வீரத்தில் சிறந்தவர் தமிழர் ஒப்பு
வாய்மையின் சிறந்தது ஒன்றுமில்லை

இலங்கையின் வடக்கு யாழ்ப்பாணம் எல்லை
இலங்கையில் வடக்கு யாழ்ப்பாணம்

புமையில் சிறந்தவர்கள் புலவர்கள் ஏது
தியாகத்தின் எல்லையாக மாவீரர்கள்

சொல்லுருபு - நீக்கல் எல்லைப் பொருள்

நீங்கல் - நின்று இருந்து உம் பெற்றும் பெறாதும் வரும்.
எல்லைப் பொருள்- காட்டிலும் பார்க்கிலும் முன் ஐகாரம் பெற்று வரும்.

முகாமினின்றும் போனான் நீங்கல்
முகாமினின்று போனான்

முகாமிலிருந்தும் போனான் நீங்கல்
முகாமிலிருந்து போனான்

முகாமினின்று வீடு அரைமைல் எல்லை
முகாமினின்றும் வீடு அரைமைல்

முகாமிலிருந்தும் வீடு அரைமைல் எல்லை
முகாமிலிருந்து வீடு அரைமைல்

அவனைக் காட்டிலும் உயர்ந்தவன் இவன் எல்லை
இவனைக் காட்டிலும் இழிந்தவன் அவன்

அவனைப் பார்க்கிலும் உயர்ந்தவன் இவன் எல்லை
இவனைப் பார்க்கிலும் இழிந்தவன் அவன்

## ஆறாம் வேற்றுமை உருபுகளும் அதன் இயல்புகளும்
(Possessive case or genitive case)

ஓர் ஆளின் மேல் அல்லது பொருளின் மேலுள்ள உரிமையை வேறுபடுத்தி ஆறாம் வேற்றுமை விளக்கும். அது ஆது அ என்னும் உருபுகள் 6ம் வேற்றுமைக்கு உரியன.

எனது நாடு - ஒருமை
எனாது வீடு
என கைகள் - பன்மை

தற்கிழமைப் பொருள் - தன்னோடு ஒற்றுமையுடைய பொருள்
பிறிதின் கிழமைப் பொருள் - தன்னின் வேறாய பொருள்

| | | |
|---|---|---|
| கண்ணனது கை | - உறுப்பு | |
| கண்ணனது கருமை | - பண்பு | |
| கண்ணனது வரவு | - தொழில் | தற்கிழமைப்பொருள் |
| ஆட்டது மந்தை | - ஒன்றன் கூட்டம் | |
| படையது தொகுதி | - பலவின் கூட்டம் | |
| மஞ்சளது பொடி | - ஒன்று திரிந்தொன்றாதல் | |
| முருகனது வேல் | - பொருள் | |
| முருகனது மலை | - இடம் | பிறிதின் கிழமைப் பொருள் |
| உழவனது மாரி | - காலம் | |

**சொல்லுருபு** – உடைய

முருகனுடைய வீடு — இருதிணை ஒருமை
முருகனுடைய புதல்வன்

முருகனுடைய வீடுகள் — இருதிணை பன்மை
முருகனுடைய புதல்வர்

அது அ என்பன அஃறிணைப் பன்மைக்கு உரியன. தற்பொழுது பெரும்பாலும் வழக்கில் இல்லை.

## ஏழாம் வேற்றுமை உருபுகளும் அதன் இயல்புகளும்
(Locative case)

கண் இல் உள் இடம் ஏழாம் வேற்றுமை உருபுகளாகும். பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் அறுவகைப் பெயர்களுக்கும் இடமாய் நிற்பது இதன் பொருளாகும். இது தற்கிழமைப் பொருளிலும் பிறிதின் கிழமைப் பொருளிலும் வரும்.

| | | |
|---|---|---|
| மணியின்க ணிருக்கின்ற தொளி | தற் | பொருள் |
| புற்றின்கண் வாழ்கின்ற தரவம் | பிறி | |
| ஊரின்க ணிருக்கு மில்லம் | தற் | இடம் |
| ஆகாயத்தின்கட் பறக்கின்றது பட்டம் | பிறி | |
| நாளின்க ணாழிகை யுள்ளது | தற் | காலம் |
| வேனிற்கட் மலர்கள் உள்ளது | பிறி | |
| கையின்க ணுள்ளது விரல் | தற் | சினை |
| கையின்கண் விளங்குகின்றது வளையல் | பிறி | |
| மதியின் கண் மிக்குள்ள தழகு | தற் | குணம் |
| இளமையின் கண் வாய்த்தது செல்வம் | பிறி | |
| ஆடற் கணுள்ளது சதி | தற் | தொழில் |
| ஆடற்கட் பாடப்பட்டது பாட்டு | பிறி | |

## எட்டாம் வேற்றுமை (விளி வேற்றுமை)

(Vacative case)

இவ் வேற்றுமைக்கு உருபு கிடையாது. இது விளியாக வரும். இதன் பொருள் படர்க்கைப் பெயர்ப் பொருளைத் தனக்கு எதிர் முகமாக அழைப்பது. பெயர் விளியாக மாறும் பொழுது பெயரின் ஈற்றில் சில மாறுதல்கள் ஏற்படும்.

| | |
|---|---|
| நண்பன் : நண்பனே! | (ஈற்றெழுத்துத் திரிதல்) |
| புலவன் : புலவ | (ஈற்றெழுத்துக் கெடல்) |
| வாயிலோய் : வாயிலோயே | (ஏகாரம் மிக்கது) |
| அடிகள் : அடிகள் | (இயல்பு) |
| மக்கள் : மக்காள் | (ஈற்றயல் திரிதல்) |
| நண்பன் : நண்பா | (ஈறு கெட்டு அயல் திரிதல்) |

**தன்மை முன்னிலை படர்க்கைச் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும் போது பின்வருமாறு மாறி வேற்றுமை உருபு ஏற்கும்.**

நான் - என்
நாம் - எம்
நாங்கள் - எங்கள்

நீ - உன்
நீர் - உம்
நீங்கள் - உங்கள்

அது - அதன்

## தன்மை முன்னிலை படர்க்கைச் சொற்களில் வேற்றுமை

| தன்மை | நான்-என் | நாம்-எம் | நாங்கள்-எங்கள் |
|---|---|---|---|
| ஐ | என்னை | எம்மை | எங்களை |
| ஆல் | என்னால் | எம்மால் | எங்களால் |
| கு | எனக்கு | எமக்கு | எங்களுக்கு |
| இல் | என்னில் | எம்மில் | எங்களில் |
| அது | எனது | எமது | எங்களது |
| இடம் | என்னிடம் | எம்மிடம் | எங்களிடம் |

| முன்னிலை | நீ-உன் | நீர்-உம் | நீங்கள்-உங்கள் |
|---|---|---|---|
| ஐ | உன்னை | உம்மை | உங்களை |
| ஆல் | உன்னால் | உம்மால் | உங்களால் |
| கு | உனக்கு | உமக்கு | உங்களுக்கு |
| இல் | உன்னில் | உம்மில் | உங்களில் |
| அது | உனது | உமது | உங்களது |
| இடம் | உன்னிடம் | உம்மிடம் | உங்களிடம் |

| படர்க்கை | அது-அதன் |
|---|---|
| ஐ | அதனை |
| ஆல் | அதனால் |
| கு | அதற்கு |
| இல் | அதனில் |
| அது | அதனது |
| | |

# புணரியல்

## புணர்ச்சி Combination

இரண்டு சொற்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து நிற்றல் புணர்ச்சி எனப்படும். முதலில் இருக்கும் சொல்லுக்கு நிலை மொழி என்றும் இரண்டாவது இருக்கும் சொல்லுக்கு வருமொழி என்றும் பெயர்.

- கலை + விழா = கலைவிழா

  கலை - நிலைமொழி

  விழா - வருமொழி

நிலை மொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் பொருள் பொருத்தமுறச் சேருவதற்கு சொற்புணர்ச்சி என்று பெயர். இது இயல்புப்புணர்ச்சி விகாரப்புணர்ச்சி என இருவகைப்படும்.

### இயல்புப்புணர்ச்சி

நிலைமொழியும் தொடர்ந்து வரும் வருமொழியும் இணையும் போது இவ்விரு சொற்களும் எவ்வித மாற்றங்களுமின்றி இயல்பாகவே சேர்ந்து வருவது இயல்புப்புணர்ச்சி எனப்படும்

- பொன் + விழா = பொன்விழா
- மலை + மகள் = மலைமகள்
- மணி + மண்டபம் = மணிமண்டபம்
- நெல் + மணி = நெல்மணி

நிலை மொழி ஈற்று மெய் வருமொழி உயிருடன் சேர்ந்து உயர்மெய் எழுத்தாகிப் புணர்வதும் இயல்புப்புணர்ச்சி ஆகும்.

- தமிழ் + ஆலயம் = தமிழாலயம்
- பகல் + இரவு = பகலிரவு
- வலம் + இடம் = வலமிடம்
- கடல் + அலை = கடலலை

### விகாரப்புணர்ச்சி

நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது சில எழுத்தொலிகள் இயல்புப்புணர்ச்சி போன்று சேர்ந்து நிற்காது சில மாற்றங்களைப்

பெறுகின்றன. தோன்றல் திரிதல் கெடுதல் ஆகிய மூன்று மாற்றங்கள் இடம் பெறுகின்றன. அதனால் இதனை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

தோன்றல் விகாரம் திரிதல் விகாரம் கெடுதல் விகாரம்

**தோன்றல் விகாரம்** - புதிதாக ஓர் ஒலி (எழுத்து) தோன்றுதல்

- பலா+ பழம் - பலா + ப் + பழம் - பலாப்பழம் (ப்)
- நிலா+ சோறு - நிலா + ச் + சோறு - நிலாச்சோறு (ச்)
- ஆனை+ கால் - ஆனை + க் + கால் - ஆனைக்கால் (க்)
- செய்+ நன்றி - செய் + ந் + நன்றி - செய்ந்நன்றி (ந்)

இரண்டு சொற்களுக்கு நடுவில் ப் ச் க் ந் ஆகிய எழுத்துகள் தோன்றியுள்ளன.

**திரிதல் விகாரம்** - இருக்கும் ஓர் ஒலி (எழுத்து) வேறோர் ஒலியாக (எழுத்தாக) மாற்றமடைதல்

- வேல் + படை = வேற்படை ல் (ற்)
- மண் + சிலை = மட்சிலை ண் (ட்)
- பொன் + கோயில் = பொற்கோயில் ன் (ற்)
- பொருள் + செல்வம் = பொருட்செல்வம் ள் (ட்)

நிலைமொழி ஈற்றில் நின்ற ல் ண் ன் ள் ஆகிய எழுத்துகள் முறையே ற் ட் ற் ட் ஆக திரிந்து (மாறி) உள்ளன.

**கெடுதல் விகாரம்** - இருக்கும் ஓர் ஒலி (எழுத்து) கெடுதல்

- பணம் + வரவு = பணவரவு (ம்)
- தினம் + வரவு = தினவரவு (ம்)
- வளம் + நாடு = வளநாடு (ம்)
- களம் + நிலை = களநிலை (ம்)

நிலைமொழி ஈற்றில் நின்ற ம் என்னும் எழுத்து கெட்டு (மறைந்து) சொற்கள் புணர்ந்துள்ளன.

## வேற்றுமைப் புணர்ச்சி

நிலை மொழிக்கும் வருமொழிக்கும் நடுவில் ஐ ஆல் கு இன் அது கண் என்னும் ஆறு உருபுகளும் வெளிப் படையாகவோ அல்லது மறைந்தோ வரும் பொழுது சொற்கள் புணரும் புணர்ச்சிக்கு வேற்றுமைப் புணர்ச்சி என்று பெயர்.

- கிளிக்கூண்டு - கிளியினது கூண்டு

## அல்வழிப் புணர்ச்சி

வேற்றுமை இல்லாத வழியில் புணரும் புணர்ச்சி அல்வழிப் புணர்ச்சி ஆகும்.

- அவன் + வந்தான் = அவன் வந்தான்

புணர்ச்சி நான்கு வகைப்படும்.

- **மெய்யும் உயிரும் புணர்வது**
- **உயிரும் மெய்யும் புணர்வது**
- **உயிரும் உயிரும் புணர்வது**
- **மெய்யும் மெய்யும் புணர்வது**

## மெய்யும் உயிரும் புணர்வது

1. **தனிக்குற்றெழுத்து வராத நிலை மொழியின் இறுதியில் மெய் எழுத்தும் வருமொழி முதலில் உயிர் எழுத்தும் வந்தால் அந்த மெய்யும் உயிரும் சேர்ந்து உயிர்மெய்யாகும்.**

| | | |
|---|---|---|
| ஆடல் + அழகு | = ஆடலழகு | ல்+அ = ல |
| தேர் + ஓட்டம் | = தேரோட்டம் | ர்+ஓ = ரோ |
| வான் + ஒலி | = வானொலி | ன்+ஒ = னொ |

2. **தனிக்குற்றெழுத்து வந்த நிலை மொழியின் இறுதியில் மெய் எழுத்து வந்தால் அந்த மெய் இரட்டிக்கும். இரட்டித்த மெய் எழுத்தும் வருமொழி முதல் உயிர் எழுத்தும் சேர்ந்து உயிர்மெய்யாகும்.**

| | |
|---|---|
| கல் + எறிந்தான் = கல்லெறிந்தான | கல்ல் + எ = லெ |
| பொன் + அழகு = பொன்னழகு | பொன்ன் + அ = ன |

**3. தனிக்குற்றெழுத்தை அடுத்துவரும் யகரமெய்யின் முன்வரும் மெல்லினம் மிகும். ஐகாரத்தின் பின்வரும் மெல்லினமும் அவ்வாறே மெய்யோடு சேர்ந்து மிகும்.**

மெய் + ஞானம் = மெஞ்ஞானம்

கை + மாறு = கைம்மாறு

கை + நூல் = கைந்நூல்

## உயிரும் மெய்யும் புணர்வது

**உயிரும் மெய்யும் புணரும்போது வல்லெழுத்து பல்வேறு இடங்களில் மிகுகின்றன.**

புணர்ச்சியில் நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர்மெய் எழுத்தாக இருந்தால் அந்த எழுத்தை மெய் + உயிர் ஆகப் பிரிக்கவேண்டும். அவ்வாறே வருமொழியின் முதல் எழுத்து உயிர்மெய் எழுத்தாக இருந்தால் அந்த எழுத்தையும் மெய் + உயிர் ஆகப் பிரிக்கவேண்டும். அதன் பின்னரே அந்த பிரித்த நிலைமொழி இறுதிஎழுத்தையும் பிரித்த வருமொழிமுதல் எழுத்தையும் புணர்ச்சி விதிகளுக்கேற்ப புணர்த்தி எழுதவேண்டும்.

உ-ம் வாழை + பழம் = வாழைப்பழம்

இதன் நிலைமொழி வாழை இதன் இறுதி எழுத்து ழை என்னும் உயிர்மெய். இதைப் பிரித்தால் ழ் + ஐ

இதன் வருமொழி பழம் இதன் முதல் எழுத்து ப என்னும் உயிர்மெய். இதைப் பிரித்தால் ப் + அ

இங்கே ஐ என்ற உயிரும் ப் என்ற மெய்யும் புணரும் போது புணர்ச்சி விதிக்கேற்ப வல்லினம் மிகுந்து வாழைப்பழம் என்று புணருகிறது. அவ்வாறே பிறவும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வல்லினம் | - க் | ச் | ட் | த் | ப் | ற |
| மெல்லினம் | - ங் | ஞ் | ண் | ந் | ம் | ன் |
| இடையினம் | - ய் | ர் | ல் | வ் | ழ் | ள் |

1. க ச த ப என்னும் வல்லெழுத்துகள் வரின் வரும் வல்லெழுத்து மிகும்.

| | | |
|---|---|---|
| புளி + தயிர் | = புளித்தயிர் | - த |
| பலா + கனி | = பலாக்கனி | - க |
| நிலா + சோறு | = நிலாச்சோறு | - ச |
| திரு + தலம் | = திருத்தலம் | - த |
| பலா +சுளை | = பலாச்சுளை | - ச |
| வாழை + பழம் | = வாழைப்பழம் | - ப |

2. அகரத்தை அடுத்தும் ஆகார ஈற்று எதிர்மறை எச்சத்திலும் வல்லெழுத்து மிகும்.

| | | |
|---|---|---|
| அந்த + தோட்டம் | = அந்தத்தோட்டம் | - த |
| ஆறா + சோகம் | = ஆறாச்சோகம் | - ச |

3. எட்டு பத்து என்னும் எண்ணுப் பெயர்களின் முன்வரும் வல்லெழுத்து மிகும்.

| | | |
|---|---|---|
| எட்டு + தொகை | = எட்டுத்தொகை | - த |
| பத்து + பாட்டு | = பத்துப்பாட்டு | - ப |
| பத்து + தலை | = பத்துத்தலை | - த |

4. ஐகாரவீற்றுச் சொற்களை அடுத்துவரும் வல்லெழுத்து மிகும்.

| | | |
|---|---|---|
| பாடலை + கேட்டேன் | = பாடலைக்கேட்டேன் | - க |
| மானை + பிடித்தேன் | = மானைப்பிடித்தேன் | - ப |

## வல்லினம் மிகா இடங்கள்

1. அத்தனை இத்தனை எத்தனை என்னும் சொற்களுக்குப்பின் வல்லெழுத்து மிகாது.

| | |
|---|---|
| அத்தனை + பிள்ளைகள் | = அத்தனை பிள்ளைகள் |
| இத்தனை + கடிதங்கள் | = இத்தனை கடிதங்கள் |
| எத்தனை + இராகங்கள் | = எத்தனை இராகங்கள்? |

2. வினா எழுத்துகளின் பின் மிகாது.

| | |
|---|---|
| அவனா + கடந்தான் | = அவனா கடந்தான்? |
| அவனோ + கடிந்தான் | = அவனோ கடிந்தான்? |
| அவனே + கறந்தான் | = அவனே கறந்தான்? |

**3. வினைத் தொகையில் வல்லெழுத்து மிகாது.**

ஏவு + கணை = ஏவுகணை
அலை + கடல் = அலைகடல்

**4. எட்டு பத்து தவிர்ந்த மற்ற எண்ணுப் பெயர்களின் முன்வரும் வல்லெழுத்து மிகாது.**

ஒன்று + தாருங்கள் = ஒன்று தாருங்கள்
இரண்டு + பறவைகள் = இரண்டு பறவைகள்
மூன்று + கிளிகள் = மூன்று கிளிகள் (இது போன்றே பிற எண்களும்)

**5. இரட்டைக் கிளவியிலும் அடுக்குத் தொடரிலும் சில இடங்களில் வல்லெழுத்து மிகாது.**

கல + கல = கல கல
தாகம் + தாகம் = தாகம்தாகம்

**6. வியங்கோள் வினைமுற்றுகளுக்கு பின் வல்லெழுத்து மிகாது.**

செய்க + தானம் = செய்க தானம்
வாழ்க + தமிழ் = வாழ்க தமிழ்

**7. ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிர ஏனைய பெயர் எச்சங்களுக்குப் பின் வல்லெழுத்து மிகாது.**

வளர்த்த + பசு = வளர்த்த பசு
வாடிய + பயிர் = வாடியபயிர்

**8. ஆறாம் வேற்றுமைத் தொகையில் சில வல்லெழுத்து மிகாது.**

இராமன் + தம்பி = இராமன் தம்பி

**9. வினையெச்சத் தொடரில் சில இடங்களில் வல்லெழுத்து மிகாது.**

உண்டு + பறந்தது = உண்டு பறந்தது
வாழ்ந்து + காட்டினான் = வாழ்ந்து காட்டினான்

**10. வினைமுற்றுத் தொடரில் சில வல்லெழுத்து மிகாது.**

பறந்தது + புறா = பறந்தது புறா
தாவின + குரங்குகள் = தாவின குரங்குகள்

**11. எழுவாய்த் தொடரில் சில வல்லெழுத்து மிகாது.**

| | |
|---|---|
| தங்கை + பாடினாள் | = தங்கை பாடினாள் |
| குதிரை + கனைத்தது | = குதிரை கனைத்தது |

**இனமெல்லெழுத்து மிகும் இடங்கள்**

**1. சில மரப்பெயர்முன் வல்லினம் வரும்போது அவற்றின் இன மெல்லெழுத்து மிகும்.**

| | | |
|---|---|---|
| மா + காய் | = மாங்காய் | ங-க |
| பூ + கொடி | = பூங்கொடி | ங-க |
| விளா + காய் | = விளாங்காய் | ங-க |
| மா + சோலை | = மாஞ்சோலை | ஞ-ச |
| பூ + சோலை | = பூஞ்சோலை | ஞ-ச |
| பூ + பொழில் | = பூம்பொழில் | ம-ப |

## உயிரும் உயிரும் புணர்வது

உயிர் முன் உயிர்வரின் அவற்றிற்கு இடையே புதிதாக ஒரு மெய் தோன்றும். அது உடம்படுமெய் எனப்படும்.

**நிலை மொழியின் இறுதியில் இ ஈ ஐ என்னும் மூன்று உயிரும் வந்து வருமொழி முதலிலும் உயிர் வந்தால் இடையில் ய கரம் உடம்படு மெய்யாக வரும்.**

| | | |
|---|---|---|
| மணி + அழகு | = மணியழகு | இ - அ = ய |
| தீ + ஒளி | = தீயொளி | ஈ - ஒ = யொ |
| படை + எடுப்பு | = படையெடுப்பு | ஐ - எ = யெ |

**நிலை மொழியின் இறுதியில் அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்னும் ஏழு உயிரும் வந்து வருமொழி முதலிலும் உயிர் வந்தால் இடையில் வ கரம் உடம்படு மெய்யாக வரும்.**

| | |
|---|---|
| பல + அணி | = பலவணி |
| மா + இலை | = மாவிலை |

திரு + அடி = திருவடி
பூ + அரும்பு = பூவரும்பு
நொ + அழகா = நொவ்வழகா
இளங்கோ + அழகன் = இளங்கோவழகன்
கௌ + அழகு = கௌவழகு

**கோ என்ற நிலைமொழியின் முன் இல் என்னும் சொல் வருமொழியாக வந்தால் இடையில் வ கரம் வராது ய கரம் வரும்.**

கோ + இல் = கோயில் இது கோவில் எனவும் வரும்.

**நிலை மொழியின் இறுதியில் ஏ என்னும் உயிர் வந்து வருமொழி முதலிலும் உயிர் வந்தால் இடையில் வ கரமாயினும் ய கரமாயினும் உடம்படு மெய்யாக வரும்.**

அரசனே + உயர்வு = அரசனேயுயர்வு - அரசனேவுயர்வு
சே + உழுதது = சேவுழுதது - சேயுழுதது

## மெய்யும் மெய்யும் புணர்வது

**மெய்யும் மெய்யும் புணரும்போது இயல்புடன் தோன்றல் திரிதல் கெடுதல் ஆகியன ஏற்படுகின்றன.**

| | | | |
|---|---|---|---|
| தேன் + மொழி | = தேன்மொழி | ன் + ம் | இயல்பு |
| வேல் + படை | = வேற்படை | ல் + ப் | திரிதல் |
| மரம் + வேர் | = மரவேர் | ம் + வ் | கெடுதல் |
| வாய் + பேச்சு | = வாய்ப்பேச்சு | ய் + ப் | தோன்றல் |

## ணகர னகர ஈற்றுப் புணர்ச்சி

வேற்றுமைப் புணர்ச்சியில் ண் ன் ஈற்றுச் சொற்களின்முன் வல்லினம் வரும்போது ண் - ட் ஆகவும் ன் - ற் ஆகவும் மாறும்.

மண் + குடம் = மட்குடம்
கண் + பார்வை = கட்பார்வை

| | | |
|---|---|---|
| பொன் + சிலை | = பொற்சிலை | |
| பொன் + குடம் | = பொற்குடம் | வல்லினம் |
| விண் + மேகம் | = விண்மேகம் | |
| பொன் + மோதிரம் | = பொன்மோதிரம் | மெல்லினம் |
| மண் + வளம் | = மண்வளம் | |
| பொன் + யாழ் | = பொன்யாழ் | இடையினம் |

**அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாகப் புணரும்.**

| | | |
|---|---|---|
| கண் + பெரிது | = கண் பெரிது | |
| பொன் + சிறிது | = பொன் சிறிது | |
| தேன் + சுவைத்தது | = தேன் சுவைத்தது | வல்லினம் |
| விண் + மறைத்தது | = விண் மறைத்தது | |
| பொன் + மிளிர்ந்தது | = பொன் மிளிர்ந்தது | |
| மான் + மருண்டது | = மான் மருண்டது | மெல்லினம் |
| கண் + வளர்ந்தது | = கண் வளர்ந்தது | |
| பொன் + வலிது | = பொன் வலிது | இடையினம் |

## லகர ளகர ஈற்றுப் புணர்ச்சி

வேற்றுமைப் புணர்ச்சியில் லகர ளகர ஈற்றுச் சொற்கள் வல்லினத்தை முதலாக உடைய சொற்களுடன் புணரும்போது நிலை மொழியீற்று ல் - ற் ஆகவும் ள் - ட் ஆகவும் மாறும்.

| | | |
|---|---|---|
| கல் + சிலை | = கற்சிலை | |
| பால் + குடம் | = பாற்குடம் | |
| வாள் + போர் | = வாட்போர் | |
| கள் + குடியர் | = கட்குடியர் | வல்லினம் |

மெல்லினம் வந்தால் ல் - ன் ஆகவும் ள் - ண் ஆகவும் மாறும்.

| | | |
|---|---|---|
| சொல் + மாட்சி | = சொன் மாட்சி | |
| முள் + மாட்சி | = முண் மாட்சி | மெல்லினம் |

இடையினம் வந்தால் இயல்பாகப் புணரும்.

கல் + வண்டி = கல்வண்டி

முள் + வேலி = முள்வேலி இடையினம்

அல்வழிப் புணர்ச்சியில் வல்லினம் வந்தால் ல் - ற் ஆகவும் ள் - ட் ஆகவும் இயல்பாகவும் வரும்.

வில் + சிறிது = விற் சிறிது வில் சிறிது

முள் + பெரிது = முட் பெரிது முள் பெரிது வல்லினம்

மெல்லினம் வந்தால் ல் - ன் ஆகவும் ள் - ண் ஆகவும் மாறும்.

வில் + மாண்டது = வின்மாண்டது

முள் + மாண்டது = முண்மாண்டது மெல்லினம்

இடையினம் வந்தால் ல் ள் இரண்டும் இயல்பாக வரும்.

சொல் + யாது = சொல்யாது

முள் + யாது = முள்யாது இடையினம்

வேற்றுமைப் புணர்ச்சியில் ன் ல் ஈற்றுச் சொற்கள் தகரத்தை முதலாக உடைய சொற்களுடன் புணரும்போது நிலைமொழியீற்று னகரமும் லகரமும் வருமொழி முதல் தகரமும் றகரமாக மாறும்.

பொன் + தாலி = பொற்றாலி

காவல் + துறை = காவற்றுறை 'த' கரம்

ன் ஈற்றுச் சொற்கள் நகரத்தை முதலாக உடைய சொற்களுடன் புணரும்போது வருமொழி முதல் நகரம் னகரமாக மாறும். ல் ஈற்றுச் சொற்கள் நகரத்தை முதலாக உடைய சொற்களுடன் புணரும்போது ல் - ன் ஆக மாறுவதுடன் வருமொழி முதல் நகரம் னகரமாகவும் மாறும்.

பொன் + நாடு = பொன்னாடு

கல் + நாடு = கன்னாடு 'ந' கரம்

## ழகர ஈற்றுப் புணர்ச்சி

ழகர ஈற்றுச் சொற்களின் முன் வல்லினம் வந்தால் அவ்வல்லினம் இரட்டிக்கும்.

தமிழ் + சுவை = தமிழ்ச்சுவை

யாழ் + பாணம் = யாழ்ப்பாணம்
தமிழ் + செல்வன் = தமிழ்ச்செல்வன்

## மகர ஈற்றுப் புணர்ச்சி

மகர ஈறு பொதுவாக உம்மைத்தொகை தவிர்ந்த ஏனைய தொகை மொழிகளில் கெட்டுப் புணரும்.

நிலம் + மகள் = நிலமகள்
மரம் + வேர் = மரவேர்

## யகர ரகர ஈற்றுப் புணர்ச்சி

யகர ரகர ஈற்றுக்களின் முன் வல்லினம் வரும்போது வல்லினம் மிகும்.
போர் + கப்பல் = போர்க்கப்பல்
நாய் + கடி = நாய்க்கடி
போர் + தேங்காய் = போர்த்தேங்காய்

---

## அடுக்குத் தொடர்

ஒரு சொல்லே திரும்பத்திரும்ப அடுக்கி வருதல் அடுக்குத் தொடர் எனப்படும். இது விரைவு கோபம் மகிழ்ச்சி பயம் துன்பம் அவலம் ஆகிய பொருள்களிலும் செய்யுளில் அசை நிலையாகவும் இசைநிறையாகவும் சொற்கள் அடுக்கி வரும். இத்தொடரில் நான்கு சொற்கள் வரையிலும் அடுக்கலாம். அதற்குமேல் அடுக்கி வரக் கூடாது. இதன் சொற்களைப் பிரித்தால் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் இருக்கும். அடுக்குத் தொடரை பொருட்செறிவை மிகுவிக்கும் சொற்றொடர் எனக் கூறலாம்.

| | |
|---|---|
| ஓடு ஓடு ஓடு | விரைவு |
| உதை உதை | கோபம் |
| வருக வருக | மகிழ்ச்சி |
| பாம்பு பாம்பு | பயம் |
| வாழேன் வாழேன் | துன்பம் |
| நன்று நன்று | அசைநிலை |
| பாடுகோ பாடுகோ பாடுகோ | இசைநிலை |

## அடுக்கிடுக்குத் தொடர்

அடுக்குத் தொடர்களில் சில முன்மொழி விகாரமடைந்து அமைவதும் உண்டு. அவ்வாறு வருபவை பொருளை மேலும் அழுத்திக் கூறவும் சிறப்பித்துக் காட்டவும் உதவுகின்றன. அவ்வாறு வருவனவற்றை அடுக்கிடுக்குத் தொடர் என்பர்.

- நான் விமானக் குண்டு வீச்சைக் கண்டு நடுநடுங்கிப் போனேன்.

| | |
|---|---|
| தன்னந்தனி | தனி தனி |
| சின்னஞ் சிறிய | சிறிய சிறிய |
| பென்னம் பெரிய | பெரிய பெரிய |
| செக்கச் சிவந்த | சிவந்த சிவந்த |
| கொதி கொதித்து | கொதித்து கொதித்து |
| வெட்டவெளி | வெளி வெளி |
| கன்னங் கரிய | கரிய கரிய |
| சுடச் சுட | சூடாக சூடாக |
| குளிரக் குளிர | குளிராக குளிராக |

## இரட்டைக்கிளவி (இரட்டைச் சொற்கள்)

பொருள் இல்லாத ஒரேஒலி இரண்டுமுறை அடுக்கி இரட்டைச் சொற்களாக வந்து பொருள் தருவது இரட்டைக் கிளவி எனப்படும். இது ஓர் ஓசையை ஒரு தோற்றத்தை ஓர் பண்பை அல்லது ஓர் உணர்வைக் குறிப்பாகக் காட்டுகின்றது. சொல்லைப் பிரித்தால் அது பொருள் தராது. சொற்கள் இணைந்து வந்தால்தான் பொருள் தரும். இரண்டு சொற்கள் வரை இரட்டித்து வரும். அதற்கு மேல் வராது. இவை தமிழ் மொழியை வளமுடன் பேசவும் எழுதவும் உதவுகின்றன.

- சலசல என்று தண்ணீர் ஓடியது.
- கலகல என்று சிரித்தார்கள்.
- நெஞ்சு படபட என்று அடித்தது.
- வைரம் பளபள என்று மின்னியது.

| | | |
|---|---|---|
| நுறநற | விறுவிறு | கிளுகிளு |
| குறுகுறு | குபுகுபு | மளமள |
| துடதட | கணகண | சிடுசிடு |

| | | |
|---|---|---|
| வழுவழு | தொணதொண | கமகம |
| பொலபொல | சொரசொர | குளுகுளு |

## இணைமொழி

இரண்டு சொற்கள் இணைந்து வந்து பொருள் தரும். இவை தமிழ் மொழியை வளமுடன் பேசவும் எழுதவும் உதவுகின்றன. இரண்டு சொற்கள் இணைந்து நின்று ஒரு பொருளை நீண்ட சொற்றொடராக வந்து பொருள் தராமல் இரண்டு சொற்களில் இணைந்து வந்து பொருள் தரும்.

- குழந்தைகள் கள்ளங்கபடம் அற்றவர்கள்

| | |
|---|---|
| அக்கம்பக்கம் | முட்டிமோதி |
| சீருஞ்சிறப்பும் | உண்டுஉடுத்து |
| சூதுவாது | எலும்புந்தோலும் |
| வீரதீரம் | பட்டம்பதவி |
| குறைகுற்றம் | நடையுடை |

## மரபுத் தொடர்கள்

ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து நின்று அவற்றின் பொருளை வெளிப்படையாக உணர்த்தாமல் குறிப்பாக பொருளை உணர்த்தி வரும் போது அத்தொடர் மரபுத் தொடர் அல்லது இலக்கணத் தொடர் எனப் பெயர் பெறும். அத்தகைய குறிப்புப் பொருள் தலைமுறை தலைமுறையாக மக்கள் மத்தியில் வழங்கி வருதலால் அது மரபுத் தொடர் என்று அழைக்கப்படுகிறது.

- வாய்காட்டல் - வாயைக் காட்டுதல்
  (நேர்ப் பொருள்)
- வாய்காட்டல் - கட்டுப்பாடின்றி வரம்பை மீறிப்பேசுதல்
  (குறிப்புப் பொருள்)

| | |
|---|---|
| கண்வளர்தல் | - உறங்குதல் |
| கண்மலர்தல் | - விழித்தல் |
| காதுகுத்துதல் | - ஏமாற்றுப்பேச்சு |

காதிலடிபடுதல் - கேள்விப்படுதல்
கைகலத்தல் - சண்டை செய்தல்
கைவருதல் - தேர்ச்சி பெறுதல்
செவிசாய்த்தல் - இணங்கிக் கேட்டல்
செவிமடுத்தல் - ஆர்வத்தோடு கேட்டல்
தலைகீழாய் நடத்தல் - முறைதவறி நடத்தல்
தோள் கொடுத்தல் - துன்பத்தில் தாங்குதல்
தோளோடு தோள்நிற்றல் - துணையாகநின்று உதவி செய்தல்
நாக்குப் புரளுதல் - சொன்னசொல் தவறுதல்
பல்லுக் காட்டுதல் - கெஞ்சுதல் / இரந்து நிற்றல்
முகத்திற் கரி பூசுதல் - அவமதித்தல்
வயிறு கழுவுதல் - சிரமப்பட்டுணவு தேடிப்பிழைத்தல்
வாய்காட்டுதல் - எதிர்த்துப் பேசுதல்

---------------

## அன்று - அல்ல வேறுபாடு

அன்று - அஃறிணை ஒருமை வினைமுற்று.
அல்ல - அஃறிணை பன்மை வினைமுற்று.

இது நாடு அன்று. இவை நாடுகள் அல்ல.

## ஒரு - ஓர் இரு - ஈர்

ஓர் - உயிரில் ஆரம்பிக்கும் பெயர்ச் சொல்லின் முன் ஒன்றைக் குறிக்க வரும்.

ஓர் ஊர்

ஒரு - உயிர்மெய்யில் ஆரம்பிக்கும் பெயர்ச் சொல்லின் முன் ஒன்றைக் குறிக்க வரும்.

ஒரு மரம்

ஈர் - உயிரில் ஆரம்பிக்கும் பெயர்ச் சொல்லின் முன் இரண்டைக் குறிக்க வரும்.

ஈர் ஆண்டுகள்

இரு - உயிர்மெய்யில் ஆரம்பிக்கும் பெயர்ச் சொல்லின் முன் இரண்டைக் குறிக்கவரும்.

இரு மலர்கள்

## தான் - தாம்

தான் ஒருமைக்கும் தாம் பன்மைக்கும் வரும். இந்த இரண்டு சொற்களும் பெயர்ச் சொல்லாகவும் இடைச்சொல்லாகவும் சொற்றொடரில் பொருள் தந்து வரும். இச்சொற்கள் தனித்து வராது. தனித்து வந்தால் இச்சொற்களுக்குப் பொருள் இல்லை. மற்றச் சொற்களோடு இணைந்து வந்தால்தான் இவற்றிற்குப் பொருள் உண்டு. இது பெயர்ச் சொல்லாக வரும்பொழுது தன்மை முன்னிலையில் வராது. படர்க்கையில் மட்டும்தான் வரும் இது இடைச்சொல்லாக வரும் பொழுது தன்மை முன்னிலை படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் வரும்.

தான் நினைத்ததை செங்குட்டுவன் செய்து முடித்தான். - படர்க்கை - பெயர்ச்சொல்

நான்தான் அந்தப் படத்தைப் பார்த்தேன். - தன்மை
நீதான் வில்லை முறித்தாய். - முன்னிலை - இடைச்சொல்
செங்குட்டுவன்தான் படையெடுத்தான் - படர்க்கை

தாம் நலமுடன் இருப்பதாக பெற்றோர் சொன்னார்கள். - படர்க்கை - பெயர்ச்சொல்

நாம்தாம் கூறினோம். - தன்மை
நீங்கள்தாம் கூறினீர்கள். - முன்னிலை - இடைச்சொல்
அவர்கள்தாம் பாடினார்கள். - படர்க்கை

## வேண்டும் - வேண்டா - வேண்டாம்

இவை தெரிநிலை வினைமுற்றுக்கள். உடன்பாட்டுப் பொருளிலும் எதிர்மறைப் பொருளிலும் வரும்.
வேண்டும் - உடன்பாட்டு வினைமுற்று
வேண்டா - எதிர்மறை வினைமுற்று

நீங்கள் எனது பிறந்தநாள் விழாவுக்கு வரவேண்டும்.
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டா. (தற்கால வழக்கில் இது ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல <u>வேண்டாம்</u> என்று எழுதப்படுகிறது.)

## அது - அ∴து　　இது - இ∴து　　எது? - எ∴து?

பெயர்ச் சொற்களின்முன் அது இது எது? என்ற சொற்கள் வரும் பொழுது அப்பெயர்ச் சொல்லின் முதல் எழுத்து உயிர் எழுத்தாக இருந்தால் அ∴து இ∴து எ∴து? என வரும். அப்பெயர்ச் சொல்லின் முதல் எழுத்து உயிர் எழுத்தாக இல்லாது இருந்தால் அது இது எது? என வரும்.

| | | |
|---|---|---|
| அ∴து அணில் | இ∴து ஓலை | எ∴து எறும்பு? |
| அது மரம் | இது வீடு | எது பூனை? |

| | தவறு | சரி |
|---|---|---|
| ஆண்பால் | பெண்பால் | பெண்பால் |
| ஒருவன் | ஒருவள் | ஒருத்தி |
| சிறுவன் | சிறுவள் | சிறுமி |
| இளைஞன் | இளைஞி | ------- |
| வாலிபன் | வாலிபி | ------- |
| நண்பன் | நண்பி | ------- |
| பக்தன் | பக்தை | ------- |
| மாணவன் | மாணவி | மாணாக்கி |

| தவறு | சரி |
|---|---|
| பயணித்தனர் | பயணம் செய்தனர் |
| புன்னகைத்தனர் | புன்னகை செய்தனர் |
| முயற்சித்தனர் | முயற்சி செய்தனர் |
| அன்பளித்தனர் | அன்பளிப்பு செய்தனர் |

| தவறு | சரி |
|---|---|
| கரடு முரடு | கருடு முருடு |
| தட்ப வெட்பம் | தட்ப வெப்பம் |
| கோர்வை | கோவை |
| பதட்டம் | பந்நம் |
| சிகப்பு | சிவப்பு |
| அவைகள் | அவை |
| இவைகள் | இவை |
| வேண்டாம் | வேண்டா |

## ஒத்த கருத்துள்ள சொற்கள்

ஒத்த கருத்து என்றால் அதே கருத்து என்று பொருள். ஒரு பொருளைக் குறிப்பதற்கு பல சொற்கள் வந்தால் அச்சொற்கள் ஒத்த கருத்துள்ள சொற்கள் எனப்படும்.

| | |
|---|---|
| சூரியன் | - ஞாயிறு கதிரவன் ஆதவன் |
| சந்திரன் | - அம்புலி நிலா திங்கள் |
| தாய் | - அன்னை மாதா அம்மா |
| தந்தை | - தகப்பன் பிதா அப்பா |
| வானம் | - ஆகாயம் |
| பூமி | - உலகம் |
| வாரம் | - கிழமை |
| ஆண்டு | - வருடம் |
| நாள் | - தினம் |
| யானை | - கரி |
| குதிரை | - பரி |
| தாமரை | - கமலம் |
| குழந்தை | - மகவு |
| மகன் | - புதல்வன் |
| மகள் | - புதல்வி |
| நண்பி | - தோழி |
| நண்பன் | - தோழன் |
| நீர் | - புனல் |
| தானம் | - கொடை |
| நோன்பு | - விரதம் |
| வனம் | - காடு |
| விண்ணப்பம் | - வேண்டுகோள் |
| யாகம் | - வேள்வி |
| அச்சம் | - பயம் |
| பரதவர் | - கடலிற் பரந்து செல்பவர் |
| மருப்பு | - கொம்பு தந்தம் |
| பீலி | - தோகை |
| விரை | - நறுமணம் |
| இந்துப்பு | - கந்தகம் |
| மாழை | - உலோகம் |

| | |
|---|---|
| குமுகாயம் | - இனக்குழு |
| கேளிர் | - உறவினர் |
| பண்ணியம் | - வடை மோதகம் போன்றவை |
| சிலம்பி | - சிலந்தி வலை |
| அரக்கு | - இயற்கை மெழுகு |
| தண்ணுமை | - மிருதங்கம் |
| அதர் | - வழி |
| பொய்யாமொழி | - திருக்குறள் |
| தண்ணளி | - இன்னருள் பேரருள் |
| சலாபம் | - முத்துக் குளிக்கும் இடம் |
| ஆனிரை | - மந்தைக்கூட்டம் |
| ஆறலைத்தல் | - வழிப்பறி செய்தல் |
| கணிகன் | - சோதிடன் குறிசொல்வோன் |
| ஊறு | - தொடலுணர்வு |
| அணியம் | - தயார்நிலை |
| பட்டினம் | - கடற்கரைப்பேரூர் |
| கழிமுகம் | - ஆறு கடலில் கலக்குமிடம் |
| தலவுலா | - யாத்திரை |
| குலம் | - ஒரே தொழிலைச் செய்யும் மக்கட்குடி |
| ஆனைந்து | - பால் தயிர் மோர் வெண்ணெய் நெய் |
| கூலங்கள் | - நெல் வரகு போன்ற தானியங்கள் |

## எதிர்க் கருத்துள்ள சொற்கள்

எதிர்க் கருத்துள்ள சொல்: ஒரு சொல்லுக்கு எதிரான கருத்துள்ள சொல் எதிர்க்கருத்துச் சொல் எனப்படும்.

| | |
|---|---|
| காலை | - மாலை |
| பகை | - நட்பு |
| கறுப்பு | - வெள்ளை |
| சிறிது | - பெரிது |
| சூடு | - குளிர் |

| | |
|---|---|
| வா | - போ |
| இரு | - எழு |
| அழு | - சிரி |
| நட | - ஓடு |
| மூடு | - திற |
| வை | - எடு |
| ஏறு | - இறங்கு |
| தன்னலம் | - பிறர்நலம் |
| தொடக்கம் | - முடிவு |
| தொழிலாளி | - முதலாளி |
| இலாபம் | - நட்டம் |
| உறவு | - பகை |
| பழைய | - புதிய |
| ஒருமை | - பன்மை |
| பிறப்பு | - இறப்பு |
| பாவம் | - புண்ணியம் |
| பெரியோர் | - சிறியோர் |
| பகல் | - இரவு |
| உண்டு | - இல்லை |
| நன்மை | - தீமை |
| இளமை | - முதுமை |
| உபகாரம் | - அபகாரம் |
| இலட்சணம் | - அவஇலட்சணம் |
| தந்திரம் | - அவதந்திரம் |
| நம்பிக்கை | - அவநம்பிக்கை |
| மரியாதை | - அவமரியாதை |
| மானம் | - அவமானம் |
| நாகரிகம் | - அநாகரிகம் |
| நியாயம் | - அநியாயம் |
| ஆதரவு | - அநாதரவு |
| நீதி | - அநீதி |
| சுத்தம் | - அசுத்தம் |

## தொகைச் சொற்கள்

ஒருவன் - கடவுள்

இருமுதுகுரவர் - தாய் தந்தை
இருமை - இம்மை மறுமை
இருசுடர் - சந்திரன் சூரியன்
இருவகை அறம் - இல்லறம் துறவறம்
இருவினை - நல்வினை தீவினை
இருதிணை - உயர்திணை அஃறிணை

முப்பழம் - மாம்பழம் பலாப்பழம் வாழைப்பழம்
முக்கரணம் - மனம் வாக்கு காயம்
முக்குணம் - சாத்துவிகம் இராசதம் தாமதம்
முக்கடுகு - சுக்கு மிளகு திற்பலி
மூவேந்தர் - சேர சோழ பாண்டியர்

நானிலம் - குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல்
நால்வர் - அப்பர் சுந்தரர் சம்பந்தர் மாணிக்கவாசகர்
நான்கு உபாயம் - சாம பேத தான தண்டம்
நான்மறை - இருக்கு யசுர் சாமம் அதர்வணம்
நாற்குணம் - அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு
நாற்பாதம் - சரியை கிரியை யோகம் ஞானம்
நாற்பயன் - அறம் பொருள் இன்பம் வீடு
நாற்படை - தேர் யானை குதிரை காலாள்

ஐங்குரவர் - அரசன் உபாத்தியாயன் தாய் தந்தை தமையன்
ஐந்திலக்கணம் - எழுத்து சொல் பொருள் யாப்பு அணி
ஐம்பொறி - மெய் வாய் கண் மூக்கு செவி
ஐம்பூதம் - நிலம் நீர் தீ வளி வான்
ஐம்பெரும் பாதகம் - கொலை களவு கள் பொய் குருநிந்தை
ஐம்பொன் - பொன் வெள்ளி செம்பு இரும்பு ஈயம்
ஐம்பெருங்காப்பியம் - சீவகசிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை வளையாபதி குண்டலகேசி

அறுசுவை - கைப்பு இனிப்பு புளிப்பு உவர்ப்பு துவர்ப்பு கார்ப்பு

ஏழுபருவம் - பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம்பெண்

ஏழுபிறப்பு - தேவர் மனிதர் விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரம்

ஏழுகன்னியர் - அபிராமி இந்திராணி கௌமாரி காளி நாராயணி மகேஸ்வரி வராகி

அட்டாங்கம் - இயமம் நியமம் ஆசனம் பிரணாயாமம் பிராத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி

நவதானியம் - உழுந்து எள் கடலை கொள்ளு சாமை தினை துவரை நெல் பயறு

நவரசம் - நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை சாந்தம்

நவரத்தினம் - மரகதம் பவளம் நீலம் வச்சிரம் பதுமராகம் கோமேதகம் புருடராகம் முத்து வைடூரியம்

பத்தழகு - சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் நவின்றோர்க்கினிமை
நன்மொழிபுணர்த்தல்
ஓசையுடைமை
ஆழமுடைமை
முறையின்வைப்பு
உலகமலையாமை
விழுமியதுபயத்தல்
விளங்குஉதாரணத்தது ஆகுதல்

பத்துக் குற்றம் - குன்றக்கூறல் மிகைபடக்கூறல் கூறியதுகூறல்
மாறுகொளக்கூறல்
வழூஉச்சொற்புணர்த்தல்
மயங்கவைத்தல்
வெற்றெனத் தொடுத்தல்
மற்றொன்றுவிரித்தல்
சென்றுதேய்ந்திறுதல்
நின்றுபயனின்மை

பத்து அவதாரம் - மீன் ஆமை பன்றி நரசிங்பம் வாமனன் பரசுராமன்
இராமன் கிருணன் பலதேவனன் கல்கி

பத்துப்பாட்டு - திருமுருகாற்றுப்படை
பொருநராற்றுப்படை
சிறுபாணாற்றுப்படை
பெரும்பாணாற்றுப்படை
முல்லைப்பாட்டு
மதுரைக்காங்சி
நெடுநல்வாடை
குறிங்சிப்பாட்டு
பட்டினப்பாலை
மலைபடுகடாம்

பதினெண் கீழ்க்கணக்கு - நாலடியார்
நான்மணிக்கடிகை
இன்னா நாற்பது
இனியவை நாற்பது
கார் நாற்பது
களவழிநாற்பது
ஐற்திணை ஐம்பது
ஐந்திணை எழுவது
திணைமொழி ஐம்பது
திணைமாலை நூற்றைம்பது
திருக்குறள்
திரிகடுகம்
ஆசாரக்கோவை
பழமொழி நானூறு
சிறுபங்ச மூலம்
முதுமொழிக்காங்சி
ஏலாதி
கைந்நிலை

## உயிர்களுள் வேறுபாடு

எல்லா உயிரும் சமம். ஆனால் அவை அறிந்து செயற்படும் தன்மை குறித்து உயிர்களுள் வேறுபாடு தோன்றுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பியம் மரபியலில் உயிர்களைப் பின்வருமாறு வகைப்படுத்துகிறது.

| | |
|---|---|
| ஓரறிவு உயிர் | - உடம்பினால் அறிவது |
| ஈரறிவு உயிர் | - தமது உடம்பினாலும் வாயினாலும் அறிவது |
| மூவறிவு உயிர் | -உடம்பினாலும் வாயினாலும் மூக்கினாலும் அறிவது |
| நாலறிவு உயிர் | -உடம்பினாலும் வாயினாலும் மூக்கினாலும் கண்ணினாலும் அறிவது |
| ஐந்தறிவு உயிர் | -உடம்பினாலும் வாயினாலும் மூக்கினாலும் கண்ணினாலும் செவியினாலும் அறிவது |
| ஆறறிவு உயிர் | -உடம்பினாலும் வாயினாலும் கண்ணினாலும் மூக்கினாலும் செவியினாலும் மனத்தினாலும் அறிவது |

| | |
|---|---|
| ஓரறிவு | - புல் மரம் |
| ஈரறிவு | - சங்கு நத்தை சிப்பி |
| மூவறிவு | - எறும்பு அட்டை |
| நாலறிவு | - நண்டு தும்பி |
| ஐந்தறிவு | - பறவைகளும் விலங்குகளும் பாம்பு மீன் |
| ஆறறிவு | - மனிதர்கள் |

## இளமைப் பெயர்கள்

தொல்காப்பியர் மரபியலில் மிருகங்கள் பறவைகள் மனிதர்களின் இளமைக்காலத்தினை பின்வருமாறு பெயரிடுகின்றார்.
பார்ப்பு பறழ் குட்டி குருளை கன்று பிள்ளை மகவு மறி குழவி ஆகியன.

| | |
|---|---|
| பார்ப்பு / பிள்ளை | - பறப்பன ஊர்வன |
| குட்டி / பறழ் | - எலி அணில் மூங்கா என்னும் கீரிப்பிள்ளை குரங்கு |
| குருளை | - நாய் பன்றி புலி முயல் (நரி சில இடங்களில்) |
| மறி | - ஆடு குதிரை புள்ளிமான் |
| கன்று | - யானை குதிரை கழுதை கவரி என்னும் மான் கராம் என்னும் கரடி ஒட்டகம் |
| குழவி | - யானை எருமை மரை குரங்கு |
| மகவு | - மனிதர் (குழந்தை) |

பிள்ளை / குழவி / கன்று / போத்து - ஓரறிவு உயிர்களின் இளமைப் பெயர்கள். ஆயினும் நெல்லுக்கும் புல்லுக்கும் அவை ஓரறிவு உயர்களாக கருதப்பட்ட பொழுதிலும் இவ்வாறாக அழைக்கப்படாது நாற்று என்றே அழைக்கப்படுவது வழமை.

## அ்றிணை ஆண்பாற் சொற்கள்

ஏறு ஏற்றை ஒருத்தல் களிறு சே சேவல் இரலை கலை மோத்தை தகர் உதள் அப்பர் போத்து கண்டி கடுவன் ஆகியன.

| | |
|---|---|
| களிறு | - யானை ஆண்பன்றி |
| ஒருத்தல் | - புலி மரை பன்றி வார்கோட்டு யானை எருமை |
| ஏறு | - பன்றி கவரி கடல்வாழ் சுறா |
| போத்து | - மயில் |
| சேவல் | - அழகிய பெரிய தூவிகளை உடைய மயில் அல்லாத மற்றைய பறவைகளின் ஆணினம் |
| ஏற்றை | - ஆற்றல் உடைய மிருகங்களின் ஆணினம் |
| இரலை / கலை | - மான் |

## அஃறிணை பெண்பாற் சொற்கள்

பேடை பெடை பெட்டை மூடு நாகு கடமை அளகு மந்தி பாட்டி பிணை பிணவு பிடி ஆகியன.

| | |
|---|---|
| பிடி | - யானை |
| பெட்டை | - ஒட்டகம் குதிரை கழுதை மரை |
| பேடை | - பெட்டை என்கிற கருத்தில் பறவைகளுடைய பெண்ணைக் குறிக்கின்றது |
| அளகு | - கோழி கூகை மயில் |
| தத்தை | - சிவந்த வாயை உடைய கிளி |
| பிணை | - மான் |
| ஆ | - எருமை மரை |
| ஆடு | - மூடு கடமை |
| மந்தி | - குரங்கு |
| பாட்டி | - பன்றி நாய் நரி |
| பிணவு / பிணவல் | - பன்றி நாய் |

## விலங்குகளின் ஒலிக்குரிய பெயர்கள்

| | |
|---|---|
| யானை | பிளிறும் |
| நரி | ஊளையிடும் |
| சிங்கம் | முழங்கும் |
| குதிரை | கனைக்கும் |
| பூனை | சீறும் |
| கரடி | உறுமும் |
| கழுதை | கத்தும் |
| நாய் | குரைக்கும் |

## பறவைகளின் ஒலிக்குரிய பெயர்கள்

| | |
|---|---|
| கோழி | கொக்கரிக்கும் |
| சேவல் | கூவும் |
| குருவி | கீச்சிடும் |
| கிளி | பேசும் |
| குயில் | கூவும் |
| மயில் | அகவும் |
| ஆந்தை | அலறும் |
| காகம் | கரையும் |

---

## ஒலி வேறுபாடுகள்

ர ற ல ள ழ ன ண ந என்ற எழுத்தொலிகளைத் தெளிவாக உச்சரிப்பதன் மூலமே தமிழில் உள்ள சொற்களுக்கான பொருளை நன்கு உணர முடியும். எழுத்தொலி மாறினால் பொருள் மாறுபட்டுக் கருத்தையும் மாற்றி விடும்.

### ரகர - றகரச் சொற்கள்

**ரகரம் உச்சரிக்கும் முறை** - நாக்கின் நுனி மேல்வாயின் முன்புறத்தைத் தொட ர ஒலி பிறக்கும்.

**றகரம் உச்சரிக்கும் முறை** - மேல்வாயின் நடுப்பாகத்தை நாக்கை வளைத்துத் தொட்டு உச்சரிக்க ற ஒலி பிறக்கும்.

அரி : சிங்கம் — lion
அறி : தெரிந்துகொள் — get to know

இரை : உணவு — food
இறை : கடவுள் / இறைவன் — God

கரி : யானை — elephant
கறி : உபஉணவு — curry

குரை : நாய் குரைத்தல் — bark
குறை : குற்றம் — fault

தரி : உடுத்தல் / அணிதல் — wear
தறி : வெட்டுதல் — cut

நிரை : வரிசை — que
நிறை : பாரம் / நிரப்பு — weight / fill

பரி : குதிரை — horse
பறி : பிடுங்குதல் — pluck

மரை : காட்டு விலங்கு(மான் வகை) — Wild animal
மறை : வேதம் / இரகசியம் — religion / secret

வரை : மலை / கீறு — mountain/draw
வறை : துவட்டற் கறி — A variety of chutney

## லகர - ளகரச் சொற்கள்

**லகரம் உச்சரிக்கும் முறை** - முன்புற நாக்குத் தடித்து மேல்வாய்ப் பல்லின் அடியைப் பொருந்த ல ஓசை பிறக்கும்.

**ளகரம் உச்சரிக்கும் முறை** - முன்புற நாக்குத் தடித்து மேல்வாயின் முன்புறம் தடவ ள ஓசை பிறக்கும்.

அலை : அலை இயக்கம் / அலைதல் — waves / roaming
அளை : பாம்புப்புற்று முயலின் இருப்பிடம் — burro / snake hole

இலை : மரத்தின் இலை — leaves
இளை : மெலிதல் — slim

உலை : வெப்ப உலை — Furnace
உளை : கால் உளைதல் — Feet ache

ஒலி : சத்தம் — sound
ஒளி : வெளிச்சம் — light

கலை : ஆண்மான் — deer
களை : களைப்புல் — weeds

கிலி : பயம் — afraid
கிளி : பச்சைக்கிளி பஞ்சவர்ணக்கிளி — parrot

வலி : நோ — pain
வளி : காற்று — air

வலை : மீன் பிடி வலை — net
வளை : காப்பு — bangle

விலா : ஒரு உறுப்பு — hip
விளா : விளா மரம் — wood apple

## ழகர - ளகரச் சொற்கள்

**ழகரம் உச்சரிக்கும் முறை** - மேல்வாயை நாக்கின் நுனி தடவ ழ ஒலி பிறக்கும்.

| | |
|---|---|
| அழி : அழித்தல் | delete |
| அளி : வண்டு | beetle |
| ஆழி : கடல் | sea |
| ஆளி : சிங்கம் | lion |
| இழை : ஆபரணம் | jewellery |
| இளை : களைப்பு | tired |
| ஒழி : அழித்தல் | destory |
| ஒளி : வெளிச்சம் / மறைத்து வைத்தல் | light / hide |
| கழி : நீக்குதல் | subtract |
| களி : மகிழ்ச்சி | happy |
| தழை : இலை | leaves |
| தளை : பிணைத்தல் கட்டுதல் | bind |
| வழி : பாதை | route |
| வளி : காற்று | wind |
| விழி : கண் | eye |
| விளி : அழைத்தல் | call |
| வாழி : வாழ்த்துதல் | greetings |
| வாளி : அம்பு | arrow |
| வாழை : வாழை மரம் | banana tree |
| வாளை : வாளை மீன் | fish |

## ணகர - னகரச் சொற்கள்

**ணகரம் உச்சரிக்கும் முறை** - நுனி நாக்கு மேல்வாயின் நடுவில் தொட ண ஒலி பிறக்கும்.
னகரம் உச்சரிக்கும் முறை - மேல் வாயை நாக்கின் நுனி மிகப் பொருந்த ன ஒலி பிறக்கும்.

| | |
|---|---|
| ஆணி : இரும்பாணி | nail |
| ஆனி : ஆனிமாதம் | June |
| ஆணை : கட்டளை | order |
| ஆனை : யானை | elephant |
| ஊண் : உணவு | food |
| ஊன் : இறைச்சி | meet |
| கணம் : கூட்டம் | crowed |
| கனம் : பாரம் | heavy |
| கண்ணன் : கடவுள் | Lord Krishna |
| கன்னன் : குந்தி மகன் | Son of kunthi devi |
| பணி : கடமை | duty |
| பனி : வெண்பனி | snow |
| பாணம் : அம்பு | arrow |
| பானம் : பருகுவன | drinks |
| மணம் : நாற்றம் | scent |
| மனம் : உள்ளம் | mind |
| வண்ணம் : நிறம் | colour |
| வன்னம் : அழகு | beauty |
| வாணம் : மத்தாப்பு | fireworks |
| வானம் : ஆகாயம் | sky |

## நகரச் சொற்கள்

**நகரம் உச்சரிக்கும் முறை** - நுனி நாக்கு மேல்வாய்ப் பல்லின் அடியில் பொருந்துவதால் ந ஒலி பிறக்கும்.

நடு
நரி
நலம்
நகம்
நகை
நன்றி
நண்டு
நகரம்
நடிப்பு
நத்தை
நல்லது
நங்கூரம்
நள்ளிரவு
நம்பிக்கை

---------------

## துணை நூல்கள்

இலக்கணச் சுருக்கம் - ஆறுமுகநாவலர்
செந்தமிழ் இலக்கண விளக்கம் - செய்யுளியலும் அணியியலும்
தமிழ் எழுத்துகள் - ம. கங்காதரம்
தமிழ் ஆண்டு 5 6 7 8 9 10 - தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

தமிழ்மொழி இலக்கண இயல்புகள் - அ. சண்முகதாஸ்
தமிழ் எழுத்துப்பயிற்சி - றீற்றா பற்றிமாகரன்
தமிழிற் தரப்புக் குறிகளின் பயன்பாடு - சி. சிவசேகரம்
தமிழ் வரலாற்று இலக்கணம - ஆ. வேலுப்பிள்ளை
தொல்காப்பியம் எழுத்திகாரம் - இளம்பூரணனார்
தொல்காப்பியம் சொல்லதிகாரம் - சேனாவரையனார்
தொல்காப்பியம் பொருளதிகாரம் - இளம்பூரணனார்
வீரசோழியம் - புத்தமித்திரனார்
நற்றமிழ் இலக்கணம் - சொ. பரமசிவம்
நன்னூல் காண்டிகை உரை - ஆறுமுகநாவலர்


தமிழ் மொழி
இலக்கண
இயல்புகள்
நன்னூல்
நற்றமிழ்
இலக்கணம்